# கலைக்கேசரி

CULTURE • HERITAGE • TRADITION • EVENTS • FASHION • INTERVIEWS • ENTERTAINMENT

VOLUME : 05 ISSUE : 04 Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 144 / News / 2014




நுணைசையம்பதியில்
காவடிக்கந்தன்

And another year dawns
-its 'Jaya' this time


www.kalaikesari.com / April 2014

ISSN 2012-6824


| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 100.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 125.00 | AUSTRALIA AUS$ 10.00 | UK.............GB£ 6.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 7.00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்: Contents:








06
திருப்பாடுகளின் நாடகம்




26
யாழ்ப்பாணத்துப் பண்டிதப் பாரம்பரியம்




36
பண்டைய மரபில் வடக்கிருத்தல்




76
"Ambakke Devalaya" a wooden wonder


## அட்டைப்பட விளக்கம்:

மருத்துநீர் வைத்து ஸ்நானம் செய்தல் சித்திரைப் புத்தாண்டில் முக்கிய அம்சமாகும். நோய் தீர்க்கும் பல்வேறு மூலிகைகளை கொண்ட இம்மருத்துநீர் ஆலயத்தில் விசேடமாக தயாரிக்கப்படுகிறது.





**PUBLISHER**
Express Newspapers (Cey) (Pvt) Ltd.
185, Grandpass Road, Colombo 14,
Sri Lanka.
T.P. +94 11 7209830
kalaikesari@expressnewspapers.lk
www.kalaikesari.com

**EDITOR**
Annalaksmy Rajadurai
luxmi.rajadurai@yahoo.com

**SUB EDITOR**
Bastiampillai Johnsan
johnsan50@gmail.com

**CONTRIBUTORS**
Prof. P. Pusparatnam
Prof. Saba Jeyarasa
Prof. S. Sivalingaraja
Dr. Viviyan Sathyaseelan
M. Kanapathipillai
J. Johnson Rajkumar
Mrs. Vasantha Vaithyanathan
Mohanapriyan Thavaraja
R. Achuthapagan
Mrs. Pathma Somakanthan
Pon. Vallinayagam
Payas Anandaraja
Mrs. Sivanandini Duraisamy
V. Varathasuntharam
Mrs. Madhuri Peiris

**PHOTOS**
J. H. Mirunalan
L. Thev Athiran
Joy Jeyakumar

**LAYOUT**
M. Srithara Kumar
S. A. Eswaran
K. Kulendran
S. Udesh

**ICT**
S. T. Thayalan

**ADVERTISING & SUBSCRIPTIONS**
S. Krishanthi
krishanthi2818@gamil.com

**CIRCULATION**
011 - 7322781

**PRODUCTION**
L. A. D. Joseph

**ISSN 2012 – 6824**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பக்கம்

Editor's Note



வணக்கம் கலைக்கேசரி வாசகர்களே!

To our esteemed readers,

**April, 2014**

*கலைக்கேசரி வாசகர்களுக்கு வணக்கம்!*

*அனைவருக்கும் இனிய சித்திரைப்புத்தாண்டு வாழ்த்துக்கள்! பிறக்கும் ஜய வருஷம் நம் வாசகர்களுக்கு மேலும் வெற்றிகளை நல்கட்டும்!*

*இயற்கையைத் தெய்வமாகப் போற்றிப் பேணி வாழ்ந்த எமது முதாதையரின் மதிநுட்பமான காலக்கணிப்பீடு சித்திரைப் புத்தாண்டாக மலர்ந்து அரிய கொண்டாட்டங்கள் மூலமாக குடும்பம் மற்றும் சமூக உறவுகளைப் பாதுகாக்க உதவி வருகின்றது. இதுபோன்று நமது ஏனைய பாரம்பரிய கொண்டாட்டங்களும் மனித வாழ்வின் ஆணிவேர்களான அன்புடைமையையும் தர்மத்தையும் பண்பாடுகளையும் வலியுறுத்துபவைகளாக அமைந்து இனிமை சேர்க்கின்றன.*

*உண்மையில் திருநாட்கள் கொண்டாட்டங்கள், விழாக்கள் இல்லாத வாழ்க்கையை நாம் நினைத்துக் கூடப்பார்க்க முடியாது! 'நமக்கும் மேலே ஒருவன்' என்ற உயர் இறை தத்துவத்தை மனித குலம் என்றென்றும் போற்றி நிற்கவும் உழைத்துக் களைத்து வாழும் அன்றாட வாழ்க்கை ஓட்டத்தின் சலிப்பைப் போக்கி புதிய உற்சாகம் பெறவும் விழாக்கள், கொண்டாட்டங்கள் ஆகியன அருமருந்தாக அமைகின்றன. இதனாலே தான் உலக மக்கள் அனைவருமே தத்தம் நாட்டின் கால தேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப வருடந்தோறும் விழாக்களையும் கொண்டாட்டங்களையும் நடத்தி புத்துணர்வு பெற்று மகிழ்கின்றார்கள்.*

*எனவே புத்தாண்டுக் கொண்டாட்டம் உட்பட நமது திருநாட்களை குடும்பத்தவர் நண்பர்களுடன் அன்பும் அடக்கமுமாய்க் கொண்டாடி மகிழ்வோம்! புதிய மலர்ச்சி பெறுவோம்!*

*மீண்டும் சந்திப்போம் வணக்கம்!*

அன்புடன்
அன்னலட்சுமி இராஜதுரை

Happy New Year to our readers! May this New Year called 'Jeya Varudam', meaning a year of victory, bring happiness and prosperity!

Ancient Hindus who have nurtured and preserved nature with adoration, have ways of accurately determining the New Year which dawns with the entry of Sun from Pisces to Aries in the zodiac.

New Year that bloom, open avenues and create opportunities for furthering family ties and social bonds. New Year celebrations offer the opportunity to get together and forget differences. Likewise, other celebrations too, by affirming love, affection and virtue as taproots, add delight to life.

Truthfully (or Really), one cannot imagine a life sans festivals and celebrations. These serve as effective remedy for those who shed their sweat (or who toil) throughout the day and seek a form of relaxation and relief from stress. Festival and celebrations also play a key role in upholding the philosophy that there is one above us, unseen, who is a guiding force and one who shapes our lives.

This is the reason why people the world over, celebrate festivals year after year in keeping with conditioning factors such as time, space and environment.

Let us therefore, celebrate and enjoy the New Year and other festivals, with family and friends, in humility.

Till we meet again,

Annalakshmy Rajadurai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அவலச் சுவை தரும் அற்புதக்கலை திருப்பாடுகளின் நாடகம்

-யோ.யோன்சன் ராஜ்குமார்



'நாடகத்தின்கருவறைசடங்கு என்பது' ஏற்றுக்கொள்ளப்பட்ட உலகளாவிய சிந்தனையாகும். 'நாடகம் சடங்கில் இருந்து தோன்றியது' என்ற கருத்தினை உறுதி செய்யும் வகையில் சடங்குகளில் நாடகப் பண்புகளும் நாடகமாக நிகழும் சடங்குகளும் எல்லாச் சமயங்களிலும் காணப்படுகின்றன. அந்த வகையில் கத்தோலிக்கர்கள் மத்தியில் காணப்படுகின்ற சடங்காகவும் நாடகமாகவும் நிகழ்த்தப்படுகின்ற பெருங்காட்சிடப்பண்பு மிக்க ஆற்றுகை வடிவமே திருப்பாடுகளின் நாடகமாகும். (Passion play)

எல்லாச்சமயங்களிலும் பண்பாடுகளிலும் மனிதவியல் கடந்த நம்பிக்கைகளின் அடியான தெய்வ நம்பிக்கைகள் உருவாகி வளர்ச்சி பெறுங்காலங்களிலேயே அவற்றுக்கான கிரிகைகளும் சடங்குகளும் படிப்படியாக உருவாகின. இச்சடங்கின் வேரில் இருந்து குறித்த தெய்வம் பற்றி ஐதீகம், வரலாறு, படிமங்கள் என நம்பிக்கையின் அடியான கூறுகள் உருவாகி அவற்றில் இருந்தே சிற்பகலை, ஓவியக்கலை, கட்டடக்கலை, இசைக்கலை, நாடகக்கலை, நடனக்கலை, இலக்கியம் என அனைத்தும் உருவாகியிருக்க வேண்டும் என்பதே ஆய்வாளர்களின் கருத்தாகும். இந்தப் பின்புலத்தில் கிறிஸ்தவ மதத்தின் தோற்றக்காலத்தில் இருந்தே 'தவக்காலம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொட்டாஞ்சேனையில் 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற 'காவிய நாயகன்' நாடகத்தில் இடம்பெற்ற காட்சிகள்

என அழைக்கப்படுகின்ற இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பினை தியானிக்கின்ற காலம் முக்கியத்துவமுடைய காலமாகவும் வழிபாடுகள் அனைத்தும் மையங்கொள்ளுகின்ற உச்ச காலப்பகுதியாகவும் கொள்ளப்பட்டு வருகின்றது. மனித பாவங்களுக்காக மனம் வருந்துதல், தவம் செய்தல், மனம் திரும்புதல் என்ற உயரியதான விளைவுகளுக்கும் உள்ளத் தெளிவுகளுக்கும் இக்காலம் வழிகாட்டுவதோடு மனிதர்கள் துயரங்களைத்தாங்கி உண்மைக்குச் சான்று பகர்ந்து வாழ வேண்டும் என்ற மன உறுதியையும் இக்காலத்திலேயே கிறிஸ்தவர்கள் பெற்றுக் கொள்கின்றனர்.

இவ்விளைவுகளுக்கு இட்டுச் செல்பவையாக இக்காலத்திற்கென உருவாக்கப்பட்ட பல்வேறு பாரம்பரியங்கள் உதவுகின்றன. சிலுவைப்பாதை, திருமணித்தியாலயம், திருப்பாடல்கள் ஓதுதல், பசாம்பாடுதல், ஒறுத்தல், தவமுயற்சிகள் என நீளும் பாரம்பரியங்களில் சடங்காகவும் அவலம் தொனிக்கும் நாடக வடிவமாகவும் நிகழ்த்தப்பட்டு வருவதே திருப்பாடுகளின் நாடகம் (திருப்பாடுகளின் காட்சி) (Passion play) ஆகும்.

**ஐரோப்பாவில் திருப்பாடுகளின் நாடகம்**

ஐரோப்பாவில் மத்திய காலப்பகுதியில் கத்தோலிக்க திருச்சபையின் திருப்பலிச்சடங்கில் இருந்தே புதிய நாடக நீற்றுக்கிளம்பியது. தேவலாயத்தினை மையமாகக் கொண்டு உருவாகிய Drops அல்லது குவாம் குவாறற்றீஸ் என்னும் விவிலியத்திலுள்ள கிறிஸ்துவின் உயிர்ப்பினை சித்திரிக்கும் நாடக பாங்குடைய செய்து காட்டுகை நிகழ்ச்சிகளில் இருந்தே மறைஞான நாடகங்கள் (Mystery plays) அற்புத நாடகங்கள் (Miracle plays) ஒழுக்கப்பண்பு நாடகங்கள் (Morality plays), என்ற மூவகை நாடக மரபுகள் தோன்றின.

இவற்றில் மறைஞான நாடகங்களின் மையமாக இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்ற வரலாறு முதன்மை பெற்றது. இதுவே பின்பு தவக்காலத்தில் தனிப்பாரம்பரியமாக அவலத்தினை முதன்மைப்படுத்திய நாடக நிகழ்ச்சியாக உருவம் பெற்றது. 13 ஆம் நூற்றாண்டில் முதலில் லத்தீன் மொழியில் ஆரம்பமாகிய இப்பாரம்பரியம் பின்னர் ஜேர்மன், ஸ்பனிஸ், பிரஞ்ச் எனப் படிப்படியாக வளரத் தொடங்கியது.

இதன் வளர்ச்சிக் கட்டத்தில் 'வியன்னா பாடுகளின் நாடகம்' (Vienna Passion) 'சென் கோல் பாடுகளின் நாடகம்' (St. Gall Passion) 'பிராங்போட் பாடுகளின் நாடகம்' (Frankfurt Passion) 'மாஸ்ரிக் பாடுகளின் நாடகம்' (Maskricht Passion) என ஜேர்மன் மொழியை அண்டிய நாடகக் குழுக்களோடு தொடர்புடைய பாடுகளின் நாடகப் பாரம்பரியங்கள் இம்மரபின் வளர்ச்சியில் பெரும் செல்வாக்கினைச் செலுத்தின.

கத்தோலிக்க மதம் பரவிய நாடுகள் அனைத்திலும் இப்பாரம்பரியம் வளர்ச்சி பெற்றதோடு அந்தந்த நாடுகளின் பண்பாடு, கலாசாரம், நாடகப் பாரம்பரியங்களுக்கு ஏற்பவும் இதன் வடிவமும் ஆற்றுகை முறைகளும் மாற்றமடைந்தன. எனினும் இத்திருப்பாடுகளின் நாடகப் பாரம்பரியத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1900 ஆண்டுகளில் ஒபரமாகௌ பாடுகளின் நாடகம்



பேசாலை உடக்குபாஸ்

ஒபரமாகௌ பாடுகளின் நாடகம்



உலக அளவில் மகுடமிட்டு நிற்கும் பிரதேசமாக யேர்மனியில் உள்ள ஒபரமாகௌ என்னும் கிராமம் காணப்படுகின்றது. கொடிய கொள்ளை நோயினால் பீடிக்கப்பட்டு அழிவுறும் காலத்தில் செய்யப்பட்ட நேர்த்திக் கடனின் நிறைவேற்றுகையாக 1634 ஆம் ஆண்டில் இருந்து ஒவ்வொரு பத்து வருடங்களுக்கு ஒரு முறை முழுக்கிராமமுமே திரண்டு நிகழ்த்தும் உலகப்புகழ் பெற்ற திருப்பாடுகளின் நாடக மரபாக அது வளர்ந்துள்ளது. இறுதியாக 2010 ஆம் ஆண்டு அங்கு மிகப்பிரமாண்டமான முறையில் இந்நாடகம் மேடை ஏற்றப்பட்டது. 2000 கலைஞர்கள் அந்நாடகத்தில் இணைந்து செயற்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**இலங்கையின் பாடுகளின் நாடகம்**

இலங்கையில் பாடுகளின் நாடக மரபானது 16ஆம் நூற்றாண்டில் இருந்து ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கருத்துக்கள் நிலவினாலும் அவற்றுக்கான நிறுதிட்டமான ஆதாரங்கள் இல்லை. ஒல்லாந்தர் காலத்தில் யாக்கோமே கொண்சால்வேஸ் இலங்கையில் பணி செய்த காலத்தில் (1676 - 1742) இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





'காவிய நாயகன்' நாடகத்தின் காட்சிகள்

ஆரம்பிக்கப்பட்டமைக்கு பல்வேறு ஆதாரங்கள் உள்ளன. ஆனால் ஐரோப்பாவிலே மனிதர்கள் நடிக்கின்ற நாடகப்பாரம்பரியமாக உருவாகியது போல இங்கு உருவாகவில்லை.

யாக்கோமே கொன்சால் வேஸ் அடிகள் சிங்களத்திலும் தமிழிலும் இயற்றிய 'பசாம் பாடல்கள்' என்னும் வியாகுல பிரசங்கம் இயேசு வின் பாடுகளின் துயரத்தினை உரத்த தொனியில் வியாகுலம் மேலோங்கும் வகையில் தாளப் பிரமாணமின்றி ஓதும் ஒரு பாடல் மரபாக உருவாக்கம் பெற்றது. இக்காலத்தில் 'பாசோ' என்னும் உறைநிலை சிற்பங்களின் ஊடாக திருப்பாடுகளைக் காட்சியாக்கும் மரபில் இருந்து 'உடக்குப்பாஸ்' என்னும் அசையும் மரச் சிற்பங்களின் அளிக்கை உருவாகியது. பொம்மலாட்ட கலை வடிவமாக அது இருந்த போதும் போர் வீரர்கள், இயேசுவின் சீடர்கள் போன்ற பாத்திரங்களை மனிதர்கள் தாங்கி நடித்தனர். இக்காட்சிக்கென நீண்ட அரங்குகள் பயன்படுத்தப்பட்ட அதேவேளை, இயேசு சிலுவை சுமக்கின்ற காட்சிகள் கோவிலின் வெளி வீதிகளுக்கு ஊர்வலமாக நகரும் வகையில் நீட்சி பெற்றன.

இவை குறிப்பிட்ட கிராமத்தினையே ஒன்றிணைக்கின்ற சமூக நடவடிக்கையாகவும் கத்தோலிக்க சமுதாயத்தில் காணப்பட்டது. இந்தப் பாஸ்கு நிகழ்ச்சியானது அச்சம், கழிவிரக்கம், துக்கம் போன்ற உணர்வுப் பிரவாகங்களை ஏற்படுத்தி பாஸ்கா காலத்தில் மனவருத்தத்தினை ஏற்படுத்தும் காட்சிகளாக மாறின.

கிரேக்க அவலச்சுவை நாடகங்கள் தோற்றுவித்த 'கதாசிஸ்' என்னும் உணர்ச்சி வெளிப்பாட்டினை இப்பாடுகளின் காட்சியும் தோற்றுவித்து பக்தி நிலைக்கு உதவியது. அவலம் சுவைக்கும் இவ்வடிவத்தில் சடங்குப்பண்பும் நாடகப்பண்பும் இரண்டறக் கலந்து காணப்பட்டமையாலேயே அத்தகைய விளைவு சாத்தியமாகியது. இதைப்பற்றிக் கூறுகின்ற சுவாமி ஞானப்பிரகாசர் "ஒரு திருப்பாடுகளின் காட்சி நூறு பிரசங்கங்களுக்குச் சமன்" என்கின்றார்.

இவ்வாறு பொம்மைகளைக் கொண்டு நிகழ்த்துகின்ற 'பாஸ்க்' மரபு மாத்தறை, பெலவத்தை, சிலாபம், கண்டி, நீர்கொழும்பு, நஞ்சுண்டான் கரை போன்ற பல இடங்களிலும் இப்பாரம்பரியம் நீண்ட காலமாக வழக்கில் இருந்தது. வட பகுதியில் மன்னார், யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலும் நீண்ட காலமாக இப்பாரம்பரியம் பின்பற்றப்பட்டு வருகின்றது. மன்னாரிலுள்ள பேசாலைக் கிராமம் தனித்துவமான அளிக்கைப் பாரம்பரியம் ஒன்றினை கொண்டுள்ளது. இதற்கென ஒரு நூற்றாண்டுக்கு முன்பே அமைக்கப்பட்ட கல்லாலான பாஸ் மண்டபம் அங்கு உள்ளது. தொடர்ச்சியான அளிக்கைப் பாரம்பரியமும் உள்ளது.

#### மனிதர்கள் நடிக்கும் பாஸ்கு நாடகம்

அசையும் பொம்மைகளைக் கொண்டு நிகழ்த்தப்பட்ட இப்பாரம்பரியம் பின்னர் முழுவதும் மனிதர்கள் நடிக்கின்ற நாடக நிகழ்ச்சியாக ஐரோப்பாவில் நடைபெற்றது போல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கும் நிகழ்த்தப்படத் தொடங்கியது. 'ஒப்பரமாகௌ' நாடக பிரதிகளை அடியொற்றியே இங்கு இம்மரபு வேரூன்றியது. ஆரம்பத்தில் ஆங்கிலத்திலும் பின்னர் சுதேச மொழிகளிலும் இந்நாடகம் மொழி பெயர்க்கப்பட்டு மேடையேற்றப்பட்டது. அருட்திரு மரிசலின் ஜெயகொடி அடிகள் சிங்களத்தில் எழுதிய பாடுகளின் நாடகங்கள் சிங்கள மக்கள் மத்தியில் அதிக வரவேற்பினைப் பெற்றன.

வட பகுதியில் 1952 ஆம் ஆண்டு புனித பத்திரிசியார் கல்லூரியில் முதன் முதலாக மனிதர்கள் நடிக்கின்ற பாஸ்கு நாடகம் ஆங்கிலத்தில் நிகழ்த்தப்பட்டது. அருட்திரு லோங் அடிகள் ஒப்பரமாகௌவில் இருந்து கொண்டு வந்த நாடக பிரதியை ஆசிரியர்களைக் கொண்டு நிகழ்த்துவித்தார். பின்பு 1955 இல் அருட்திரு மரியாம்பிள்ளை அடிகள் அதனை தமிழிலே மொழி பெயர்த்து மேடையேற்றினார். அதனைத் தொடர்ந்து படிப்படியாக பல இடங்களிலும் இம்மரபு நீட்சி பெற்றது.

**திருமறைக் கலாமன்றமும் திருப்பாடுகளின் நாடகமும்**

குருத்துவக் கலைஞனாகிய அருட் கலாநிதி. நீ. மரியசேவியர் அடிகள் தமிழில் ஆழ்ந்த புலமையும் நாடகத்துறையில் ஆற்றல் பெற்றவராகவும் விளங்குகிறார். இவர் 1963 ஆம் ஆண்டு முதன் முதலாக மன்னாரில் மனிதர்கள் நடிக்கின்ற பாடுகளின் நாடகத்தினை மேடை ஏற்றினார். அதனைத் தொடர்ந்து 'திருமறைக் கலாமன்றம்' என்னும் நிறுவனத்தினை தோற்றுவித்து அதற்கூடாக உரும்பிராய், நாரந்தனை, அச்சுவேலி, குருநகர் என வருடந்தோறும் இதனை மேடையேற்றத் தொடங்கினார். 1971ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கோட்டையினைப் பின்னணியாகக் கொண்டு 'அன்பில் மலர்ந்த அமர காவியம்' என்னும் பெயரில் பிரமாண்டமாக பாடுகளின் நாடகத்தினை மேடையேற்றிப் பலரது பாராட்டுக்களையும் பெற்றார். 1972 இல் இங்கிருந்து கலைஞர்களை தமிழ் நாட்டுக்கு அழைத்துச் சென்று திருச்சி 'தேவர்' மண்டபத்திலும் 'பலிக்களம்' என்னும் பெயரில் இந்நாடகத்தினை மேடையேற்றினார். தொடர்ந்து ஐம்பது ஆண்டுகளாக இப்பணியில் ஈடுபட்டு வருகின்றார்.

திருப்பாடுகளின் நாடகங்களாக மொழி பெயர்ப்பு செய்யப்பட்டவையே ஆரம்ப காலங்களில் பயன்படுத்தப்பட்டன. ஆனால் மரிய சேவியர் அடிகள் தமிழ் மயப்படுத்திய புதிய நாடகப்பிரதிகள் பலவற்றையும் எழுதி இம்மரபுக்கே மண் மயப்பட்ட புதிய பாரம்பரியத்தினை தோற்றுவித்தார். 'அன்பில் மலர்ந்த அமர காவியம்', 'கல்வாரியில் கடவுள்', 'பலிக்களம்', 'மலையில் விழுந்த துளிகள்', 'கடவுள் வடித்த கண்ணீர்', 'களங்கம்' என இருபத்தைந்துக்கும் அதிகமான 'திருப்பாடுகளின் நாடகங்களை' வெவ்வேறு பாடு பொருள்களில் எழுதி மேடையேற்றினார். 'சிலுவை உலா', 'கல்வாரிப் பரணி', 'கல்வாரிக் கலம்பகம்' போன்ற தமிழ் சிற்றிலக்கிய வடிவிலும் பாடுகளின் நாடகங்களை ஆக்கினார்.

திருப்பாடுகளின் நாடக மரபினை தமிழ் மயப்படுத்தி திருமறைக்கலாமன்றத்தினூடாக







'காவிய நாயகன்' நாடகத்தின் காட்சிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'காவிய நாயகன்' நாடகத்தில் ஒரு காட்சி

வருடந்தோறும் நிகழ்த்துவிக்கும் ஒரு பாரம்பரிய நீட்சியையும் இம் மரபுக்குரிய கலைப் பெறுமானங்களையும் தோற்றுவித்திருக்கும் மரிய சேவியர் அடிகள் இம்மரபின் மிக முக்கியமான மூலவர் ஆவார். நாடகப் பிரதிகளை புதிதாக எழுதியது மட்டுமன்றி அவற்றுக்கான ஆற்றுகைக் கலாசாரம் ஒன்றினையும் செழுமையானதாக வளர்த்தெடுத்திருக்கின்றார்.

நடிப்பு, வேட உடை, ஒப்பனை, காட்சி விதானிப்பு, ஒளி, ஒலி, இசை என ஒவ்வொரு நுட்பங்களை உருவாக்கி யேர்மனிய ஒப்பரமாகௌவுக்கு நிகரான அளிக்கை வன்மை மிக்க பாரம்பரியமாக இதனை மாற்றியுள்ளார். தனியே பாடுகள் மரணத்தின் கனதியை மட்டும் வலியுறுத்தாது சமகால வாழ்வியலுடன் தொடர்புபடுத்தியும் இயேசுவின் பாடுகள் மரணத்திற்கு பல்வேறு கருத்தியல் கோணங்களை தோற்றுவித்தும் இம்மரபுக்கு இற்றைப் பாடுகளுடன் கூடிய பெறுமானத்தினை வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். இந்த வருடமும் (2014) ஏப்ரல் 10,11,12,13 ஆம் திகதிகளில் அவரால் இறுதியாக எழுதப்பட்ட 'வேள்வித்திருமகன்' என்ற பாடுகளின் நாடகம், யாழ்ப்பாணத்தில் நான்கு நாட்களும் நடைபெறவுள்ளன.கடந்த வருடம் அவர் எழுதிய 'காவிய நாயகன்' நாடகம் யாழ்ப்பாணத்திலும் கொழும்பு, கொட்டாஞ்சேனையிலும் மேடையேற்றப்பட்டு பெரும் வரவேற்பினைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி, திருமறைக்கலாமன்றம் இயங்குகின்ற பிரதேசங்களிலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் இவற்றை மேடையேற்றும் பாரம்பரியம் கண்டம் கடந்தும் நடைபெறுகின்றது. இவ்வருடம் 'பலிக்களம்' என்னும் மரிய சேவியர் அடிகளின் நாடக பாடம், இலண்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளிலும் மேடையேற்றப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு மரிய சேவியர் அடிகளினால் உருவாக்கப்பட்ட பாரம்பரியம் அவர்களது மாணவர்களால் தொடரப்பட்டு வருவதனூடாக இப்பாரம்பரியம் நீட்சி பெற்று வருகின்றது.இவ்வாறே சிங்கள மக்கள் மத்தியிலும் பல்வேறு இடங்களிலும் இந்நாடகப் பராம்பரியம் தொடரப்படுகின்றது. எனினும் திருமறைக் கலாமன்றம் இம்மரபில் தோற்றுவித்திருக்கும் நேர்த்தியும் தொடர்ச்சியும் அங்கு வளர்த்தெடுக்கப் படவில்லை என்பது நோக்கத்தக்கது.

இலங்கையில் இந்து, பௌத்தம், இஸ்லாம் என சமய நிலையில் வளர்த்தெடுக்கப்பட்டுள்ள பல்வேறு பாரம்பரியங்களில் கிறிஸ்தவம் சார்ந்து உருவாகி நிற்கும் திருப்பாடுகளின் நாடகப் பாரம் பரியம் ஆய்வுக்கும் கலாசார அடையாளத்திற்கும் மரபுப்பேணுகைக்குமானதொன்று ஆகும். ஆனால் இதனைப் பேணுவதற்கும் தொடர்ந்து மேடை ஏற்றப்படுதலுக்கான தூண்டுதலை ஏற்படுத்துவதற்கும் அரச, கலாசார நிறுவன நிலைப்பட்ட எந்த முயற்சியும் மேற்கொள்ளப் படுவதில்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

அவ்வாறான முயற்சி கொள்ளப்படுமாயின் இப்பாரம்பரியம் மேலும் வளர்ச்சி பெறும். பொம்மைகளைக் கொண்டு நிகழ்த்தப்படும் உடக்குப்பாஸ் மரபு இன்று பெருமளவில் வழக்கற்றுப்போய் விட்டது. நிறுவன நிலைப்பட்ட ஆதரவுகளும் தூண்டுதல்களும் இருக்குமாயின் இம்மரபு மீளவும் புத்துயிர்ப்பு பெறும்.

எனவே கிறிஸ்தவர்களின் தவக்கால வழிப்பாட்டம்சங்களுடன் இரண்டறக்கலந்து நின்று சடங்காகவும் உயர்ந்த கலைத்துவமும் அளிக்கை வன்மையும் மிக்க நாடகப் பாரம்பரியமாகவும் நிலைத்து நிற்கும் திருப்பாடுகளின் நாடக மரபு அவலம் சுவைக்கும் அற்புதமான கலை மரபு. இது இலங்கையின் பண்பாட்டு அடையாளங்களுள் ஒன்றாக இனங்காணப்பட்டு பேணப்படுவது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோழர் காலத்தில் நெடுந்தீவில் கட்டப்பட்ட இந்து சமுத்திரத்தை கண்காணிக்கும் கோட்டை 'நாகநீள்நகர்' என்ற நெடுந்தீவு-2

**மா. கணபதிப்பிள்ளை** எம். ஏ. (அரசியல்), எஸ்.எல்.ஈ.ஏ.எஸ்.,
பணிப்பாளர் (தமிழ்), மும்மொழி விருத்திக்கான துரித செயலணி

### பெரியதுறை

நெடுந்தீவின் மேற்குப் புறத்தில் அமைந்துள்ள பெரியதுறை எனும் துறைமுகம் புராதன காலத்தில் புகழ்பெற்ற துறைமுகப் பிரதேசமாக விளங்கியது. பெரியதுறையில் இருந்து பூ முனைவரையுள்ள குடாக்களில் நாவாய்கள் அல்லது வத்தைகள் வந்து தங்கிச் செல்லக்கூடியதாக இருந்தது. தென் மேல், வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்றுக் காலங்களில் இக்குடாக்களில் மேற்படி நாவாய்களும் வத்தைகளும் பாதுகாப்பாய்த் தங்கிச் சென்றதாகக் குறிப்பிடப்படுகிறது. பெரியதுறையில் இருந்து இந்தியாவின் இராமேஸ்வரத்துக்குப் பால் கொண்டு செல்லப்பட்டதாகவும் பூமுனையில் இருந்து பூக்கள் கொண்டு செல்லப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது. நெடுந்தீவின் பால்



நெழுவினிப் பிள்ளையார் ஆலய தீர்த்த மண்டபம்



பண்டைக் காலத்தில் பிரதான துறைமுக பிரதேசமாக விளங்கிய பெரியதுறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தற்பொழுது சோலை இழந்து காணப்படும் பெரியதுறை



நெடுந்தீவு மேற்கு மக்களின் அந்தியேட்டி மடம்

இராமேஸ்வரம், திருப்பெருந்துறைக் கோவில்களில் பூசைக்கு எடுக்கப்பட்டதாக இந்தியா, இலங்கை குறிப்புக்களில் காணக்கிடக்கிறது. 13 ஆம் நூற்றாண்டிலே மிகச்சிறப்பான மிருக வளர்ப்பு நெடுந்தீவிலே காணப்பட்டுள்ளது. அதனால்தான் அத்தீவுக்கு பசுத்தீவு, பால்த்தீவு, ஆவுறையூர் என்ற பெயர்கள் காணப்பட்டுள்ளன. இன்று வரை இவ்வூரின் நெய்க்கு பிரதான கிராக்கி இருப்பதைக் கண்டுகொள்ளலாம். இத்தகைய சிறப்புமிக்க மிருக வளர்ப்பு போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் வருகையின் பின் படிப்படியாக அழிக்கப்பட்டது. இங்குள்ள ஆட்டிறைச்சியின் சுவை தனித்துவமானது என்று ஒல்லாந்தர், ஆங்கிலேயர் உட்பட நம் தமிழர்களின் பல குறிப்புக்களில் காணப்படுகிறது.

பெரியதுறையில் இருந்து பல பொருட்கள் பூம்புகார் போன்ற பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. 'பட்டினப்பாலை' என்ற நூலில் குறிப்பிடப்படும். 'ஈழத்து உணவும் வேளத்து ஆக்கமும்' என்ற சொற்றொடரில் வரும் ஈழத்து உணவைக் கொண்டு சென்ற பிரதான துறைமுகப் பிரதேசமாகப் பெரியதுறைதான் விளங்கியது.

தற்போது நெடுந்தீவின் நுழைவாயிலாக இருக்கும் மாவிலித் துறைமுகம் ஒல்லாந்தர் காலத்துக்குப் பின் சிறப்புப் பெற்றது. புராதன துறைமுகமான பெரியதுறையில் இருந்து நெல், தென்னை, சிறுதானிய விளைபொருட்களும் பால், நெய், ஆடு, மாடுகளும் ஏற்றுமதி செய்யப்பட்டதாக இங்குள்ள தகவல்களும் கர்ண பரம்பரைக் கதைகளும் குறிப்பிடுகின்றன.

எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கையின் சுதந்திரப் போராட்ட காலத்தில் இலங்கை நாட்டின் இடதுசாரித் தலைவர்களை பிரித்தானிய இராணுவம் தேடித்திரிந்தது. கலாநிதி என்.எம். பெரேரா, கொல்வின் ஆர். டி. சில்வா உட்பட்ட பலரைப் பாதுகாப்பாக அழைத்துச் சென்று நெடுந்தீவின் பெரியதுறையில் இருந்துதான் இந்தியாவுக்கு அனுப்பி வைத்தனர். இந்தக் குறிப்புக்கள் அவர்களின் டயறிக் குறிப்பாகக் காணப்படுகின்றது. அந்நியர் ஆதிக்கத்தின் பின்னர் ஏனைய தீவுகளையும் இணைத்துப் பரிபாலனம் செய்தல், படகோட்டம் போன்ற விளையாட்டுக்களுக்காகப் பெரியதுறை படிப்படியாகக் கைவிடப்பட்டது.

இன்று பெரியதுறையில் நெடுந்தீவு நெழுவினிப் பிள்ளையார் ஆலய தீர்த்த மண்டபமும் நெடுந்தீவு மேற்கு மக்களின் அந்தியேட்டி மடமும் கரையோரத்தை அண்டிக் காணப்படுகின்றன. 15 ஆம் நூற்றாண்டுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுண்ணாம்புக்கல், முருகை கற்பாறை, தேன், புளியங்கொட்டை கொண்டு கட்டப்பட்ட கோட்டையின் திடமான சுவர்





கோட்டை சுவரில் காணப்படும் பாதுகாப்புத் துவாரங்கள்

முன்னர் சீரோடும் செழிப்போடும் காணப்பட்ட பெரியதுறை துறைமுகம் தற்போது சோபை இழந்து காணப்படுகிறது.

### வெடியரசன் கோட்டை

நெடுந்தீவின் மத்தியில் அமைந்துள்ள இந்தக் கோட்டை சோழ சாம்பராச்சியம் எழுச்சியுற்று இருந்த காலத்தில் கடற்பாதுகாப்புக்காக அமைக் கப்பட்டதாகும். இராஜராஜசோழன், ராஜேந்திர சோழன் காலத்தில் இந்து சமுத்திரம் முழுவதையும் அவதானிக்கக் கூடிய இடமாக நெடுந்தீவைத் தெரிவு செய்து நெடுந்தீவில் கடற்படைத்தளத்தை அமைத்தனர். அந்தத் தளத்தின் தளபதியாக வெடியரசன் நியமிக்கப்பட்டான். குறுநில அரச ரைப் போன்று பூரண அதிகாரம் கொண்டவரான அவர் கட்டிய கோட்டையின் வடிவம் பின்னர் வந்த ஒல்லாந்தர்களாலும் ஆங்கிலேயர்களாலும் அழிக்கப்பட்டு விட்டது. தற்போது ஆங்கிலேயர் காலத்தைய கோட்டையே காணப்படுகின்றது. இருந்தபோதும் இக்கோட்டை 'வெடியரசன் கோட்டை' என்றே அழைக்கப்படுகின்றது.

வெடியரசன் காலத்தின்தான் 18 முதலிமார் தமிழ் நாட்டில் இருந்து இலங்கைக்கு வந்தனர் எனவும் அவர்களில் மதுரையைச் சேர்ந்த இருமரபும் தூய தனி நாயக முதலி நெடுந்தீவையே சொந்தமாகக் கொண்டு வாழ்ந்தார் எனவும் அவரின் பரம்பரை தீவுப்பகுதி எங்கும் பரந்து பட்டுக் காணப்படுவதாகவும் யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகிறது. வெடியரசனின்



தூர்ந்து போய் காணப்படும் கோட்டையின் ஆயுதக் களஞ்சியப் பகுதியின் வாயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் நெடுந்தீவின் மேற்குப்புறப் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு வீகாமன் என்பவன் நெடுந்தீவின் மேற்குப் பகுதியில் வாழ்ந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

போர்த்துக்கேயர் வருகைக்குப் பின் நெடுந் தீவின் புராதனம் மிக்க பண்பாடுகள் பாரம்பரியங்களை மிகவும் சீர்குலைத்தவர்கள் ஒல்லாந்தார்களே. இவர்களது ஒல்லாந்து தேச த்தில் உள்ள Delft (டெல்வ்ட்) என்ற தீவை நெடுந்தீவு ஒத்திருந்த காரணத்தால் நெடுந்தீவுக்கு 'டெல்வ்ட்' என்று பெயரிட்டனர். இதைப் போல நயினாதீவு, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களுக்கும் முறையே ஆம்ஸ்ரடாம், ஸ்ரொட் டடாம், கயிற்ஸ் என்று பெயரிட்டு அழைத்தனர். இந்தப் பெயர்களை கொழும்பு, பிரின்ஸ் வீதியில் உள்ள ஒல்லாந்து தொல்பொருட்காட்சிச் சாலையில் கண்டுகொள்ளலாம். தீவுகளின் பெயர் மாற்றப்பட்டது போல வெடியரசன் கோட்டையின் உட்புற, வெளிப்புறத் தோற்றங்களில் மாற்றங்கள் செய்தார்கள். தமது படகோட்ட விளையாட்டுக்காக வெடியரசன் கோட்டையின் பின்பக்கத்தில் இருந்து கால்வாய்கள் அமைத்து, கடல்நீரைத் தரைக்குள் கொண்டு வந்தனர். அந்தக் கால்வாய்களில் படகோட்டி விளையாடினர். தமது படகோட்ட குதூகலத்தின்போது வறிய பெண்கள் மீது அதிகாரத்தைப் பிரயோகித்து, கட்டாயப்படுத்தி தமது பாலியல் இச்சைக்கு அடிமைப்படுத்தினர். அந்த கயவர்களின் தொடர்பால் பிறந்த குழந்தைகளின் பரம்பரையினர் இன்றும் தோற்ற த்தில் வெள்ளையரை ஒத்த தமிழர்களாக வாழ்ந்து வருகின்றனர். தரைக்குள் கடல் நீர் கொண்டு வரப்பட்டதால் தரைக்கீழ் நன்னீர் ஊற்றுக்கள் உப்பு நீரானது. அதனால் குடிநீர் பிரச்சினை பாரிய அளவில் இன்று வரை காணப்படுகிறது. பின்னர் வந்த ஆங்கிலேயர்களும் குறிப்பாக நோளன் என்பான் ஒல்லாந்தரின் பாணியைப் பின்பற்றி நடந்தான். அவனது காலத்தில் வெடியரசன் கோட்டை மேலும் வேறுபடுத்தபட்டது. அவனது காலத்து எச்சசொச்சக் கோட்டையே இன்றுவரை காணப்படும் வெடியரசன் கோட்டை என அழைக்கப்படுகிறது.

இக்கோட்டையின் சுவர்களில் பாதுகாப்பாக நிலையெடுத்து ஆயுதங்களினால் தாக்கக்



கோட்டையின் மேற்தட்டில் உள்ள சுவர்களில் காணப்படும் மறைவு நோக்குத் துவாரங்கள்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெடியரசன் கோட்டையின் பின்புறத்தில் படகோட்டி விளையாடுவதற்காக ஒல்லாந்தரால் அமைக்கப்பட்ட கால்வாய்



தூர்ந்து போய்விட்ட கால்வாயின் ஒரு பகுதி



தோற்றத்தில் வெள்ளையரை ஒத்த தமிழராக வாழும் பெண்ணுடன் அளவளாவும் ஆறுமுகம் கந்தையா. இவர் 'அக்குயாட்டிக்' படகு சேவையாளராகவும் உல்லாச பயணிகளின் தொடர்பாளராகவும் தொழிற்படுகிறார்.

கூடியவாறான பாதுகாப்புத் துவாரங்களை இன்றும் காணலாம். இந்தக் கோட்டை சுண்ணாம்பு, தேன், புளியங்கொட்டை போன்ற புராதன கட்டிடச் சாதனப் பொருட்களாலும் முருங்கை கற்பாறைகளாலும் கட்டப்பட்டுள்ளது. கோட்டையின் உட்புறத்தில் பல அறைகள் காணப்படுகின்றன. அந்தப்புரம் போன்ற பெண்கள் தங்கும் அறைகள் ஒற்றைக் கதவையும் பிரதான மண்டபம், மூன்று வழிப்பாதையையும் கொண்டு காணப்படுகின்றது. ஆயுத களஞ்சிய அறை மூடப்பட்டதாகவும் ஆபத்து வரும்போது இரண்டாம் மாடியில் இருந்து தாக்கும் முறையில் கட்டிடக்கலை மிகச் சிறப்பாக வடிவமைக்கப் பட்டுள்ளது. எதிரிகள் நடமாட்டத்தை அவதானிக்கும் வகையில் மேற்தட்டில் உள்ள கட்டிடங்களில் மறைவு நோக்குத் துளைகள் அமைக்கப்பட்டு இருக்கும் விதமும் வேறெந்தக் கோட்டைகளிலும் இல்லாத தனித்துவம் என்று நிபுணர்கள் ஆச்சரியப்படுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





'ஆமன்கோணர்' வீதியிலுள்ள கல்லூரியின் தோற்றம்

# 'உமது ஒளியில் வெளிச்சம் காண்போம்'

## 200 ஆண்டுகளைக் கடந்த மெதடிஸ்த மத்திய கல்லூரி

**பயஸ் ஆனந்தராஜா**
**பிரதி அதிபர், மெதடிஸ்த மத்திய கல்லூரி, மட்டக்களப்பு.**

கிழக்கின் புகழ் பூத்த மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி இவ்வருடம் 200ஆவது ஆண்டு நிறைவை நினைவு கூருகிறது. 1814இல் இங்கிலாந்து நாட்டிலிருந்து வருகை தந்த மெதடிஸ்த மிஷனரிகள் ஏற்றிய கல்வி ஒளி இன்றும் எரிந்து பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

சமுதாய, சமயப் பணிக்காகத் தியாக சிந்தையோடு கடல் கடந்து வந்த மெதடிஸ்த மிஷனரிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இலங்கைத் தீவின் அதி பழைமையும் பெருமையும் வாய்ந்த அறிவுச் சுடர் பரப்பும் கல்லூரி இன்று ஆல் போற் பரந்து செழிப்புற்று கல்விச் செல்வத்தை சாதி, மத பேதமின்றி சகலருக்கும் தொடர்ந்து அள்ளி வழங்கி வருகிறது. இந்த ஆதி இறைபணியாளர்களின் அகன்ற, உயர்ந்த உள்ளங்களையும் உன்னத பண்புகளையும் நினைத்து பெருமைப்படுகிறோம்.

மெதடிஸ்த பாரம்பரியக் கோட்பாடுகள் பற்றியும் இந்தக் கல்லூரி காலம் காலமாகக் கட்டிக் காத்து வரும் அரிய கல்வி மரபு பற்றியும் அறிய வேண்டுமானால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேலிருந்து நோக்கி வகுப்பறைகளின் தோற்றம்

இக் கோட்பாடுகளைக் கொண்டு கட்டி எழுப்பப்பட்ட கல்லூரியின் ஸ்தாபகர் வண. வில்லியம் ஒல்ட் அவர்களது சரிதையைச் சற்றுப் பின்னோக்கிப் பார்த்தல் அவசியமாகும்.

தோல்விகள் மத்தியில் துவண்டு விடாமல், இன்னல்கள் மத்தியில் இளைத்து விடாமல், கஷ்ட, நஷ்டங்கள், இழப்புக்கள் மத்தியில் களைப்படைந்து விடாமல் தம்மை இந்த உன்னதமான பணிக்காக அழைத்து வந்த உந்தமராம் இறைவனிலே முற்று முழுதான நம்பிக்கை கொண்டு இங்கு வந்தார் ஒல்ட் பாதிரியார்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.




கல்லூரியின் முகப்பு



உட்புறத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்லூரியின் மாணவர் விடுதியிலுள்ள பழைமையான மரம்

அந்த ஆதி மிஷனரிமார் இலங்கை வந்த நிலை நினைத்தாலே நெஞ்சை உருக்கும் கண்ணீர்க் கதையாகும். ஆனால் அந்தக் கண்ணீர்த் துளிகள் மத்தியிலும் கலங்கிடாமல் கடவுளையே நம்பி கல்விப் பணியை இந்நாட்டில் தொடக்கி வைத்தனர் அத்தொண்டர்கள்.

போக்குவரத்து வசதிகள் எதுவுமே இல்லாத அக்கால கட்டத்தில் கொந்தளிக்கும் சமுத்திரங்களினூடாகப் பாய்க் கப்பல்களில் பயணம் மேற்கொண்டனர். அந்தோ! அந்த இறைபணியாளர்கள் வழியிலேற்பட்ட கடற்கொந்தளிப்பு, கடும் காற்று ஆகிய அத்தனை ஆபத்துக்களையும் எதிர்கொண்டார்கள். ஒல்ட் பாதிரியாரின் இளம் மனைவி கப்பலிலே கடும் சுகயீனமுற்று மரணமானார். பயணத்தை ஒழுங்கு செய்த தலைவர் அருட் கலாநிதி கோக் அவர்கள் தாம் எந்த நாட்டுக்கு சேவை செய்ய வேண்டுமென வாஞ்சித்துப் புறப்பட்டாரோ அந்த நாட்டுக் கரையையே காணாமல் அவரும் கப்பலிலே மரித்த போது சகாக்களுக்கு பேரிடியாயிருந்தது.

அடுத்து என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறிய போதிலும் தம்மை அழைத்து இறைவனின் திருச்சித்தத்திற்குத் தம்மை ஒப்புவித்து, 1814 ஆம் ஆண்டு ஜூன் 29 ஆம் திகதியன்று தெற்கின் வெலிகம கடற்கரைப் பிரதேசத்தை வந்தடைந்தனர். தங்கள் நோக்கம் நிறைவேற இலங்கையின் பல பாகங்களுக்கும் செல்லவேண்டும். நவீன வசதிகளோ போக்குவரத்துச் சாதனங்களோ இல்லாத காலமது. எனவே தங்களுக்குள் சீட்டுப் போட்டனர். அருட்திரு வில்லியம் ஒல்ட் போதகரின் பெயர் மட்டக்களப்பு செல்வதற்கானதாக தெரிவானது. அதன்படி போதகரவர்கள் மீண்டும் கப்பலேறி அதே ஆண்டு ஆகஸ்ட் 12 ஆம் திகதி தற்போது "பற்றிக்கலோ கேட்" என்று அழைக்கப்படுகின்ற




வெபர் விளையாட்டு மைதானம் முன்னால் உள்ள கல்லூரின் முகப்பு தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒன்று கூடல் மண்டபம்



பழைய வகுப்பறைக் கட்டிடம்

இடத்தை (தற்போது இவரது உருவச்சிலை இதற்கருகில் காணப்படுகிறது) வந்தடைந்தார்.

மட்டு. நகர் வந்து சேர்ந்த போதகர் வில்லியம் ஒல்ட் அவர்கள் கல்வியே கருந்தனம் என்பதைக் கருத்திற் கொண்ட கல்விமானாவார். அறியாமை எனும் இருளகற்றி மெய்ஞானம் எனும் கல்விச் சுடரை அனைவருக்கும் அள்ளி வழங்குவது தனது தலையாய கடமை என்பதை இந்த இறையடியான் நன்கு உணர்த்திருந்தார்.

அப்போதிருந்த கலக்டர் சைமன் சோயஸ் அவர்களின் ஒத்தாசையுடன் ஆங்கில மொழி ஆண்கள் பாடசாலையை ஆரம்பித்தார். இதற்குரிய இடமாக அரச களஞ்சியசாலை காணப்பட்டது. ஆரம்ப மாணவர் தொகை ஐந்து பேர்.

ஆறாயிரம் மைல்களுக்கப்பால் அந்நிய நாடொன்றில் முற்றிலும் மாறுபட்ட சுவாத்திய சூழல்கள் மத்தியில் ஆருயிர் மனைவியை இழந்த ஆற்றொணாத் துயரத்திலும் கூட சேவை மனப்பான்மையுடன் செயற்பட ஆரம்பித்தார். இலங்கைக்குப் புறப்பட முன் இங்கிலாந்தில் அவர் கற்றிருந்த போர்த்துக்கேய மொழி அச்சமயத்தில் நன்கு கைகொடுத்தது. ஏனெனில் அக்காலத்தில் மட்டு. நகரில் அம்மொழி பேசுவோர் அனேகர் வசித்து வந்தனர். எனினும் ஒரு சில மாதங்களில் அவர் தமிழ் மொழியைக் கற்றுத் தேர்ந்து அறிவுரைகள் ஆற்றும் அளவிற்கு புலமை பெற்றார்.

மட்டு. நகரில் 94 டிகிரியில் வெப்பமும் இரண்டாண்டுகளாக கடும் வரட்சியும் நிலவியதால் போதகர் ஒல்ட் அவர்களின் தேகாரோக்கியம் பெரிதும் பாதிப்படைந்தது. இங்கே வந்து எட்டு மாதங்களில் மலேரியாவால் பீடிக்கப்பட்டு 1815 ஏப்ரலில் வில்லியம் ஒல்ட் போதகர் மரணமானார். அந்த உத்தமரால் இறுக்கமான காலப்பகுதியில் தொடங்கப்பட்ட

கல்விப் பணி காலங்காலமாக 200 ஆண்டுகள் கடந்தும் இன்றும் இப்பகுதி மக்களுக்கு வெளிச்சம் வீசிய வண்ணம் விளங்குகிறது. அவரைத் தொடர்ந்து வண. எலிஜா ஜக்சன் இங்கிலாந்திலிருந்து வருகைதந்து வண. வில்லியம் ஒல்ட் விட்டுச்சென்ற சேவையைக் கையேற்றுத் தொடர்ந்தார்.

அப்போது மாணவர் தொகை 46 ஐ எட்டியிருந்தது. தேவாலயப் பாடகர் குழுவிலும் இம்மாணவர் இடம் பெற்றிருந்தனர். கற்றல் நடவடிக்கைகளோடு பொதுவிடயங்கள் உட்பட விளையாட்டுச் செயற்பாடுகளும் இவர்களுக்குக் கற்பிக்கப்பட்டு வந்தன. பல உள்ளூர் மாணவர்கள் இந்த ஆங்கிலக் கல்வியால் மிகுந்த பயனடைந்தனர்.

1877 - 1942 வரையான காலப்பகுதியில் சுமுகமாக இந்தக் கல்விக் கூடம் நடைபயின்று கொண்டிருந்தது. வணக்கத்துக்குரிய திருச்சபை குருவானவர்களான ஜோர்ச் றிமர், தோமஸ் லிற்றில், ஜே. பிறவுன், ஜோசப் வெஸ்ட், ஈ. எம். லீலர், ஜே. பி. றொப்சன், டபிள்யூ. எம். பி. வில்கிஸ், ஜி. கே. ஹரீஸ், சி. ஏ. கிரீன், அல்பேட் ஹல், ஆர். டபிள்யூ. ஹோல்ற்டம், சி. ஏ. ஸ்மித், ஜேம்ஸ் காட்மன் ஆகியோர் கல்லூரியின் அதிபர்களாக சேவையாற்றியுள்ளனர்.

1886 இல் தற்போது கல்லூரி அமைந்துள்ள வளாகத்தில் பெரிய மண்டபத்துடன் கூடிய கட்டிடம் அமைக்கப்பட்டது.

1930 இற்கு பிற்பட்ட காலம் முன்னைய காலப்பகுதியை விட விரைவான சமூக, அரசியல் மாற்றங்களை உள்ளடக்கியதாய் இருந்தது. அரச சபை ஆரம்பிக்கப்பட்டு டொனமூர் அறிக்கையின் படி கூடுதலான அதிகாரமும் பொறுப்புக்களும் அரசாங்கத்திலுள்ள இலங்கையருக்குக் கொடுக்கப்பட்டது. இதன் விளைவாக மக்களுக்கு அரசில் கூடிய பங்களிப்புக் கிடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைத் தொடர்ந்து 1948 ஆம் ஆண்டில் இவை மக்களை சுதந்திரத்துக்கு இட்டுச் சென்றன. இது கிறிஸ்தவ தலைமைத்துவத்தினை எதிர்க்கும் அளவிற்கு இலங்கை மக்களது மனப்பாங்கினை மாற்றியது. இவ் அரசியல் சமூக மாற்றங்கள் மெதடிஸ்த திருச்சபையினால் நிர்வகிக்கப்பட்ட கல்விக் கூடங்களைப் பாதிக்காமலில்லை.

அக்காலப் பகுதியில் இறுதி ஆங்கிலேய அதிபராக வண. ஜேம்ஸ் காட்மன் கடமை புரிந்தார். ஓர் ஒழுக்கமுள்ள மாணவ சமுதாயம் உருவாக வேண்டுமென்பதாக அவரது இத்திட்டத்தில் சேர்ந்து கொண்டன. இத்திட்டம் அமுலாவதற்கு முன்பு சம்பளத்தின் ஒரு பகுதியை மானியமாக இலங்கை அரசு வழங்கியது.

சம்பளத்தின் மறுபகுதியும் கல்லூரியை நடத்துவதற்கான பிற செலவுகளும் வசதிக் கட்டணத்திலிருந்து பெறப்பட்டன. 1948 இல் சகல மிஷன் பாடசாலைகளும் பாடசாலைக் கட்டணம் அறவிடுவதை நிறுத்த வேண்டும்; மானியம் வழங்கப்பட மாட்டாது என்ற அரச உத்தரவுக்கிணங்க அரசின் உதவியில்லாமல் தனியே கல்லூரியை நடத்த போதிய நிதியின்மையால் இலவசக் கல்வித் திட்டத்தில்





கல்லூரியின் கடைசி ஐரோப்பிய அதிபரான பிரித்தானியாவைச் சேர்ந்த ஜேம்ஸ் கார்ட்மன் அடிகளாரின் மகளான திருமதி கிறிஸ்டியன் வேவர் தனது கணவருடன் கல்லூரிக்கு விஜயம் செய்தபோது கல்லூரியின் முன்னாள் அதிபரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமாகிய பிறின்ஸ் காசிநாதர் உட்பட பழைய மாணவர் சங்க முக்கியஸ்தர்கள் வரவேற்பதையும் திருமதி கிரிஸ்டியன் தனது தந்தையின் சிலையருகில் நிற்பதையும் காண்கிறீர்கள். ஜேம்ஸ் கார்ட்மனின் மகளான திருமதி கிறிஸ்டியன் வேவர் 1940 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் பிறந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

செயற்பாடுகள் அமைந்திருந்தன. இக்காலப் பகுதிதான் விளையாட்டுத் துறைக்குப் புத்தூக்கமளிக்கப்பட்டது. உதைபந்து, கிரிக்கெட்டில் ஆர்வமுள்ள வீரர்கள் உருவாகினர். அவர் விளையாட்டுத்துறைக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்ததனால் அது மாணவர்களை கட்டொழுங்குபடுத்தி நல்லொழுக்கத்தினை உருவாக்க வழிகோலியது.

இலங்கையைச் சேர்ந்த எஸ். வீ. ஓ. சோமநாதர் அவர்கள் முதலாவது சுதேச அதிபராக 1942 இல் கடமையேற்றார். அவர் ஏற்கனவே ஓர் ஆர்வமுள்ள இயற்கைப் பிரியராகவும் சிறந்த ஆசிரியராகவும் நற்பெயர் பெற்றவர்.

1945 ஆம் ஆண்டு மெதடிஸ்த மத்திய கல்லூரி மட்டும் இலவசக் கல்வித் திட்டத்தினுள் நுழையவில்லை. மட்டக்களப்பிலுள்ள ஏனைய பெரிய ஆண்கள் பாடசாலைகளான புனித மிக்கேல் கல்லூரியும் சிவாநந்த வித்தியாலயமும் கல்லூரியும் நுழைந்து கொண்டது. அப்போதிருந்த மேன்மை தங்கிய தேசாதிபதி சேர் ஹென்றி மூர் அவர்கள் கல்லூரிக்கு விஜயம் செய்து கல்லூரியின் பொது அமைப்பினையும் நிருவாகத்தையும் பற்றிய தெளிவான கருத்தை வெளிப்படுத்தி இருந்தார்.

35 வருட கால தனது நீண்டகால சேவையினைப் பூர்த்தி செய்த அதிபர் சோமநாதர் இளைப்பாறினார். அவரைத் தொடர்ந்து அதிபராக வீ. ரீ. ஞானசூரியம் 01.01.1956 முதல் கடமையேற்றார்.

1960 ஆம் காலப்பகுதியில் பாரிய கல்வி மாற்றங்கள் நடைபெற்றன. பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்கும் சட்டமூலம் நிறைவேறியது.

மெதடிஸ்த திருச்சபையால் நிருவாகம் செய்யப்பட்ட கல்லூரியானது அரசாங்கப் பாடசாலையாக மாறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




175 ஆவது ஆண்டு நிறைவு முத்திரை



கல்லூரி ஸ்தாபகர் வண. வில்லியம் ஒல்ட்



இறுதி ஐரோப்பிய அதிபர் வண. காட்மன் அடிகளார்

இக்காலத்தில் மெதடிஸ்த திருச்சபை 177 கல்வி நிலையங்களை சாதி, சமய வேறுபாடின்றி நிருவகித்தது. ஆண், பெண் மாணவர்கள் 47,000 பேரளவில் இங்கு கல்வி பயின்று வந்தனர். மெதடிஸ்த திருச்சபையும் நாட்டில் ஏற்பட்ட அடிப்படை மாற்றங்களை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு (இரு பாடசாலைகளைத் தவிர்த்து - கொழும்பு மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, வெஸ்லி கல்லூரி) நமது கல்லூரி உட்பட எல்லாப் பாடசாலைகளையும் அரசுக்குக் கையளித்தது.

மெதடிஸ்த மத்திய கல்லூரியை அரசு பொறுப்பேற்கும் போது அதிபர், உபஅதிபர் உட்பட 15 நிரந்தர ஆசிரியர்களும் 400 மாணவர்களும் இருந்தனர்.

பல சமுதாய மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய கல்வி முறையொன்று ஆயத்தப்பட்டுத்தப்பட்ட இக்காலத்தில் வீ. ரி. ஞானசூரியம் அதிபராகவும் பி. ஜி. காசிநாதர் உபஅதிபராகவும் கடமை ஆற்றினர். பல புதிய தாக்கங்களை கல்லூரி எதிர்நோக்கி நின்ற அறுபதாம் தொடர் ஆண்டுகளில் கல்விச் சூழ்நிலை மாற்றத்திற்கு உள்ளாகியது.

சமூக மதிப்புத் தரங்கள், கல்லூரியில் பெற்றோரின் பங்கு, உணர்ச்சி ஒருமைப்பாட்டில் மொழியின் இடம், ஆசிரியரும் கற்பித்தற் செயன்முறைகளும் ஆகிய புதிய கல்விப் பிரச்சினைகள் தலைதூக்கின.

அத்துடன் மேலதிக மாணவர்கள் தொகையின் தேவைகளை நிறைவு செய்யக் கூடிய கல்வித்துறை வசதிகள் இக்காலப் பகுதியில் குறைவாகவே காணப்பட்டன.

இவ்வகையான நிலையில் கல்லூரியின் கல்வி பாரம்பரியத்தின் திறமைகளையும் குறைகளையும் மதிப்பீடு செய்து இதுவரை காலமும் நிலைத்து வந்த கல்லூரிக் கல்விப் பாரம்பரியத்தின் கட்டுக் கோப்புக்களைச் சரியவிடாமல் கட்டிக்காத்து வந்த பெருமை அப்போதைய அதிபர் வீ. ரி. ஞானசூரியத்தினதும் உபஅதிபர் பிறின்ஸ் காசிநாதரதும் சாதுரியத் திறமை என்றால் அது மிகையாகாது.

1964 இல் பி. ரி. சின்னையா அதிபராகச் சேவையைத் தொடர்ந்தார். 1966 - 1968 ஆம் காலப்பகுதியில் கல்வித் திட்டத்தின் மூலம் தமிழ் போதனா மொழியாக அந்தஸ்து பெற்றது. ஒழுங்கு முறையான கல்வித் திட்டத்தில் நூலகத்தின் தேவை உணரப்பட்டது. நூலகத்திற்கு வசதியான இடம், அலுமாரிகள், படிப்பகங்கள், அறிவியல் தொடர்பான சஞ்சிகைகள் வழங்கப்பட்டன.

1975 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கல்லூரி வரப்பிரசாதம் பெற்ற காலமாகும். ஏனெனில் கடந்த கால்நூற்றாண்டு காலம் ஆசிரியப் பணி புரிந்தவரும் கல்லூரி பழைய மாணவரும் கல்லூரியின் நீண்ட காலப் பாரம்பரியங்களையும் சம்பிரதாயங்களையும் நன்கு அறிந்தவரும் கற்ற தலைமுறையினரை நன்கு அறிந்தவருமான பிறின்ஸ் காசிநாதர் அதிபராக நியமனம் பெற்றார். உபஅதிபராக எஸ். ரி. ஆணல்ட் பதவியேற்றார். இக்காலப்பகுதியில் பல சவால்களும் எதிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி நூலகத்திலுள்ள வரலாற்று படங்கள்




ஆரம்ப காலத்து வகுப்பறை



ஐரோப்பாவின் மிசனரி



கப்பல் மூலம் மட்டக்களப்பை வந்தடையும் மிஷனரி



பழைய ஒன்றுகூடல் மண்டபம்

கொள்ளப்பட்டன. இவர்களின் பெருமுயற்சியினால் க.பொ.த (உ/த) வகுப்புகள் ஆரம்பிக்கப்பட அனுமதி கிடைத்தது.

அத்துடன் அப்போதைய தேசியப் பேரவை உறுப்பினரும் மாவட்ட அரசியல் அதிகாரியுமான ராஜன் செல்வநாயகத்தின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டு தற்போதைய கல்லூரியின் பெயர் பொறிக்கப்பட்ட மாடிக் கட்டிடம் அவரால் திறந்து வைக்கப்பட்டது. இக்கல்லூரியில் நீண்ட காலமாக இருந்த புராதன தோற்றம் மாறி ஒரு புது மெருகேறிய தோற்றத்திற்கு இக்கட்டிடம் வழிவகுத்தது எனலாம்.

1978 இல் மட்டு. நகரில் வீசிய சூறாவளியின் தாக்கத்தினால் கல்லூரியின் கட்டிடங்களும் பாதிப்படைந்தன. அப்போதைய கல்விப் பணிப்பாளரின் பெருமுயற்சியினால் புனரமைக்கப்பட்டு மீண்டும் புதுப்பொலிவு பெற்றன. கல்லூரியின் வரலாற்று ஏடுகள், படங்கள் அனைத்தும் நீரில் மூழ்கி அழிந்தன.

மாணவர் தொகை கணிசமான அளவு அதிகரிக்கத் தொடங்கியது. மாணவனின் அறிவு அபிவிருத்தி அடைந்துவரும் அதே வேளையில் அதனோடு அன்பு, பரஸ்பர அந்நியோன்னியம் ஆகிய மனித நற்பண்புகளும் அதே துரித கதியில் அபிவிருத்தி அடைய வேண்டும் என்று அயராது அதிபரும் ஆசிரியர் குழாமும் உழைத்ததன் பலாபலன் சமூகத்திற்குக் கிடைத்தது. கல்லூரியின் நீண்ட கால வரலாற்றிற்கு உரித்துடையவரும் தொடர்ந்து 26 வருடங்கள் ஆசிரியர், உப அதிபராகவும் 11 வருடங்கள் அதிபராகவும் பெறுமதி மிக்க சேவையாற்றிய பிறின்ஸ் காசிநாதர் 21.07.86 இல் ஓய்வு பெற்றார். பிற்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்ட பெருமைக்குரியவராக திகழ்ந்தார்.

முன்னாள் உப அதிபராகத் திகழ்ந்த ஏ. ஏ. அருளன்னராஜா புதிய அதிபராக நியமிக்கப்பட்டார். இவரின் பதவிக் காலத்திலும் பல கல்விச் சாதனைகளும் விளையாட்டுச் சாதனைகளும் ஈட்டப்பட்டன. 1988 இல் க.பொ.த விஞ்ஞானப் பிரிவில் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிகூடிய புள்ளியைப் பெற்று வைத்தியதுறைக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர் உருவாக உதவியாக இருந்த முகாமைத்துவத்தின் திறமை அன்னாரையே சாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது காலத்திலே நவீன விஞ்ஞான ஆய்வு கூடம் மற்றும் நிரந்தர நிருவாகக் கட்டிடம் என்பன அமையப்பெற்றன.

தொடர்ந்து கே. ஜி. அருளானந்தம் அதிபராகக் கடமையேற்றார். கல்வித்துறை சாதனைகள், விளையாட்டுத்துறை சாதனைகள் விரிவாக்கப்பட்டன. தலைசிறந்த 1ஏபி பாடசாலைகள் வரிசையில் மெதடிஸ்த மத்திய கல்லூரியும் இடம்பெற்றது. பாடத்துறை விற்பன்னர்களான நல்லாசிரியர்கள் பலர் சேவையில் இணைந்து கொண்டனர்.

பௌதீக வள அபிவிருத்தியில் குறிப்பாக நவீன முறையிலும் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய ஒன்று கூடல் மண்டபமும் அதனோடு மேல் இருமாடியில் அமையப்பெற்ற வகுப்பறை மண்டபங்களும் ஒரே கட்டிடத்தில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டன. வெபர் விளையாட்டரங்கின் முன்பாக புதுப்பொலிவுடன் கல்லூரி காட்சி தந்து பெருமையைப் பறை சாற்றிக் கொண்டிருந்தது.

இலக்கிய மன்றங்களும் சமூக சேவைக் கழகங்களும் மாணவர் மத்தியில் உருவாக்கப் பட்டன. கல்லூரி வரலாற்றில் காலத்திற்குக் காலம் ஜெய கேசரி, இளைஞன், யுவன், பரணி, விஞ்ஞானி, செம்மை ஆகிய சஞ்சிகைகளும் வெளியாகியுள்ளன. குறிப்பாக கல்லூரியின் பெயர் கூறும் சஞ்சிகைகளாக 1946 இல் சென்றலைட், 1989 இல் மத்திய தீபம் என்பன வெளியிடப்பட்டு கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளன.

தற்போது கடமையாற்றும் அதிபர் ஐ. கமலராஜா முப்பது வருடங்களுக்கு மேலாக கல்லூரியோடு தொடர்புபட்டவர். 2007 முதல் அதிபராகக் கடமையாற்றி பல சாதனைகள் வெளிப்படுவதற்கு காரணமாக இருந்துள்ளார். ஒழுக்க மேம்பாடு வளர்ச்சி இதில் முக்கியமானதாகும்.

'உமது ஒளியில் வெளிச்சம் காண்போம்' என்ற விருது வாக்குடன் வணக்கத்துக்குரிய வில்லியம் ஒல்ட் போதகரது பரந்த நோக்கத்திலும் தியாகத்திலும் உருவான மெதடிஸ்த மத்திய கல்லூரி அதனது பாரம்பரிய கோட்பாடுகளையும் கல்வி மரபுகளையும் தொடர்ந்து பேணிக் காத்து வருகின்றது.

காலங்கள் மாறிக் கொண்டு செல்கின்றன. நவீன தொழிநுட்ப விஞ்ஞான விந்தைகள் ஆச்சரியத்தில் ஆழ்ந்துகின்றன. பல சவால்கள் எதிர்நோக்கப் படுகின்றன. இவற்றின் மத்தியிலும் கல்வி அமைப்பு முறை சர்வதேச ரீதியில் என்றும் வியாபித்துள்ளது. விரும்புகின்ற எதனையும் எல்லோரும் எந்நேரமும் எங்கும் கற்றுப் பயனடைய வாய்ப்புக்கள் விரிவுப்படுத்தப் பட்டுள்ளன. கல்வியே மனித மேம்பாட்டின் மூலவளம் என்பது உணரப்பட்டுள்ளது.

அநேக அதிபர்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் கால ஓட்டத்தில் இக்கல்லூரியின் ஊடாகத் தத்தமது பயணங்களைத் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றனர். இனி வரும் காலங்களிலும் இன்னும் ஆயிரமாயிரம் பேர் இதனூடாகச் சென்று வெளிச்சம் வீசும் தீபங்களாக என்றென்றும் பிரகாசிக்க விருக்கின்றனர்.

எனவே காலத்தின் மாற்றத்திற்கு இசைந்து கொடுத்து மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியும் எதிர்காலத்தில் சமுதாயத்தில் தாக்கத்தைக் கொடுக்கின்ற நிறுவனமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

இருநூறு ஆண்டுகள் நிறைவு பெறும் இப்பழமைக்கல்லூரி என்றுமே இளைமையுடன் மென்மேலும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் நிலைத்து சமுதாயத்திற்கு நற்பணியாற்றி வரவேண்டுமென்பதே சகல அபிமானிகளதும் பிரார்த்தனை ஆகும்.



கல்லூரி நூலகத்திலுள்ள ஞாபக சின்னங்கள்







கல்லூரி அதிபர்கள் பயன்படுத்திய பொருள்களும், பழைய கட்டடங்களில் இருந்து பெறப்பட்ட செங்கல்லும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை



விபுலானந்தர்



புலவர்மணி
பெரியதம்பிப்பிள்ளை

# யாழ்ப்பாணத்துப் பண்டிதப் பாரம்பரியம்

- பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா

நீண்ட நெடுங்காலமாக யாழ்ப்பாணக் குடாநாட்டிலே தமிழ்க்கல்விப் பாரம்பரியமொன்று நிலவி வந்துள்ளது. மரபுவழிக் கல்விப் பாரம்பரியத்தினூடு மேற்கிளம்பிய புலமையாளர்கள் சிறப்பாகத் தமிழ்மொழியை, இலக்கியத்தை, சைவசித்தாந்தத்தைக் கற்பித்து வந்துள்ளனர். தமிழ்மொழியோடு வடமொழிப் புலமையும் உடையவர்களாக இப்புலமையாளர்கள் சிலர் விளங்கினர்.

19ஆம் நூற்றூண்டு வரையான ஈழத்து, யாழ்ப்பாணத்துத் தமிழ்ப்புலமை மரபு பற்றியும் தமிழ்க்கல்வி பற்றியும் ஏலவே எம்மால் எழுதப்பட்டுள்ளது.

மிசனரிமாரின் வருகையுடன் நிறுவன மயப்பட்ட கல்வி மரபு நிலைபெறத் தொடங்குகின்றது. ஏக காலத்தில் மரபுவழிக் கல்வியும் நிறுவனவழிவரும் கல்வியும் இங்கு நடைபெறுகின்றது. சமூக, பொருளாதார, அரசியற் காரணிகளினால் நிறுவனவழிவரும் கல்விமரபு அங்கீகரிக்கப்பட்ட, மதிப்பார்ந்த கல்விமரபாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. மரபுவழித் தமிழ்க்கல்வியின் சுவடுகளை ஆரியச்ச க்கரவர்த்திகள் காலத்திலிருந்து அடையாளம் காணமுடிகின்றது. இதன் நீட்சியைப் 18ஆம், 19ஆம் நூற்றூண்டுப் புலமைப் பாரம்பரியத்தின் ஓட்டத்தினூடு தரிசிக்க முடிகின்றது.

மரபுவழித் தமிழ்க் கல்வியைப் பெற்ற பலர் நிறுவனவழிவரும் கல்விமரபு அறிமுகப்படுத்தப்பட்டதும் அதனுடன் இணைகின்றனர். இதனால் இவர்களின் கல்வி முறையிலும் சிந்தனையிலும் கருத்துநிலையிலும் மாற்றங்கள் நிகழுகின்றன. மரபுவழித் தமிழ்க்கல்வியும் நிறுவனவழிவரும் மேலைப்புலக் கல்விமரபும் இணைந்த தமிழறிஞர் பரம்பரையொன்று உருவாகியது. மரபுவழித் தமிழ்க்கல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபிற் கற்றவர்கள் நிறுவனவழிவரும் கல்விக் கூடங்களிலே மாணவர்களாக மட்டுமன்றித் தமிழாசிரியர்களாகவும் இணைகின்றனர். இந்த இணைவு தமிழ்மொழியின் செழுமைக்கும் வளர்ச்சிக்கும் வழிவகுத்தது எனலாம்.

மரபுவழித் தமிழ்க்கல்விப் புலமையாளர்களையும் நிறுவனவழிவரும் கல்விக் கூடங்களிலே கற்பித்த தமிழ் ஆசிரியர்களையும் பண்டிதர், புலவர், வித்துவான் என அழைக்கும் வழக்காறு நிலவியமையும் குறிப்பிடத்தக்கது.

பண்டிதன் என்ற சொல் சுக்கிரன், புதன், புலவன், வைத்தியன், வித்துவான் ஆகியவற்றைக் குறிக்கும் என அகராதிகள் கூறுகின்றன. பாண்டித்தியம் என்ற சொல்லில் இருந்து பண்டிதன் என்ற சொல் வந்திருக்கும் என ஊகிக்கலாம். பாண்டித்தியம் என்றால் படித்தல் என்று யாழ்ப்பாண அகராதி குறிப்பிடுகின்றது. பண்டிதன் - பண்டிதர், என அழைக்கும் வழக்காறு தமிழிலே நீண்டகாலமாகவே நிலவிவருகின்றது. முருகனுக்குரிய பரியாய நாமங்களிலே ஞானபண்டிதன் என்பதும் ஒன்று என்பதை இவ்விடத்திலே நினைவுகூரலாம். பண்டிதன் மரியாதை ஒருமை 'அர்' விகுதி பெற்றுப் பண்டிதர் என வழங்கியிருக்கும்.


பண்டிதர் க. வீரகத்தி

தமிழ்ப்புலமை மரபிலே குணவீரபண்டிதர், வரதபண்டிதர், சங்கர பண்டிதர், முருகேசபண்டிதர், நாகநாதபண்டிதர், கணேசபண்டிதர் முதலான அறிஞர்கள் பலர் பண்டிதர் என அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவர்கள் பண்டித பரீட்சைக்குத் தோற்றிப் பட்டச்சான்றிதழ் பெறாத பண்டிதர்களாவர்.

குருகவி மகாலிங்கசிவத்தைப் பரீட்சை எடாத பண்டிதர் எனப் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை குறிப்பிடுவர். டானியல் புவர், டாக்டர் கிறீன் முதலானவர்களையும் பண்டிதர் (புவர்பண்டிதர், கிறீன்பண்டிதர்) என்று யாழ்ப்பாணத்தவர் அழைத்தமை சுட்டிக் காட்டத்தக்கது.

இத்தகையதொரு பின்னணியிலேதான் யாழ்ப்பாணத்துப் பண்டிதப் பாரம்பரியத்தினை நோக்க வேண்டும்.


குமாரசுவாமி புலவர்

மரபுவழித் தமிழ்க்கல்வியைப் பேணிப்பாதுகாக்கவும் பயிற்றவும் முனைந்த அறிஞர்கள் கூடி யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் என்றொரு சங்கத்தினை 1900ஆம் ஆண்டு நிறுவினர். அக்காலத்து அறிஞர்களும் பிரபுக்களும் ஒன்றிணைந்து நிறுவிய யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் தமிழ்க்கல்வி அபிவிருத்திக்கான பல திட்டங்களை வகுத்தது என அறிய முடிகின்றது. இச்சங்கம் பாலபண்டித, பண்டித பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்திப் பரீட்சை நடத்தும் நோக்கத்தினையும் கொண்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. ஆனால் இச்சங்கம் பரீட்சை நடத்திப் பட்டம் வழங்கியமை பற்றி அறியமுடியவில்லை.

1901ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச்சங்கம் ஆரம்பிக்கும் பொழுது யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் அமைப்பு விதிகளையும் பாடவிதானங்களையும் கேட்டுப்பெற்றே தமது அமைப்பு விதிகளையும் பாடவிதானங்களையும் வடிவமைத்தனர். மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவ அங்கத்தவர்களுக்காகக் குமாரசுவாமிப்புலவர் உள்ளிட்ட அறிஞர்கள் சிலர் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.


பண்டிதர் ச. பொன்னுத்துரை

மதுரைத் தமிழ்ச்சங்கம் பாலபண்டித, பண்டித பரீட்சைகளை நடத்திப் பட்டம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் இருந்து மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்டிதர் மயில்வாகனம்

பரீட்சையில் முதன்முதலாகச் சித்தியெய்தியவர் சுவாமி விபுலானந்தர் (அப்பொழுது மயில்வா கனனார்) அவர்களே என்று கூறப்படுகின்றது. இவருக்குப் பின் வவுனியாவைச் சேர்ந்த இராசையனார் மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதர் பரீட்சையிலே தேறினார் என்று அறியமுடிகின்றது. இவர் தோற்றிய - சித்தியெய்திய ஆண்டினைச் சரியாக அறியமுடியவில்லை.

மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்திய பண்டித பரீட்சையில் வடமராட்சி புலோலியைச் சேர்ந்த பார்பதி அம்மாள், பத்மாசனி அம்மாள் ஆகிய இரு பெண்மணிகள் சித்தியெய்தியமை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. 'புலோலியிலே இரு பெண்மணிகள் பண்டித பரீட்சையிலே தேறினார்கள் என்பதைக் கேள்விப்பட்டதும் எனக்கு வாயூறியது' என்று பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை குறிப்பிடுவர். எமது மாணவர் பா.மகாலிங்கசிவம் இவ்விடயம் பற்றி ஆய்வுசெய்து கட்டுரை எழுதியுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல பெண்கள் (மதுரை, யாழ்ப்பாணம்) பண்டித பரீட்சையிலே சித்தியெய்திப் பண்டிதைகளாக விளங்கியுள்ளனர். பத்மாசனி அம்மாளைத் தொடர்ந்து, பரமேஸ்வரி, சத்தியதேவி, அமிர்தாம்பிகை, மகேஸ்வரி, தங்கம்மா அப்பாக்குட்டி, பொன் பாக்கியம் முதலானோர் பண்டித பரீட்சையிலே தேறிப் பண்டிதைகளாக விளங்கினர். (இப்பட்டியல் முழுமையானது அல்ல)

யாழ்ப்பாணம் காவிய பாடசாலையிலே சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவரிடம் வரன் முறையாகப் பாடங்கேட்ட இருவர் ஈழநாட்டின் தலைசிறந்த தமிழ்ப்பண்டிதர்களாகத் திகழ்ந்தனர். ஒருவர் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, மற்றவர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை. ஈழத்துத் தமிழ்க்கல்விப் பாரம்பரியத்திலே இவர்களுக்குச் (இவர்களோடு தென்கோவை சி.கந்தையாவையும் இணைத்துக் கொள்ளல் வேண்டும்) சிறப்பானதோர் முக்கியத்துவம் உண்டு. இவர்கள் மூவரும் ஆசிரிய கலாசா லைகளிலே விரிவுரையாளர்களாக இருந்தவர்கள். இவர்களின் ஆளுமை விருத்தியினூடு உருவான ஆசிரியர்கள் பலர் இலங்கைத் தீவெங்கும் பணியாற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. இம்மூவரும் ஈழநாட்டின் தமிழ்க்கல்விப் பரம்பலுக்கும் இரசனைப் பயிற்சிக்கும் இன்றைய தமிழ்க்கல்வியின் வளர்ச்சிக்கும் வழிச மைத்தவர்கள் எனலாம். மதுரைத் தமிழ்ப்பண்டிதர்களான இவர்களின் கற்பித்தற் பணி தனித்த ஆய்வுக்குரியது.

யாழ்ப்பாணத்திலே 1921ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 17ஆம் நாள் ஆரியதிராவிடபாஷா விருத்திச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை 'வித்தியாகர்த்தர்' திரு எவான்ஸ் அவர்கள் இச்ச ங்கத்தை ஆரம்பித்து வைத்தார்கள். இதன் செயலாளராக அக்காலத்திலே வித்தியாதரிசியாகப் பணியாற்றிய முகாந்திரம் சி.சதாசிவஐயர் பணியாற்றினார். ஆங்கிலத்திலும் தமிழிலும் வடமொழியிலும் நிரம்பிய புலமையுடைய சதாசி வஐயர் மிகவும் அர்ப்பணிப்போடு இச்சங்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டார் எனக் கூறப்படு கின்றது. இச்சங்கம் தமிழிலும் வடமொழியிலும் பிரவேசபண்டித, பாலபண்டித, பண்டித பரீட்சைகளை நடத்திப் பட்டம் வழங்கியது.

1922ஆம் ஆண்டு தொடக்கம் 1950ஆம் ஆண்டுவரை இச்சங்கப் பரீட்சைகளுக்குத் தோற்றி 564 பேர் பிரவேசபண்டிதர்களாகவும், 406 பேர் பாலபண்டிதர்களாகவும், 71 பேர் பண்டிதர்களாகவும் வெளியேறினர். இக்காலப் பகுதியிலே சமஸ்கிருத பிரவேச பண்டிதர் பரீட்சையிற் 12 பேரும் பாலபண்டிதர் பரீட்சையிலே 5 பேரும் பண்டித பரீட்சையிலே 3 பேரும் தேறினர். இவர்களின் பெயர் விபரங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியமுடியவில்லை. மதுரைத் தமிழ்ச்சங்க பண்டிதர் பரீட்சையிலும் ஆரியதிராவிடபாசா விருத்திச்சங்கப் பண்டிதர் பரீட்சையிலும் ஏக காலத்தில் தோற்றிச் சிலர் சித்திபெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

பண்டித பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தும் நோக்கிலே கல்வி நிறுவனங்கள் பல நிறுவப்பட்டன. ஏற்கனவே நாவலர் பாடசாலையுடன் இணைந்து செயற்பட்ட காவிய பாடசாலை, பிராசீன பாடசாலை, பரமேஸ்வரா பண்டித ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, வைத்தீஸ்வரா வித்தியாசாலையில் நடைபெற்ற பண்டித வகுப்புக்கள் முதலானவை விதந்து குறிப்பிடத்தக்கன. இவற்றைத் தொடர்ந்து திருநெல்வேலி, மல்லாகம், தெல்லிப்பளை, கரவெட்டி, புலோலி முதலான இடங்களிலேயும் பண்டித பரீட்சைக்கான வகுப்புக்கள் நடைபெற்றுள்ளன.

ஆரியதிராவிடபாஷா விருத்திச்சங்கம், மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்திய பண்டிதர் பரீட்சையிலே தேறி ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்களுக்குச் சம்பளத்தோடு மேலதிகமாகப் பத்து ரூபா வழங்கப்பட்டதாக அறிய முடிகின்றது. இதனாலே பயிற்றப்பட்ட தமிழாசிரியர்கள் பலரும் பண்டித பரீட்சைக்குத் தம்மைத் தயார்ப்படுத்தத் தனிப்பட்ட முறையிலும், வகுப்புக்களிலும் படித்தனர் என அறிய முடிகின்றது. குறிப்பாக வித்துவசிரோமணி கணேசையர், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, பண்டிதர் ச.பொன்னுத் துரை, கந்தமுருகேசனார், வித்துவான் சுப்பையா பிள்ளை, இலக்கண வித்தகர் நமசிவாயதேசிகர், பண்டிதர் க.வீரகத்தி முதலானோர்களிடம் சென்று ஒவ்வொரு நூலாகப் பாடங்கேட்டுப் பண்டித பரீட்சையிலே தேறியவர்களும் யாழ்ப்பாணத்திலே இருந்தார்கள்.

யாழ்ப்பாணத்துப் பண்டிதப் பாரம்பரியத்திலே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாகத் திகழ்ந்தது பரமேஸ்வரா பண்டித ஆசிரிய பயிற்சிக் கலாசாலையாகும். ஏககாலத்திலே பண்டிதர் பட்டம் பெறுவதற்கான படிப்பித்தலும் ஆசிரிய பயிற்சியும் பரமேஸ்வராவிலே இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பரமேஸ்வரா பண்டித ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலே படித்து வெளியேறிய பண்டிதர்களுக்கும் மற்றைய நிறுவனங்களினூடு பட்டம் பெற்ற பண்டிதர்களுக்குமிடையே சிற்சில அமிசங்களில் வேறுபாடுகள் காணப் பட்டன எனக் கருதலாம். பரமேஸ்வராக் கல்லூரிப் பண்டித ஆசிரியப் பயிற்சி பெற்ற மாணவர்களிற் சிலர் ஆரியதிராவிடபாசா விருத்திச்சங்கப் பண்டிதர் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடையவில்லை. ஆனால் இதேமாணவர்கள் மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதர் பரீட்சைக்குத் தோற்றிச் சிறப்பாகச் சித்தியெய்தினர் எனக் கூறப்படுகின்றது. (தகவல். பண்டிதர் சி.சச்சி தானந்தன், பண்டிதர் க.நாகலிங்கம்)

வித்துவ சிரோமணி சி. கணேசையர் தாம் எழுதிய தொல்காப்பிய உரை விளக்கக் குறிப்புகளை சன்மார்க்க சபை மண்டபத்தில் குன்றக்குடி அடிகளாருக்கு கையளிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்டிதர் சதாசிவ ஐயர்



பண்டிதர் சச்சிதானந்தன்

'சாவிற் தமிழ்படித்துச் சாகவேண்டும் - எந்தன்
சாம்பல் தமிழ்மணந்து வேகவேண்டும்'



பண்டிதர் க. நாகலிங்கம்

பரமேஸ்வராப் பண்டிதர்களிடம் மரபுவழிச் சிந்தனைகளோடு நவீன முற்போக்குச் சிந்தனைகளும் காணப்பட்டன. பரமேஸ்வராவிற் படித்து மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதர்களான பலருடன் பழகும் வாய்ப்பு இக்கட்டுரையாசிரியருக்குக் கிடைத்தது. பண்டிதர் க.சச்சிதானந்தன், பண்டிதர் க.நாகலிங்கம், பண்டிதர் க.வீரகத்தி (இவர் நமது ஆசிரியர்), பண்டிதர் மயில்வாகனம் முதலியோர் விதந்து குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் இலக்கிய இலக்கண, தருக்கப் புலமையோடு கவிதை எழுதும் ஆற்றல் வாய்ந்தவர்களாகவும் விளங்கினர்.

பல்பரிமாண ஆளுமை மிக்க பண்டிதர் க.சச்சிதானந்தன் கவிதை, கட்டுரை, இலக்கணம், சிறுகதை, நாவல், ஆய்வு, வானியல் முதலிய துறைகளிலே அழியாத முத்திரை பதித்தவர். இவரது

**'சாவிற் தமிழ்படித்துச் சாகவேண்டும் - எந்தன்
சாம்பல் தமிழ்மணந்து வேகவேண்டும்'**

என்ற கவிதை மிகவும் பிரசித்தி பெற்றது. இவரைப் பற்றிய ஆய்வொன்றினைச் செய்து திருமதி நவமணி என்பவர் 'எம்பில்' பட்டம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

பண்டிதர் க.நாகலிங்கம் அவர்கள் இலக்கணத் துறையிலே மிகுந்த பயிற்சியும் தேர்ச்சியும் உடையவராகத் திகழ்ந்தார். இவர் எழுதிய செந்தமிழ் இலக்கணம் (மூன்று பாகங்கள்) இவரது இலக்கணச் சிந்தனையைத் தெளிவாகப் புலப்படுத்தப் போதுமானது. சமூக உறவுகளைப் பலமாகப் பேணியவராகவும் இவர் விளங்கினார்.

பண்டிதர் க.வீரகத்தி எமது தமிழாசிரியர். கவிதை, கட்டுரை, ஆய்வு, சிறுகதை ஆகிய துறைகளிலே ஆழமான சுவட்டினைப் பதித்தவர். சிறந்த கவித்துவ ஆற்றல் பெற்ற பண்டிதர் க.வீரகத்தி (க.வீ)இலக்கண ஆய்வுத் துறையிலே ஒப்பாரும் மிக்காருமின்றித் திகழ்ந்தவர். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திலே சிறப்பாய்வாளராகப் பணியாற்றிய பெருமை இவருக்கே உரியது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழ்ப் பண்டிதர் ஒருவரைச் சிறப்பாய்வாளராக நியமித்து இலங்கைப் பண்டிதப் பாரம்பரியத்தைக் கௌரவித்தது. பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரை இவரைத் தமிழ் இலக்கணத்திற்கு 'நியுட்டன்' எனக் குறிப்பிட்டமை எமக் கெல்லாம் பெருமை தருவதாகும். இவரது ஆக்கங்கள் காலத்தால் அழியாதவை.

பண்டிதர் மயில்வாகனம் மதுரை, யாழ்ப்பாணம், இரு பண்டித பரீட்சைகளிலும் சித்தியெய்தியவர். பல பதிகங்களைப் பாடிய இவரது விசுவேசர் புராணத்திற்கு இலங்கைத் தலபுராணங்களின் வரலாற்றிலே குறிப்பிடத்தக்க இடம் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமேஸ்வரா பண்டித ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலே மாவைக்கவுணியன் நவநீத கிருஷ்ணபாரதியார், கலாநிதி கு.சிவப் பிரகாசம் (முதன்முதலில் உளவியலிற் கலாநிதிப் பட்டம் பெற்ற இல்ங்கைத் தமிழ் அறிஞர்), சுந்தரராஜ ஐயங்கார் முதலியோர் விரிவுரை யாளர்களாக விளங்கினர். நவநீத கிருஷ்ண பாரதியார் சிறந்த கவிஞராகவும் உரையாசிரி யராகவும் விளங்கியவர். இவர்களின் கற்பித்தற் திறமை பற்றி முற்குறிப்பிட்ட பண்டிதர்கள் வாயூற ஊறக் குறிப்பிடுவார்கள்.

மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதர் பரீட்சைக்கும் ஆரியதிராவிடபாஷா விருத்திச் சங்கப் பண்டிதர் பரீட்சைக்கும் உரிய பாடத்திட்டங்கள் பெரும ளவுக்கு ஒன்றுகவே இருந்தன். ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தின் ஆரம்பகாலப் பாடத்திட்டம் பின்வருமாறு:

இலக்கணம்: தொல்காப்பியம் முழுவதும்

யாப்பிலக்கணம்: யாப்பருங்கலக்காரிகை, செய்யுளியற்றல் முக்கியமானதாகக் கட்டாய வினாவாக இருந்தது.

அணி இலக்கணம் : தண்டி அலங்காரம்

**சங்க இலக்கியங்கள்**

சிற்றிலக்கியங்கள் : சிறப்பாகத் தஞ்சை வாணன் கோவை, கரவை வேலன் கோவை

நீதிநூல்கள் : சங்கமருவிய நூல்கள், குறிப்பாகத் திருக்குறள், நாலடியார்

காவியங்கள் : சீவகசிந்தாமணி, கம்ப ராமாயணம், பெரியபுராணம், இரகுவமிசம்

பிற்காலப் பக்திப்பாடல்கள் : குமரகுருபரர் பாடல்கள்

வில்லிபுத்தூராழ்வார் பாரதம் முதலானவை.

இலக்கணமும் செய்யுளியற்றலும் இலக்கிய நயமும் சிறப்பாகக் கற்பிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இவற்றோடு சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அடிப்படை அறிவு. பிற்காலத்திலே ஆரியதிராவிடபாஷா விருத்திச் சங்கப் பாடத்திட்டத்திலே சிங்களமும் சேர்க்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குமாரசுவாமிப்புலவர், வித்துவசிரோமணி கணேசையர் முதலானோர் எழுதிய நூல்கள் பண்டித மாணவர்களுக்கு மிகுந்த உதவியாக இருந்தது என்று பண்டிதர்கள் பலரும் கூறியுள்ளனர்.

தமிழ் இலக்கிய இலக்கணங்களில் ஆர்வமும் ஈடுபாடும் கொண்ட பண்டிதர்கள் தலைசிறந்த தமிழாசிரியர்களாகத் திகழ்ந்தனர். காவியத்தின், கவிதையின் உட்பொருள் உணர்ந்து இரசனையை வளர்ப்பதிலும், மொழியைப் பிழையறப் பேச எழுதப் பயிற்றுவிப்பதிலும் இவர்கள் அதிக கவனம் செலுத்தினர். இவர்களின் கற்பித்தல் முறையைப் பற்றித் தனியானதோர் ஆய்வு செய்யப்பட வேண்டும் என்று ஏலவே குறிப்பிட்டுள்ளோம்.

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை,பண்டிதர் பொன் கிருஷணபிள்ளை, பண்டிதர் க.சச்சிதானந்தன், பண்டிதர் ச.கந்தையா முதலானோர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளிலே விரிவுரை யாளர்களாகப் பணியாற்றியமையால் இவர்களின் கற்பித்தல் மரபு தமிழாசிரியர்களுக்கு ஊடாக இலங்கை முழுவதும் வியாபித்தது.

பண்டிதர்கள் பலர் பாடசாலை ஆசிரியர்களாக இலைமறைகாய் போல இருந்து தமிழ்க்கல்வியை

> 1901ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச்சங்கம் ஆரம்பிக்கும் பொழுது யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் அமைப்பு விதிகளையும் பாட விதானங்களையும் கேட்டுப்பெற்றே தமது அமைப்பு விதிகளையும் பாட விதானங்களையும் வடிவமைத்தனர்.

வளர்த்துள்ளனர். இப்பண்டிதர்களின் பெயர்ப் பட்டியலைத் தருவது நமது நோக்கமன்று. ஆனால் அந்தப் பட்டியல் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியது. பண்டிதர் கடம்பேசுவரன், கவிஞர் சோ.பத்மநாதன் அவர்களின் குன்றா உழைப்பாலே நின்றுநிலைக்கும் ஆரியதிராவிடபாஷா விருத்திச் சங்கம் 'மீண்டும் தொடங்கும் மிடுக்காக' பண்டித வகுப்புக்களையும் பரீட்சையையும் நடத்திப் புதியதோர் பண்டிதப் பாரம்பரியத்தினை உருவாக்கித் தமிழ்மொழி, இலக்கியக் கல்வியை வளர்க்க வேண்டுமென்று அவாவுறுகிறோம்.

குறிப்பு : பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, பண்டிதர்கள் க.வீரகத்தி, க.நாகலிங்கம், க.சச்சி தானந்தன், இலக்கண வித்தகர் நமசிவாயதேசிகர், திரு. மயில்வாகனம், ஆர்.கே.முருகேசன் முதலி யோருடன் பழகியதன் வெளிப்பாடாகவே இக்கட்டுரை அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அசைவு கொண்டிருக்கும் ஆழ்ந்த பொருள்

- மோகனப்பிரியன் தவராஜா

அசைவு எனும் அழகிய பதம் உலகத்தின் இயக்கத்திலும் மானுட இதயத்தின் துடிப்பிலுமே மூலாதாரமாக விளங்குகின்றது. நடராஜர் ஆடும் போது ஏற்பட்ட தூசி அணுக்களால் உலகம் உருவானதென்றும் நடராஜ தத்துவத்தினில் எம்பெருமானின் கையில் இருக்கும் உடுக்கை நாதத்தினால் உலக உயிர்கள் உருவாகுகின்றன என்றும் படைப்பிற்கான இதிகாசங்கள் பல வரை விலக்கணங்களை வரைகின்றன. சிவபெருமான் தண்டு முனிவருக்கும் பரத முனிவருக்கும் தாண்டவங்களை உருவாக்கி கற்பித்தார் என்று நாட்டிய சாத்திரத்தின் நான்காவது அத்தியாயமான தாண்டவ லட்சணத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. சிவபெருமானின் தாண்டவம் உலக நலனை நோக்கியே நிகழ்த்தப்படுவ தாகவும் அதனுடைய நோக்கமானது உயிர்களை மலங்களின் (குற்றங்கள்) பிடியிலிருந்து விடுவிப்பதாகும் எனவும் குறிப்பிடப்படுகின்றது. சிவதாண்டவத்தில் சிவனின் உடலமைப்பு, அணிகலன்கள், கைகளில் உள்ள படைக்கலன்கள், தலைமுடி மற்றும் பாதங்களின் அமைப்பு ஆகிய அனைத்திற்குமே மெய்ப்பொருள் விளக்கங்கள் ஞானிகளால் எடுத்துரைக்கப் படுகின்றன.

இதனையேதான் நடராஜ தத்துவம் என்று அழைக்கின்றனர்.

நடராசர் தோற்றத்தின் பல்வேறு அம்சங்களுக்கான விளக்கங்களும் காரணங்களும் புராணக்கதைகள் ஊடாகவும், தத்துவங்களூடாகவும் சைவ நூல்களிலே காணக்கிடைக்கின்றன. சிவனின் நடனத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தோற்றம் இறைவனின் ஐந்தொழில்களான படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பவற்றை குறித்து நிற்கின்றன. சைவ சாஸ்திரங்கள் கூறுகின்றன. உடுக்கை படைத்தலையும் அடைக்கலம் தரும் கை காத்தலையும் தீச்சுவாலை அழித்தலையும் தூக்கிய கால்கள் அருளல் ஆகிய முத்தி நிலையையும் குறிப்பதாகக் கொள்ளப்படுகின்றது. ஒற்றைக் காலில் நின்றாடும் போதும் நடராஜனின் தலை சமநிலையில் நேராக நிற்கிறது. ஆடுவது தாண்டவமானாலும்சிற்சபை வாசனின் முகமோ சாந்த ஸ்வரூபமாக பிரகாசிக்கிறது. இரண்டு காதுகளிலும் வளைந்த காதணிகள்: வலது காதில் பாம்பு வடிவ வளையமும்.

இடது காதில் கனிவாய் குழையும் தோடு வளையமும். இந்தக் கோலத்திலும் உமையுமும் காணப்படுகிறது. தன்னில் பாதி என்பதை இது உணர்த்துகிறது. முக்கண்ணனின் நெற்றியில், புருவங்களுக்கு மத்தியில், நெருப்பாய் எரியும் மூன்றாவது கண் முக்காலத்தையும் கடந்த ஞானத்தைக் குறிக்கிறது.

பொன்னம்பலவனின் ஆனந்த தாண்டவத்தில் பல திசைகளிலும் பறக்கிறது அவனது கேசம். கேசத்தில் ஒரு சீராக முடிச்சுகளைக் காணலாம். அந்த கேச முடிச்சுகளில் சேஷநாகம் - கால சுழற்சியையும் கபாலம் - இவன் ருத்ரன் என்பதையும் கங்கை - அவன் வற்றா அருளையும் ஐந்தாம் நாள் பிறைச்சந்திரன் - அழிப்பது மட்டுமல்ல, ஆக்கத்திற்கும் இவனே கர்த்தா என்பதையும் குறிக்கின்றன. பின் இடது கரத்தில் அக்னி, சிவன் - சம்ஹார மூர்த்தி என்பதைக் காட்டுகிறது. 'நமசிவாய' என்னும் பஞ்சாக்ஷர மந்திரத்தின் (ஐந்தெழுத்து மந்திரம்) முதல் எழுத்தான 'ந' வைக் குறிக்கிறது இந்தக் கரம். ஊன்றி நிற்கும் அவனது வலது காலோ 'ம' என்ற எழுத்தைக் குறிக்கிறது. மேலும் வலது கால் திரோதண சக்தியைக் காட்டுகிறது. இந்த சக்தியால்தான் மனிதன் உயர் ஞானத்தை தேடலினால் அனுபவ அறிவாகப் பெறுகிறான்.

வலது காலின் கீழே இருப்பவன் அபஸ்மாரன் எனும் அசுரன். அவன் ஆணவத்தினால் மனித மனம் கொள்ளும் இருளைக் குறிக்கிறான். அவனோ நடராஜனின் தூக்கிய இடது காலைப் பார்த்தபடி இருக்கிறான். தஞ்சம் வேண்டி தூக்கிய இடது கால், ஆணவம் மற்றும் மாயை ஆகியவற்றின் பிடியில் இருந்து விடுபட்டு ஆண்டவனின் அனுக்கிரகத்தினை அடைந்திட வழி வகை செய்யும்.

முன் இடது கரமோ, பஞ்சாக்ஷர மந்திரத்தின் அடுத்த எழுத்தான 'வா' வைக் குறிக்கிறது. இந்தக் கரம் யானையின் துதிக்கைபோல் இருக்க, தூக்கிய இடது காலில் மாயையை அகற்றி அருள் தரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனுக்கிரக சக்தி இருக்கிறதென கைகாட்டி சொல்கிறது.

பின் வலது கரம், பஞ்சாக்ஷர மந்தரத்தின் அடுத்த எழுத்தான 'சி' யைக் குறிக்கிறது. அந்தக் கையில் தான் உடுக்கை என்னும் ஒலி எழுப்பும் இசைக் கருவி இருக்கிறது. இந்த உடுக்கையின் ஒலியில் இருந்துதான் ப்ரணவ நாதம் தோன்றியது என்பார்கள். அடுத்ததாக, ஆடல் வல்லானின் முன் வலது கரம் அபயம் அளித்து, 'அஞ்சாதே' என்று அருளும் காட்சி, பஞ்சாக்ஷர மந்திரத்தின் கடைசி எழுத்தான 'ய' வைக் காட்டுகிறது. நடராஜனின் திருமேனியில் நாகம் ஒன்று தரித்திருப்பதைப் பார்க்கலாம். இந்த நாகம் - சாதாரணமாய்ச் சுருண்டு இருக்கும்; யோகத்தினால் எழுப்பினால் உச்சி வரை மேலெழும்பிடும் குண்டலினி சக்தியைக் குறிக்கிறது. அவனது இடையைச் சுற்றி இருக்கும் புலித்தோல் இயற்கையின் சக்தியைக் காட்டுகிறது. அதற்கு சற்று மேலே கட்டியிருக்கும் இடைத்துணியோ அவன் ஆடலில் இடது பக்கமாய்ப் பறந்து கொண்டிருக்கிறது.

பொன்னம்பலம் தன்னில் நின்றாடும் நடன சபேசனைச் சுற்றி இருக்கும் நெருப்பு வட்டம், அவன் ஞானவெளியில் தாண்டவமாடு வதைக் காட்டுகிறது. ஒவ்வொரு தீச்சுவாலையிலும் மூன்று சிறிய சுவாலைகளைக் காணலாம். அது, காலத்தின் தொடக்கம், நடப்பு மற்றும் முடிவு என்பவற்றைக் குறித்திடும். நடராஜன் நின்றாடும் 'இரட்டைத் தாமரை' பீடத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் 'மஹாம்புஜ பீடம்'. இந்தப் பீடத்திலிருந்துதான் அண்ட சராசரமும் விரிவடைகிறது. சிவபிரான் ஐந்தொழில்கள் அனைத்தையும் வெவ்வேறு வடிவில் நின்று புரிகிறார் என நால்வர் உட்பட பல நாயன்மார்கள் இயம்பியுள்ளனர்.

இதில் நடராசர் வடிவத்தில் கூத்தராக நின்று ஆடும் சிவன் இந்த ஐந்துதொழில்களையும் ஒருங்கே செய்ய வல்லமை பெற்றவர் என்ற கருத்துண்டு.

பரதநாட்டிய கரணங்களை ஆண்கள் கையாளும் பொழுது, அது தாண்டவம் என்று அழைக்கப் பெறுகிறது. தாண்டவம் என்பது உள்ளிருக்கும் தெய்வீக பாவனைக்கேற்ப உடலின் பல்வேறு உறுப்புகள் இணைந்து இயங்குவதாகுமென பி. ஆர். நரசிம்மன் 'சைவ மரபும் மெய்ப்பொருளியலும்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இந்து மத ஆண் கடவுள்களான நடராஜர், விநாயகன், முருகன், திருமால் ஆகியோர் தாண்டவங்களை ஆடுபவர்களாக புராணங்களிலும் இந்து சமய நூல்களிலும் சித்திரிக்கப்படுகின்றனர். விநாயகரின் இன்னுமொரு தோற்றம் நர்த்தன கணபதியாகக் கொண்டாடப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

சிவபெருமானின் இளைய குமாரனான முருகப்பெருமான் குடை தாண்டவம், துடி தாண்டவம் ஆகிய தாண்டவங்களை ஆடுவதாகக் கூறப்படுகிறது, வைணவக் கடவுளான திருமால் தனது கண்ணன் அவதாரத்தில் காளிங்க நர்த்தனம் என்ற தாண்டவம் ஆடியதாக வைணவ நூல்கள் கூறுகின்றன.

இவை தவிர அல்லி, குட, மல் தாண்டவங்களையும் திருமால் ஆடியதாக நூல்கள் தெரிவிக்கின்றன. மேற்குறிப்பிட்ட தாண்டவங்களுக்கான எடுத்துக்காட்டுக்களை சான்று பகரும் முகமாக, இளங் கோவடிகளினால் இயற்றப்பட்ட சிலப்பதிகாரத்தின் அரங்கேற்று காதையில் மாதவியின் அரங்கேற்றத்தில் அவள் நிகழ்த்திய பதினொருவகை ஆடல்களில் திருமாலின் மேற்குறிப்பிட்ட தாண்டவங்களையும் முருகப்பெருமானுடைய தாண்டவங்களையும் ஆடியமை குறிப்பிடத்தக்கது.

### நடராஜ தோற்றத்தின் தத்துவம்

★ வலக்கையிலுள்ள உடுக்கை-படைக்கும் ஆற்றலைக் குறிக்கும். (கீழிருக்கும் தாமரையும் பிறப்பிற்கு வழிவகுக்குமெனக் கூறுவர்)

★ இடக்கையிலுள்ள நெருப்பு- அழிக்கும் ஆற்றலைக் குறிக்கும்.

★ இன்னொரு வலக்கையின் உட்புறத்தைக் காட்டுவது அருளும் ஆற்றலைக் குறிக்கும்.

★ இன்னொரு இடக்கை துதிக்கை போல் உட்புறத்தினை மறைத்தவாறு இருப்பது மறைக்கும் ஆற்றலைக் குறிக்கும்.

★ தூக்கிய பாதமும் ஆணவத்தை மிதித்தாடும் இன்னொரு பாதமும் மனமாயை உட்பட தீய சக்திகளிலிருந்து காக்கும் ஆற்றலைக் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய மரபில் வடக்கிருத்தல்

திருமதி. இராஜினி தேவராஜன்

உண்ணாது, அருந்தாது, உறங்காது தவம் இருந்து இறைவனிடம் வேண்டுதல்களைச் செய்வதை அறிவோம். அவ்வாறே, அதனைத் தழுவி தமது கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகத் தொழிலாளர்கள் நிர்வாகத்திடமும் மக்கள் அரசாங்கத்திடமும் உண்ணா நோன்பு அனுஷ்டிப்பதை இன்று அன்றாட வாழ்க்கையில் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். தமது வேண்டுதல்கள், கோரிக்கைகள் நிறைவேறாத நிலையில் உயிர் போக்குவதையும் பார்க்கின்றோம். இந்த உண்ணா நோன்பு பண்டைய காலத்திலிருந்தே இருந்து வந்திருக்கின்றது என்பதை பண்டைய இலக்கிய நூல்கள் சான்று பகர்கின்றன.

வடக்கிருத்தல் என்பது ஊர்ப்புறத்தே தனியிடத்தில் அறம் கூறும் சான்றோர் சூழ புல்லைப்பரப்பி அதன் மீதமர்ந்து உண்ணா நோன்பு இருத்தலாகும். இப்படி இருப்பதால் வீடுபேறும், மீண்டும் பிறவா நிலையும் கிடைக்கும் என்பது அன்றைய கால நம்பிக்கையாகும். இந்த உலகத்தை வெறுத்து மேல் உலகு அடைய விரும்பியவர், மேற்கொள்ளும் தற்கொலை முயற்சி 'வடக்கிருத்தல்' ஆகும். இந்த உலக ஆசாபாசங்களிலிருந்து தம்மை விடுவித்து விரதத்தால் தம்மை மெலிவித்து, யோகப்பயிற்சியால் உயிரை விடுத்தல் பண்டைய மரபில் இருந்து வந்த வடக்கிருத்தல் ஆகும். இது உண்ணா நோன்பு கொண்டு உயிர் துறத்தலை ஒக்கும்.

பண்டைய காலத்தில், தாம் உறைந்த இடத்தை விடுத்துப் புண்ணிய திசையாகிய வடதிசை சென்று தங்குதலும், அங்கிருந்தும் மீளாமல் நியமத்துடன் வடக்கு நோக்கி இருந்து யோகப் பயிற்சியால் உயிரை விடுத்தல் மரபாக இருந்தது. இதனை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான புறநானூறு பாடல் எண்கள் 63, 66, 214, 216, 218, 336 உம் அகநானூறு 55 உம் எடுத்துரைக்கின்றன.

சேரமான் பெருஞ்சேரலாதான் கரிகால் பெருவளத்தானோடு போர்புரிகின்றான். இந்தப்போரில் சேரலாதன் மார்பில் பட்ட வேல் ஊடுருவிக் கிழித்துக் கொண்டு பின்புறமாகச் சென்று விடுகிறது. இதனை அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கபிலர் இவ்வாறு மூலக்கனல் வழியே சென்று இறந்தார் என்றுதான் கபிலர் கல்வெட்டு கூறுகிறது.

புறப்புண்ணாகக் கருதி நாணத்தால் வடக்கிருந்து உயிர் விடுகின்றான். இவ்வரசன் வடக்கிருந்து உயிர் நீத்த 'இன்னா இன்' உரையைச் சான்றோர்கள் கேட்ட போது, சேரலாதன் மரிக்கின்றான் என்பதனால் இன்னாதாகவும் புறப்புண் பழிதீர வடக்கிருந்து உயிர்விடுக்கிறான் என்பதனால் இனிமையாகவும் அவர்களுக்கு அமைகின்றது. அச்சான்றோர்களும் அவன் இருக்கும் இடம் வந்து உயிர்நீத்தனர் என்கிறது அகநானூறு.

'கரிகால் வளவனொடு வெண்ணிப்
பறந்தலைப் பொருது புண் நாணிய சேரலாதன்
அழிகள மருங்கின் வாள் வடக்கிருந்தென,
இன்னா இன் உரை கேட்ட சான்றோர்
அரும் பெறல் உலகத்து அவனொடு செலீஇயர்
பெரும் பிறிது ஆகியாங்கு'
(அகம் 55)

எனக் கூறுகின்றது.

கோப்பெருஞ்சோழன் தன்னோடு இயைந்து செல்லாத தன் மக்களோடு போர் புரிந்தான். சான்றோர்களின் அறிவுரையால் அச்செயலைப் பின்னர் நிறுத்துகின்றான். ஆனாலும் உலகம் வெறுத்த மனநிலையில் வடக்கிருந்து உயிர் துறக்கத் தீர்மானிக்கின்றான்.

அப்போது தன் உயிர் நண்பன் பிசிராந்தையார் இச் செய்தியை அறிந்தால் தம்முடன் வந்து வடக்கிருப்பார் என்று நன்கு உறுதியாக அறிந்திருந்த அவன் அவருக்கும் தன் பக்கத்தில் இடம் வைக்குமாறு சொல்கின்றான். அவர் சொன்னதும் நினைத்ததும் போலவே இச் செய்தியைக் கேட்ட பிசிராந்தையார் அங்கு வந்து விடுகின்றார்.

இதனைப் பார்த்த சான்றோர்கள் வியந்து, பாராட்டிப் பேசினர் என புறநானூற்றுப் பாடல்கள் கூறுகின்றன. பிரமச்சாரியான கபிலர், தமது உற்ற நண்பரான பாரியின் மகள்மாரை, அவர் உயிர் நீத்தபின் பொறுப்பெடுத்து மலையருக்குத் திருமணம் செய்து வைத்துப் பின் திருக்கோவலூரிலுள்ள கபிலர் குன்றில் வடக்கிருந்து உயிர் நீத்தார். எனவே சங்க காலத்திலேயே புறப்புண் நாணிய வேந்தரும் தம் உயிரை மாய்க்கக் கருதினோரும் மேற்கொண்ட ஒரு ஒழுக்கமாக இந்த உண்ணா நோன்பாகிய 'வடக்கிருத்தல்' அமைந்திருந்தது என அறிகின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில மொழித்தளத்தில் நின்று நவீன தமிழை வளப்படுத்திய ஏ.ஜே. கனகரட்ணா

- பேராசிரியர். சபா.ஜெயராசா -



காலனித்துவச் சூழலில் முற்றிலும் ஆங்கில வழிக்கல்வியை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலே கற்ற ஏ.ஜே.கனகரட்ணா அவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகத்திலே ஆங்கிலச் சிறப்புப் படிப்பை மேற்கொண்டார். அவரின் ஆங்கில இலக்கியப் புலமை மீத்திறன் கொண்டது. அந்தத் திறனை அவர் நவீன தமிழியலுக்குத் திருப்பியமை ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும்.

தமிழ்மொழி மீது தமக்கு ஏற்பட்ட ஆழ்ந்த ஈடுபாட்டுக்குத் தனிச்சிங்களச் சட்டமே காரணம் என்று கூறும் அவரது நோக்கின் ஆழம் விதந்து கூறத்தக்கது. தமது வாயால் அவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "ஆங்கிலம் அரச மொழியாகக் கொலு வீற்றிருந்த காலத்தில் கல்விப் பயிற்சி பெற்றவன் நான். எனவே தமிழை முறையாகக் கற்கும் வாய்ப்பு இல்லாது போய் விட்டது. தனிச்சிங்களச் சட்டத்தின் அனுகூலம் - பிரதிகூலம் பற்றிய விசாரணை தேவையில்லை. ஆனால் அச்சட்டம் காரணமாகத் தமிழ் அபிமானம் மீதூர்தல் பெற்றவர்களுள் நானும் ஒருவன்" (*'மத்து', முன்னுரை)*

வீட்டிலும், கல்லூரியிலும், பல்கலைக் கழகத்திலும் ஆங்கிலமொழிச் சூழலில் உறவாடிய அவர் வரன் முறையாகத் தமிழ் கற்றவர்போன்று தமிழில் எழுதியமை அவரது ஆளுமை ஆற்றலின் பிறிதொரு பரிமாணத்தைக் குறிப்பிடுகின்றது. அவரின் ஆங்கிலப்புலமை கருத்து நிலையிலும் எடுத்தியம்பல் நிலையிலும் தமிழுக்கு வளமூட்டியது. அவரிடத்தே காணப்பெற்ற வாசிப்பு வேட்கை எழுத்துக்களுக்குச் செம்மையும் வலுவும் வழங்கியது.

"எந்த நபர் பல்கலைக்கழக நூலகத்தை அதிகம் பயன்படுத்தி அதிக நூல்களை வாசிக்கின்றார்" என்று மேற்கொள்ளப்பட்ட ஒரு சிறிய ஆய்வில் ஏ.ஜே. கனகரட்ணா அவர்கள் முதலாவது நிலையில் இருந்தார் என்ற தகவலும் உண்டு. ஏ.ஜே. அவர்களின் தனித்துவமான எழு நடைக்கு (Style) ஓர் எடுத்துக்காட்டு வருமாறு:

வாழ்க்கை சிலந்திவலை ஒன்றிற்கு ஒப்பானது. அதன் ஓர் இழையைத் தொட்டால் அதன் அதிர்வு வலை முழுவதும் வியாபிக்கும். வாழ்க்கையின் ஒருமையை கீழைத்தேய மரபு வலியுறுத்துகின்றது. இப்பொழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரியலாளர்களும் இதனைவலியுறுத்துகின்றனர். இயற்கையில் மிகநுட்பமான நேர்த்தியான சமநிலை உண்டு. இதனைக் குலைத்தல் கேட்டையே விளைவிக்கும். விஞ்ஞானத்தின் தீவிர வளர்ச்சியினால் விஞ்ஞானிகள் சிலர் தாமே சகல வல்லவர்களென இறுமாப்புக் கொள்ளு கிறார்கள். அவர்கள் இயற்கையின் புனிதத் துவத்தைக் கனம் பண்ண மறுக்கிறார்கள் ("ஒலிக்காத இளவேனில்")

ஆங்கில மொழிவாயிலான அவரது வாசிப்பு பரந்த தளத்தைக் கொண்டது. அரசியல், பொருளியல், சமூகவியல், சூழலியல், உளவியல், திரைப்படவியல், திறனாய்வியல், மானிடவியல், தொன்மவியல், அறிவியல் என்ற பரந்த துறைகளில் ஊடுருவிச் சென்ற வாசிப்புத் தேட்டத்தை அவர் தமிழுக்குக் கொண்டுவந்தமை ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும். அந்த வகையிலேதான் அவரது ஆக்கங்களைத் தொகுத்து 'மத்து' என்ற நூலை அரசு வெளியீட்டினர் 1970ஆம் ஆண்டிலே வெளிக்கொண்டு வந்தனர்.

உயர்நிலையான எழுத்தாக்க மரபு, உயர் நிலையான வாசிப்பு மரபு, உயர் நிலையான திறனாய்வு மரபு ஆகியவற்றின் உருவாக்கத்தில் ஏ.ஜே. அவர்களின் பங்களிப்பு முக்கியமானது.

தமது ஆங்கிலச் சிறப்புப் பட்டத்தை நிறைவேற்றிக் கொண்ட அவர் சிறிதுகாலம் பாடசாலை ஆசிரியராகப் பணியாற்றிவிட்டு லேக்ஹவுஸ் வெளியீட்டு நிறுவனத்தின் ஆங்கில இதழாகிய Daily News ஆசிரிய பீடத்தில் இணைந்து கொண்டார். அக்காலத்தில் அவர் மேற்கொண்ட பணிகள் முக்கியமானவை. இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் சிறுகதை களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியி ட்டமை விதந்து கூறத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும்.

தமிழ் அறியாதாரும், இந்நாட்டுத் தமிழ்ச் சிறு கதையின் வளத்தினையும் பரிமாணங்களையும் தரிசனங்களையும் கலை நீட்சியையும் கண்டு கொள்வதற்குரிய வாயிலை ஏற்படுத்தியமை ஒரு முக்கிய செயற்பாடு. தேசிய இலக்கியம் பற்றிய கருத்தாடல் மேலோங்கிய காலகட்டத்தில் அந்தச் செயற்பாடு மேலும் வலுவுள்ள பங்களிப்பாயிற்று.

தொடர்ந்து அவர் 'Times of Ceylon' மற்றும் 'Illustrated Weekly of India' சஞ்சிகைகளிலும் இந்நாட்டின் தமிழ் எழுத்தாளர்களின் சிறு கதைகளை ஆங்கில மொழிப்படுத்தி வெளி யிட்டார்.

'மொழிபெயர்ப்பு' என்ற கலைக்கு வளமும் வலுவும் ஊட்டியவர் ஏ.ஜே.கனகரட்ணா. அவர் ஓர் 'இருநிலை' மொழிபெயர்ப்பாளர். இருநிலை என்பது இரண்டு மொழிகளிலும் மொழி பெயர்ப்புச் செய்யும் திறனாகும். ஒரு நிலை மொழிபெயர்ப்பானது ஒரு மொழியில் மட்டும் மொழிபெயர்ப்புச் செய்யக்கூடிய திறனாகும். உதாரணமாக சிலர் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்ப்புச்செய்யும் திறன் கொண்டிருப்பர். அதே வேளை தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கு மொழிபெயர்ப்புச் செய்ய முடியாதிருப்பர். இலக்கண, இலக்கிய வளத்தில் ஆழ்ந்து ஊறிய ஏ.ஜே. அவர்களின் மொழிபெயர்ப்புக்கள் ஆங்கில மொழியிலும் வளமாக அமைந்தன. தமிழிலும் அவ்வாறு அமைந்தன. யாழ்ப்பாணத்து மண் வளத்தைச் செம்மையாக்கி ஆங்கில மொழிக்கு எடுத்துச் சென்ற எழுத்தாளர் என்றும் அவரைக் குறிப்பிடலாம்.

புனைகதைசாரா நிலையில் அவரது எழுத்தாக்கங்கள் தனித்துவமானவை. யாழ்ப் பாணத்திலிருந்து வெளிவந்த 'Cooperator' என்ற ஆங்கிலச் சஞ்சிகையிலும், 'கூட்டுறவாளன்' தமிழ்ச் சஞ்சிகையிலும் எழுதிய கட்டுரைகள் வாசிப்பின் வழியாக அவர் திரட்டிய பெரும் தகவல்களைக் கையளிப்புச் செய்தன. தகவல்களை மட்டும் வழங்கி விடாது அவற்றினூடாக சமூக உற்றுணர்வையும், பொறுப்பியத்தையும் (Account ability) தட்டியெழுப்பும் செயற்பாட்டை மேற்கொண்டார். 'வாசிப்பின் வழியான பொறுப் புணர்ச்சி' என்ற அனுபவத்தின் உருவாக்கத்தில் அவர் பங்கு கொண்டிருந்தமை குறிப் பிடத்தக்கது.

அவரின் எழுத்துக்கள் செறிவுமிக்கவையாக இருந்தன. வேண்டாத புனைவுகளை அவர் சேர்த்துக் கொண்டதில்லை. மொழி அலங்கா ரத்திலும் அவர் ஈடுபட்டதில்லை. ஆங்கில த்திலோ, தமிழிலோ தாம் கூற வந்தவற்றைச் செறிவுடனும் ஆழத்துடனும் கூறும் மொழிச்சி க்கனம் அவரிடத்தே காணப்பட்டது. அவர், 'நுண்மதிநேர்மை' (Intellectual Honesty) என்ற தத்துவத்துடன் வாழ்ந்தவர். விலைபோகாத ஓர் எழுத்தாளராக இயங்கியவர். ஒரு திறனாய்வாளர் என்ற நிலையில் வேண்டுமென்று சிலரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துக்களை உயர்த்தவோ அல்லது தாழ்த்தவோ முனையவில்லை. தரச்சிறப்புமிக்க எழுத்தாக் கங்களுக்கு மதிப்பளித்தார். தரம் மிக்கவை நீடித்து வாழும் என்பது அவரது நம்பிக்கை.

பத்திரிகைகளில் பணிபுரிந்த காலத்தில் அவர் செய்திகளையும் கட்டுரைகளையும் புறவய நிலையில் (Objective) நின்று எழுதினார். தமது விருப்புவெறுப்புக்களை ஏற்றிக்கூறாது, தருக்க நிலையில் தொடர்புகளைக் கண்டறிந்து விளக்கியவர். இதழியல் பணியைப் பெறுமதி மிக்கதும், பொறுப்பு வாய்ந்ததுமான வாண் மையாக கருதினார். 'முகமனுக்காக' இதழியலைப் பயன்படுத்தாத கொள்கையிலே தளராத உறுதியாக இருந்தார். இலங்கையின் தமிழ் சிற்றிதழ்களின் வளர்ச்சியிலும் அவரது பங்களிப்பு முக்கியமானது. கனதியான எழுத்தாக்கங்களும் உயர் நிலையான வாசிப்பும் தரமான சிற்றிதழ்களின் பரிமா ணங்களாக அமைந்தன. அவர் காலத்தில் வெளிவந்த சிற்றிதழ்களுக்கு வெளித்தோன்றாத கரங்களாக நின்று இயங்கினார். கட்டுரைகள் எழுதுவோரும் நூல்கள் எழுதுவோரும் அவரிடம் பிரதிகளைக் காட்டி செப்பம் செய்து கொள்ளல் உண்டு. சில சமயங்களில் அவர் அவற்றை முற்றாகத்திருப்பி எழுதிக் கொடுத்த சம்ப வங்களும் உண்டு.

மிகுந்த நெருக்கடியான கால கட்டங்களில் யாழ்ப்பாணத்தை விட்டு இடம்பெயராது மக்க ளோடு மக்களாக வாழ்ந்த ஆய்வறிவா ளர்களுள் அவரும் ஒருவர். எந்த அரசியல் இயக்கங்களோடும் தம்மை இணைத்துக் கொள்ளாது செயற்படும் ஆய்வறிவாளராய் அவர் தொழிற்பட்டார். தேசிய இனப்பிரச்சினையை காரணகாரிய அடிப்ப டையில் ஆராயும் திறனுடன் அவரின் தனித்துவம் மேலோங்கியிருந்தது. அதனால் அவரது எழுத்துக் களும் கருத்துக்களும் தர்க்க நிலையில் நோக்குவோரிடத்துச் செல்வாக்குப் பெற்றிருந்தன. 'Saturday Review' யாழ்ப்பாணத்தில் வெளிவந்த காலத்தில் அவரது எழுத்துக்கள் மிகுந்த நிதானமும் கருத்துச் செறிவும் கொண்டவையாய் அமைந்திருந்தன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அவர் ஆங்கிலம் கற்பிக்கும் மொழித் துறையில் இணைந்து கொண்டமை ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும். பல்கலைக்கழக மாணவரின் ஆங்கில அறிவு மேம்படுவதற்கும் ஆங்கில எழுத்தாக்கங்களில் மாணவரை ஈடுபட வைப்ப தற்கும் அவர் மேற்கொண்ட முயற்சிகள் தனித்துவ மானவை. ஏ.ஜே அவர்களும் பிறிதோர் ஆங்கில விரிவுரையாளராகிய கலாநிதி சுரேஸ் கனகராஜா அவர்களும் ஆங்கில மொழி வளவிருத்தியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மேற் கொண்ட முயற்சிகள் நிலைத்த பதிவுக்குரியவை.

பல்கலைக்கழகச் சூழலில் கனதியான உரையாடல் மரபு வளர்வதற்குரிய செயற்பாட்டில் ஏ.ஜே. முழுமையாகப் பங்கு கொண்டார். பல்கலைக்கழக விரிவுரையாளர் ஓய்வு கொள்ளும் சிரேஷ்ட பொது அறையில் கலை இலக்கியம் தொடர்பான ஆழ்ந்த உரையாடல்களை வளர்ப் பதில் அமரர்களான பேராசிரியர் கா. சிவத்தம்பி, ஏ.ஜே. கனகரட்ணா, பேராசிரியர் சோ. கிருஷ் ணராஜா ஆகியோர் சிறப்பாக பங்கு கொண்டனர். தமது புலமை அனுபவங்களையும் வாசிப்புத் தேட்டங்களையும் அவர்கள் இளம் விரிவுரை யாளர்களுடன் பகிர்ந்து கொண்டு புலமைச் சூழலை வலுப்பெறச் செய்தனர். ஏ.ஜே. கனக ரட்ணா அவர்கள் எழுதிய 'மார்க்சியமும் இலக்கியமும்' என்பது காலத்தின் தேவையறிந்து சமர்ப்பிக்கப்பட்ட ஆக்கமாகும். 1981ஆம் ஆண்டில் அந்த நூல் வெளிவந்தது. மார்க்சியத்தை நேசிக்கும் இளம் தலைமுறையினருக்குச் சமர்ப் பணமாகவும் ஏற்கனவே 1966ஆம் ஆண்டில் அவர் எழுதிய கட்டுரையைத் தாங்கியுமிருந்தது.

'மார்க்சிய இலக்கியம்' மார்க்சிய விமர்சனம், சோசலிச நடப்பியல் தொடர்பான கருத்தாடல்கள் உலகளாவிய முறையில் நிகழ்ந்து வந்த நிலையில் அதன் நீட்சி இலங்கையிலும் எற்பட்டது. மார்க்சியக் கருத்தியலோடு ஒன்றித்து நின்று சோசலிச நடப்பியற் கோட்பாட்டை பரிசீல னைக்கு எடுக்கும் விமர்சனம் ஒருபுறம் வளர்ந்து கொண்டிருந்தது.

மார்க்சிய தளத்தில் நின்று சோசலிச நடப்பியலைத் திறனாய்வு செய்யும் பெருவழியை லெனின் அவர்களே திறந்து விட்டார். அந்தச் செய்தியை வெளியிடும் அலன்ஸ்விஞ்வுட் என்பவரின் எழுத்தாக்க மொழிபெயர்ப்பு நூலின் முதற் கட்டுரையாக இடம்பெற்றுள்ளது. இலக்கியத்தில் உருவமும் உள்ளடக்கமும் தொடர்பான சர்ச்சை மேலோங்கியிருந்த கால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கட்டத்தில் றெஜி சிறிவர்த்தனா அவர்கள் எழுதிய ஆங்கிலக் கட்டுரையை ஏ.ஜே. தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டமை ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும். அதன் வழியாக உருவமும் உள்ளடக்கமும் ஒன்றையொன்று இறுகத் தழுவி நிற்கும் அமைப்பியற் செம்மை விளக்கத்துக்கு உள்ளாக்கப்பட்டது.

ஏ.ஜே.புகழை விரும்பாதவர்; விருதுகளை ஒதுக்கித் தள்ளியவர் ; கௌரவங்களைப் புறக்கணித்தவர்; தமக்கென பொருள் பண்டங்களையும் சம்பாதித்துக் கொள்ளாதவர் தூய்மையான பிரமச்சாரியாகவே வாழ்ந்தவர்; கவர்ச்சிமிக்க தனித்துவமான உரையாடலையும் ஊடாட்டங்களையும் கொண்டவர்; அவரது பேச்சில் உயர் நிலையான நகைச் சுவை உள்ளடங்கியிருக்கும் பல்கலைக்கழகத்தில் அவர் பதவி உயர்வுகளை விரும்பாது வாசிப்பிலும் எழுத்திலும் கற்பித்தலிலும் ஊன்றிய கவனம் செலுத்துபவராக இருந்தார். நேர்க்கருத்துடன் எதிர்க்கருத்து மாற்றுக் கருத்து ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார். அவற்றினூடாகவே செழுமையான கருத்தாடல் மேலெழ முடியும் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தார். அதுவே மார்க்சிய திறனாய்வின் இலக்கு என்பது குறிப்பிடத்தக்கது.

அவருடைய காலத்தில் மாணவர்களாலும் நாடக வியலாளராலும் அளிக்கை செய்யப்பட்ட நாடகங்களை ஒப்பியல் நோக்கிலும் பகுப்பாய்வு நோக்கிலும் வினைத்திறன் மிக்க திறனாய்வுகளுக்கு உட்படுத்தினார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மாணவரின் நாடக அளிக்கைகள் தர நிலையில் எழுச்சி கொள்வதற்கு குழந்தை சண்முகலிங்கம், இ.முருகையன், ஏ.ஜே.,பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோரின் திறனாய்வு முயற்சிகள் முக்கியத்துவம் வாய்ந்திருந்தன. அவர்கள் அனைவரும் சம காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

ஏ.ஜே. அவர்கள் இலங்கை அவை க்காற்றுக்கழகம், யாழ். திரைப்பட வட்டம் ஆகியவற்றின் தலைவராகவும் பணிபுரிந்தார். திரைப்பட விமர்சனம் என்ற ஆழ்ந்ததுறை தமிழில் வளர்ச்சி கொள்வ தற்கும் அவரது புலமைப் பங்களிப்பு முக்கியமானது. தமிழ்ச் சூழலில் திரைப்படத் திறனாய்வு வீரவழிபாட்டுக்குள் சிக்குண்டு மலினமாகிய நிலையில் திரைப்படக் கலையினதும் திறனாய் வினதும் ஆழங்களைப் புலப்படுத்துவதில் அவரின் பங்களிப்பு முக்கியமானது. உலகத் திரைப்படங்கள் தொடர்பான புலக்காட்சியைத் தமிழ்ச்சூழலுக்குக் கொண்டு வரும் முயற்சியும் முன்னெடுக்கப்பட்டது. திரைப்படத்தை எவ்வாறு பார்ப்பது என்ற புரிதலும் அவரால் வளர்த்தெடுக்கப்பட்டது. திரைப்படங்களின் தொடர்பாடல் வலிமை மேலோங்கிய நிலையில் அவற்றின் கலைப்பெறுமானங்களை வலியுறுத்துதல் காலத்தின் தேவையாயிற்று.

தேசிய இனப்பிரச்சினை தொடர்பான தெளிவான கண்ணோட்டம் அவரிடத்தே காணப்பட்டது. மிகுந்த அறிவு நிதானத்துடன் தேசிய இனப்பிரச்சினையை நோக்கினார். அதேவேளை மார்க்சிய வாதிகள் தேசிய இனப்பிரச்சினையை அணுகிய முறைமையைத் தீவிர திறனாய்வுக்குட்படுத்தினார். காலவெளியில் ஏ.ஜே. அவர்களின் சிந்தனைகளும் எழுத்தாக்கங்களும் நீடித்த பதிவுகளாக நிமிர்ந்தெழும் புலமை வலுக் கொண்டவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடம்ப மரம்



தலவிருட்சமாகிய கடம்ப மரம்

# மாதகல் நுணைசையம்பதியில் கடம்பமர் காளையாம் கந்தவேள்

- இ. அச்சுதபாகன் பி.ஏ.



கடம்ப மரம் தடாகம், மருதநிலம் சூழ்ந்த ஆலயத்தின் பின்பறத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சோலையாக மரங்கள் நிறைந்த
ஆலயத்தின் முன்புறத் தோற்றம்

நினைவுக்கெட்டாத காலம் முதல் முருக வழிபாடு ஈழத் தமிழர்களிடம் நிலவி வந்தது. தெற்கே கதிர்காமத்தில் கந்தபுராண காலத்திலேயே முருக வழிபாடு விளங்கியது. புத்தளம், பொன்பரிப்பு, மாந்தை ஆகிய இடங்களில் முருக வழிபாட்டுத் தொல்பொருள்கள் கிடைத்தன. நல்லூர், செல்வச்சந்நிதி, உகந்தை, மாவிட்டபுரம், ஆகிய இடங்களில் முருகத் தலங்கள் உருவாகி யிருந்தன. மாவிட்டபுரத்திற்கு அணித்தாய் மாதகல், நுணைசையம்பதியிலும் கடம்பமர நிழலில் கந்த வேள்பெருமான் காலவரையறை செய்ய முடியாத காலம் முதல் இருந்து அருள் பாலிக்கிறார்.

ஆலயத்தின் மருங்கே உள்ள சம்புகோளபட்டினம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. (சம்பு) ஜம்பு என வட மொழியில் கூறப்படுவது நாவல் மரம் ஆகும். நாவலந்தீவு என்பது லெமூரியாக் கண்டத்தின் தென் நிலப்பரப்புக்குப் பழைய பெயராகும். குமரிக் கண்டம், தென்பாலிமுகம் ஆகிய பகுதிகளிலுள்ள பழம்பெரும் ஊர்ப்பெயர்கள் பல இலங்கை, இந்திய நாடுகளில் மட்டுமல்ல ஆப்கானிஸ்தான் போன்ற ஆசிய நாடுகளிலும் இந்து சமுத்திரத்தின் நாற்திசைகளிலும் உள்ள நாடுகளிலும் காணப் படும் இடப்பெயர்களாக திரிந்தும் திரியாமலும் வழங்குவதை ஆய்வாளர்கள் உறுதிப்படுத்து கின்றனர்.

அதேபோல் குமரி ஆகிய ஈழத்தின் ஒரு சிறு பாகமான இலங்கையின் வடபால் யாழ்ப் பாணத்திற்கு நாவலந்தீவு (ஜம்புத்தீவு) என்ற பெயர் இன்றும் உள்ளது. மாதகலிலுள்ள ஜம்புகோள பட்டினம் என்ற பெயரும் பழம் பெயரின் தொடர்ச்சியாகும்.

இத்துறைமுகத்தில் அசோக சக்கரவர்த்தியின் பிள்ளைகளான மகிந்தனும் சங்கமித்தையும் வெள்ளரசு மரக்கிளையுடன் வந்து இறங்கியதாக மகாவம்சம் கூறுகிறது. துறைமுகத்தின் அருகே சம்புநாதர் அல்லது சம்புகேஸ்வரர் என்ற பெயரில் பெரிய சிவாலயம் இருந்தது. கண்ணகி மதுரை மாநகரை தீக்கிரையாக்கி வஞ்சியில் தெய்வமாகி அங்கிருந்து இத்தலம் வந்து பாணாவெட்டியில் தங்கியதாகவும் செங்குட்டுவன் கண்ணகிக்கு எடுத்த விழாவில் இலங்கை மன்னன் கயவாகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பஞ்சகிருத்திய பரிவாரங்களுடன் கூடிய அறுகோண சித்திரத்தேர்



துவார பாலகர்

கலந்து கொண்டு விட்டு சம்புகோள பட்டினம் ஊடாக இலங்கை திரும்புகின்ற போது மாதகல், பாணா வெட்டியில் தான் கொண்டு வந்த கண்ணகியின் படிமத்தை ஸ்தாபித்தான் என்றும் கூறப்படுகிறது. இக்கண்ணகி கோயிலே பின்னர் புவனேஸ்வரி கோயில் ஆனது என்பர். இங்கு கண்ணகி எனும் பெயரில் தொடர்ச்சியாக அமைக்கப்பட்ட கோவில்கள் உமையவள் திருக்கோவில்களே எனவும் கருதப்படுகிறது.

மாதகல் நுணைசையில் நெய்தல் நிலச்சாரலில் வயலும் வயல்சார்ந்த மருத நிலத்தில் பழங்காலத்திலேயே கடம்ப மரம் ஒன்று நின்றது. அதன் அருகே ஏழு ஊற்றுகளை உள்ளடக்கிய பெரிய தடாகம் ஒன்றும் இருந்தது. இன்றும் அதிலேயே முருகப் பெருமான் தீர்த்தவாரி கொள்வார். அது சப்த கன்னியர்களை குறிக்கும் என்பர். முற்காலங்களில் ஏழு கன்னியர்களும் நீராடி கடம்ப மரச்சாரலில் தோன்றியதை பல அடியவர்கள் கண்டு ஆனந்தித்து உள்ளனர்.

ஆடு, மாடுகளை ஓட்டி வந்து மேய்வித்த ஓர் இளைஞன் கடம்ப மரத்தடியின் அடியிலுள்ள புற்றின் கண் ஒளிபொருந்திய வேல் தோன்ற, அவன் அஞ்சி வழிபட்டு அகன்றான். அயலாருக்கு இந்த அற்புதத்தைக் கூற, அவர்கள் வேலாயுதம் ஒன்றை ஸ்தாபித்து வணங்கினர். 'கடம்பின் கீழ் அமர்வோனாகவும் கடம்பமாலை அணிவோனாகவும்' சங்க காலத்திலேயே முருகப் பெருமான் போற்றப்பட்டார்.

ஆழ்ந்தகன்ற நுண்ணிய வடிவின் சின்னம் ஒளிபொருந்திய வேல், எமது மூலாதாரத்தில் மூண்டெழும் அனற்பொறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு ஆதாரத்திலும் ஒளிர்வதால் 'மூலக்கனலில் மூட்டும் அனற்பொறி அறுசுடர்' என தொல்காப்பியத்திற்கும் முதனூலான ஐந்திறம் கூறும். மூலமாகிய சிவப்பரஞ்சுடரின் ஐம்முகப் பொறியும் அதோமுக ஆற்றல் பொறியும் இணைந்தே அறுசுடர்ப் பேரொளி யானது. அப்பேரொளியை கடம்பின் கீழ் அமர்பவனாகவும் கடம்ப மாலையை அணி பவனாகவும் பண்டு தொட்டு தமிழ் மக்கள் வழிபட்டனர். 'கடம்பமர் நெடுவேள்' எனப் பெரும் பாணாற்றுங் படையும் 'கார்நறும் கடம்பின் தெரியற்சூர் நவை முருகன்' என புறநானூறும் 'கடம்பமர் காளை' என்றும் 'கடம்பன்' என்றும் அப்பர் பெருமான் தேவாரத்திலும் கூறிச் செல்லும் முருகப் பெருமானின் வழிபாட்டுத் தொன்மையை நுணைசையம்பதியில் அவன் எழுந்தருளி அருள்பாலிக்கும் திறனையும் அது தலவிருட்சமாக மிளிர்வதையும் எண்ணி நாம் இறும்பூதெய்தலாம்.

ஜம்புகேஸ்வரம் அந்நியர் ஆட்சி காலத்தில் அழிக்கப்பட்ட பின் அதன் கற்கள் பாணாவெட்டி அம்மன் கோவிலையும் நுணைசை முருகன் கோவிலையும் அமைக்க பயன்படுத்தப்பட்டதாயும் கூறப்படுகிறது.

நுணைசை முருகமூர்த்தியை யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் இருந்து அடியார்கள் வந்து அடிபரவி காவடி பாற்செம்பு, அங்கப்பிரதட்சணம், அடியழித்தல் ஆகிய வழிபாடுகளை நெடுநாளாக ஆற்றி வருகின்றனர். கடம்ப மரத்தின் வேற் பெருமாள் சந்நிதிக்கு முன்னே கீழ் திசை நோக்கி பேராலயம் எழுப்பப்பட்டுள்ளது. வலப்புறம் விநாயகப்பெருமான் எழுந்தருள மூலத்தானத்தில் முருகப் பெருமான் வள்ளி தெய்வானை சகிதம் வீற்றிருக்கிறார்.

உற்சவ மூர்த்திகளாக ஆறுமுகக் கடவுளும் முத்துக்குமரன் பழனியாண்டியாகவும் பெருமான் விளங்குகிறார். 2004ஆம் ஆண்டு நிலைமாடம் கொண்ட துவாரகோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது உட்பிரகாரம் முழுவதும் புதிதாக நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. தம்பமண்டபம், சிற்ப நுட்பம் நிறைந்த தூண்களை கொண்டுள்ளது. வசந்த மண்டபமும் அழகாக அமைக்கப் பட்டுள்ளது. கோபுரத்தின் முன் அமைக்கப் பட்ட அலங்கார மண்டபத்தில் தூண்கள் தோறும் முருகன் ஊர்தியான மயில்கள் அணி


சிற்பங்கள் நிறைந்த வாயிற்கதவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காவடி கந்தனுக்கு 'நுணைசையில் காவடி'



கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்
(பரம்பரை தர்மகர்த்தா)

செய்கின்றன. ஐயன் திருவுருவங்கள் தூண்கள் தோறும் வடிவுற அமைக்கப்பட்டுள்ளன. அராலியூர் ரூபன் குழுவினர் இக்கைங்கரியங்களை நிறைவேற்றியுள்ளனர்.

பரம்பரை தர்மகர்த்தா வரிசையின் கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் நிர்வகிக்க 12.02.2014 (அறவம்மாதம் 30 ஆம் நாள்) அளவெட்டி, அளகொல்லை வாமதேவ சிவாச்சாரியார் மகாலிங்கக் குருக்கள் தலைமையில் மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்றது. முருகப் பெருமானின் மகோற்சவம் சித்திரை பூரணையை தீர்த்த நாளாகக் கொண்டு பன்னிரெண்டு தினங்கள் நடைபெறுகின்றன. ஆறாம் நாள் மாம்பழத் திருவிழாவின் போது அம்மை, அப்பர், சந்திரசேகர மூர்த்தியாக எழுந்தருள இருமருங்கும் கணபதியும் கந்தவேளும் வலம் வருவார்கள்; அற்புதக் காட்சி இதுவாகும். திருத்தேரில் வழமையான உற்சவமூர்த்தியான முத்துக்குமரனும் ஆறுமுகச் செவ்வேளும் விநாயகப் பெருமானும் எழுந்தருள்வர். தேர் தீர்த்த நாட்களில் ஏராளமான காவடிகளை எடுத்துக் கொண்டு பாணாவெட்டி புவனேஸ்வரி, மாதகல் சிவன், விநாயகர் ஆலயங்களிலிருந்தும் அயற் கிராமங்களிலிருந்தும் ஆலயத்தை வந்தடையும் காட்சி உள்ளமதை உருக்க வல்லதாகும். நல்லூர் முருகனை 'அலங்காரக் கந்தன்' என்பது போல் நுணைசை முருகனை 'காவடிக் கந்தன்' என்பர். தூக்குக்காவடி, செடிற்காவடி, பாற்காவடி எனப் பலவகைக் காவடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏராளமாக வருவதால் நுணைசையில் காவடி எனப்பலரும் பேசுவது பிரசித்தம்.

ஆடியில் கதிர்காமக்கந்தன் உற்சவம் நுணைசையில்சிறப்பாகக்கொண்டாடப்படுகிறது. கார்த்திகை மீன்களுடன் தொடர்புபடுத்தப்படும் கார்த்திகேயனின் முக்கிய விரத நாள் கார்த்திகையாகும். திருகார்த்திகை உற்சவம் மற்றும் மாதக் கார்த்திகை உற்சவங்களும் நடைபெறுகின்றன. தமிழ்ப்புதுவருடம், நவ ராத்திரி, திருவெம்பாவை போன்ற உற்சவங்களும் இடம்பெறுகின்றன.

கார்த்திகை, மார்கழி மாதங்களில் வயல்வெளிகள் பச்சைப்பசேலென காட்சி தர தாமரைத்தடாகத்தில் தண்ணீர் நிறைந்திருக்க கடம்பமரம் 'வெண்பட்டால் விதானப்பட்டது' போல் கடம்ப மலர்கள் மலர்ந்து மணம்பரப்ப ஆலயச்சுற்றாடலில் ஒரு தெய்வீகப்பொலிவு அடியவர்க்கு விபரிக்க முடியாத ஓர் அனுபவ மாகும். முருகப்பெருமானின் பழைய தேர் 300 வருடங்கள் பழைமையானது. யாழ்ப்பாண வரலாற்றுப் பழைமையை திருப்பிக் காட்ட வல்லது. 2010 ஆம் ஆண்டில் காரைநகரைச் சேர்ந்த ஸ்தபதி விஸ்வப்பிரம்மஸ்ரீ ந. சிவபாலன் ஆச்சாரியார் தலைமையிலான பஞ்சகிருத்திய பரிவாரர்கள் புதிய அறுகோணச் சித்திரத்தேரை அமைத்தனர். தற்போது அத்திருத்தேரில் திரிபுர தகன பாவனையான சங்கார உற்சவமான இரதோற்சவத்திற்கு பூரண முதல்வன் மைந்தன் எழுந்தருளுகிறார்.

இவ்வாலயத்தை நோக்கி சாதுக்களும் முனிவர்களும் ஆன 'சீவன் முத்தர்கள்' வந்து ஆறுமுகன் அடி பரவி வாழ்ந்து மகாசமாதி அடைவது நெடுங்கால வழக்கமாகவுள்ளது. 40 ஆண்டுகளுக்கு முன்னர் 'காவடிச்சுவாமி' என்ற சாது இருந்து அருள் ஒளி பரப்பி சமாதி அடைந்தார். நான்கு வருடங்கட்கு முன்னர் நாரயணசுவாமி என்ற சாது வாழ்ந்து முருகபதம் பெற்றார்.

ஆலயத்தின் முன்புறம் வட கிழக்கு மூலையில் சிவன் கோயிலில் அம்மையப்பர் எழுந்தருளி அருள் பாலிக்கிறார். பங்குனி சித்திரையாம் மீன மேள மாதங்களில் கார் நறுங்கடம்பனாம் மயிலேறும் பெருமான் பெருவிழாக் காண யாழகம் எங்குமிருந்து மாதகல் நுணைசையில் அவன் அடியவர் அணி திரளுவர். தவில் நாகசுரக் கலைஞர்கள் மற்றும் இசை கலைஞர்கள் எழுப்பும் இசைமழை இங்கோர் இங்கிதமான சூழலை அடியவர் மனதில் ஏற்படுத்தும். நாமும் அவன் அடியில் சிரம் தாழ்த்தி வணங்கி அருள் பெறுவோம்.



ஏழு ஊற்றுக்கள் கொண்ட தடாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துன்பம் விண்ணிலுள்ள தேவர்க்கும் உண்டு

## எண்திசைப் பாலகர்களும் அவர்களது வாகனங்களும்

- கலாபூஷணம், வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன்

### யமன்-எருமை

யமம் என்ற சொல்லிற்கு அடக்குபவன் என்பது பொருளாகும். மனித உயிர்களை தனக்குள் அடக்குபவன் ஆதலால் யமன் என்று அழைக்கப்படுகிறான். உயிர் பிரிவது தென்திசை நோக்கியே நடைபெறுகின்றது. தெற்குத் திசை நோக்கி நமஸ்கரிப்பதும் மங்களச் செயல்கள் புரிவதும் திருவிளக்கேற்றுவதும் விலக்கப்பட வேண்டும் என்று சாஸ்திரங்கள் கூறும். இறந்தவரின் சிரசு தெற்கு திசை நோக்கி வைக்கப்படுவதும் அமங்கலத் தன்மையைக் கருதியேயாகும்.

சூரியனுக்கும் துவட்டாவின் மகளான சஞ்சிகா தேவிக்கும் பிறந்தவன் யமன். இவனுடன் வைவஸ்வதமனு, யமுனை ஆகியோரும் உடன் பிறந்தனர். சூரியனின் வெப்பத்தைத் தாங்காத சஞ்ஞிகை கதிரவனுக்குத் தெரியாமல் தனது நிழலையே பெண்ணுருவாகச் செய்து பகலவனிடம் வைத்து விட்டு தனது தாய் வீடு சென்றாள். தான் வேறு ஒருத்தி என்பதைத் தெரிவிக்காமல் சூரியனுடன் வாழ்ந்து வந்தாள். சஞ்ஞிகையின் நிழலானவள் சாயாதேவி. இவளுக்கு சாவர்ணிமனு, சனி பகவான், பத்திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என மூன்று குழந்தைகள் பிறந்தனர். தனக்குக் குழந்தைகள் பிறந்ததும் சஞ்ஞிகையின் குழந்தைகளைக் கொடுமைப் படுத்தினாள் சாயாதேவி. இதனால் கோபமுற்ற யமன் சிற்றன்னையைக் காலால் உதைத்தான். அதனால் புழுக்காலாக மாறட்டும் என்ற சாபத்தைப் பெற்றான். இதனை ஒரு பழைய பாடல் தெரிவிக்கின்றது.

மனிதனுக்கு மட்டுமல்ல விண்ணிலே உள்ள தேவர்களையும் துன்பம் தொடர்கின்றது. இந்திரனுக்கு பகக்குறி; குபேரனுக்கு ஒருகண் ஊனம்; சூரியனுக்குப் பல் இல்லை; சந்திரனுக்குக் காச நோய்; யமனுக்குப் புழுக்கால்; சனிக்குக் கால் முடம்; பிரமனுக்குத் தலை அறுபட்டது; திருமாலின் புதல்வன் மன்மதன் எரிந்து சாம்பரானான். இவ்வாறு துன்பம் தேவர்களையும் வதைக்கின்றது.

*சந்திரனுக்கு உடலூனம் தனதனுக்கோர்*
*கண் ஊனம் தருவின் நிழல்*
*இந்திரற்கோ பகற்குறியாம் இயமனுக்கோ*
*புழுக்காலாம் இரவியீன்ற*
*மைந்தனுக்கோ கால்முடமாம் வனசனுக்கோர்*
*தலைக்குறையாய் வாழ்வாரானால்*
*பந்தமுள மானிடரை விதி விடுமோ*
*ஆலவாய்ப் பதியு ளானே*

தந்தையாகிய சூரியனின் அருளால் உயிர்கள் செய்த பாவ புண்ணிய வினைப்பயனாக சுவர்க்க நரகங்களில் செலுத்தும் காலக் கடவுளானார் யமன். இவரது நகரம் சமனாவதி; வாகனம் எருமைக் கடா; ஆயுதங்கள் தண்டம், பாசம், குடாரம் சக்தி சாமளை; தூதுவர்கள் ஔதும்பரன் சம்பரன் சார்த்தூலவன் கண்டா மிருகன் முதலியோர்.

யமனின் வாகனம் எருமை. தாமத குணத்திற்கும் பெயர் போனது. அகன்ற தடித்த கொம்புகளும் கறுத்த நிறமும் தடித்த தோலும் உடையது. மிக மெதுவாகவே செல்லும். ஆனால் அதற்கு ஊக்கம் பிறந்து விட்டால் காற்றெனக் கடுகி விரையும். மதம் பிடித்த யானைக்கு ஒப்பானது; பசுவின் பாலைவிட எருமைப்பால்; அடர்த்தி மிக்கது. இதனுடைய கொம்பு, தோல் இவைகளை அலங்காரப் பொருட்கள் செய்யப்பயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குபேரன் பணத்தின் அதிபதி; மனிதன் பணத்தின் அடிமை; மற்றைய தெய்வங்களுக்கு விலங்குகள் வாகனமாய் அமைய குபேரனுக்கு பணத்தின் அடிமையான மனிதனே சுமக்கும் வாகனமாகின்றான்.

படுத்துகின்றார்கள். தாமத குணம்மிக்க இப்பிராணிக்கு சேறு சொர்க்க பூமி. சேறு நிரம்பிய குட்டைகளில் இறங்கினால் அலாதியான ஆனந்தம் பிறந்து விடும்.

நீர்நிலையை விட்டு வெளி வருவது மிகவும் அரிது. எருமையின் உருவம், குணம் கொண்ட அரக்கர்களை அரக்கியர்களை புராணங்களில் சந்திக்கலாம். மகிஷி, மகிஷாசுரன் போன்ற வர்கள் வன்மையும் வீரமும் துர்க்குணமும் படைத்தவர்களாக சித்திரிக்கப்படுகிறார்கள். காட்டெருமை மிகக் கொடிய குணம் படைத்தது.

யமனுக்கென்று தனி சந்நிதி உள்ள தலம் ஸ்ரீவாஞ்சியம் என்னும் திருவாஞ்சியம். இத்தலம் சோழ நாட்டுத் திருத்தலம்-நன்னிலம், குடவாசல் பேருந்துச் சாலையில் உள்ளது. காசிக்குச் சமமான ஆறு தலங்களில் திருவாஞ்சியமும் ஒன்று. திருவையாறு, வேதாரண்யம், மயிலாடுதுறை, திருஇடை மருதூர், திரு வெண்காடு, திருவாஞ்சியம் இவைகளே, காசிக்கு நிகரான தலங்களாகும்.

இத்தலத்தில் இறப்பவர்களுக்கு எமவாதனை கிடையாது. யமனுக்கு அமைந்துள்ள தனிச்சந்நிதியில் நான்கு கரங்களுடன் பாசம், கதை, சூலம் கொண்டு இடது காலை மடித்து வலது காலை தொங்க விட்டு பாதக் குறடுடன் அமர்ந்த நிலையில் தோற்றம் தருகிறார்.

**குபேரன் - நரவாகனம்**

வடக்கு திசைக்கு உரியவன் செல்வத்திற்கு அதிபதி; அளகை வேந்தன்; சிவபெருமானின் தோழன்; இராவணனின் சகோதரன்; இவனது தேராகிய புஷ்பக விமானத்தை இராவணன் பறித்துச் சென்றான். மனைவி சித்தரேகை, புதல்வன் நளகூபரன்; பூந்தோட்டம் சைத்திராதம்; வாகனங்கள் - குதிரை, நரன், கிளி முதலியவை.

ஆயுதம் - கட்கம்; குபேரனிடம் நவநிதிகள் உள்ளன. அவையாவன கச்சபநிதி, கற்பநிதி, சங்கநிதி, பதுமநிதி, நந்தநிதி, நீல நிதி, மகா நிதி, மகாமனு நிதி, முருந்த நிதி.

குபேரனுக்கு கிளி, குதிரை, வாகனங்களுடன் நரவாகனமும் சிறப்பாகக் கூறப்படுகின்றது. குபேரன் தேவருமல்லன்; மனிதனுமல்லன்; அரக்கனுமல்லன்; இயக்க குலத்தைச் சார்ந்தவன் யக்ஷகுலாதிபன்.

விநோதமான தோற்றம் கொண்டவன். புடைத்த பெருவயிறு, மூன்று கால்கள், எட்டுப் பற்கள், கண்ணில் மஞ்சள் படிவு, இவனது சக்தியை கௌபேரி என்று அழைப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குபேரனுக்கு ஏன் மனித வாகனம் (நர வாகனம்) அமைத்தார்கள் என்பது நமது சிந்தனைக்குச் சிறுவிருந்து. குபேரன் பணத்தின் அதிபதி; மனிதன் பணத்தின் அடிமை; மற்றைய தெய்வங்களுக்கு விலங்குகள் வாகனமாய் அமைய குபேரனுக்கு பணத்தின் அடிமையான மனிதனே சுமக்கும் வாகனமாகின்றான்.

குபேரனின் காமாலைக் கண் - காமாலைக்காரன் கண்களுக்குக் காண்பதெல்லாம் மஞ்சள் நிறம்; பணத்தாசை பிடித்தவனுக்கு அவனது ஆசையின் பிரதிபலிப்பாகவே அனைத்தும் காட்சி தருகிறது.

முப்பத்திரண்டு பற்கள் இருந்தால் உணவை நன்றாக மென்று மிருதுவாக்கி சுவைத்து உண்ணலாம். செல்வந்தனுக்கு உண்ணவாவது நேரம் கிடைக்கிறதா? இல்லையே! செல்வத்தை சேர்க்கும் நேரம் வீணாகின்றதே என்று மென்று உண்ணாமல் விழுங்கி வயிற்றை நிறைக்கிறான். உணவு, உடை இவற்றில் கால் பாகம் தான் அனுபவிக்கிறான். அதனால் பதினாறு பற்கள் தேவையில்லை, எட்டுப்பற்களே அதிகம். உழைப்பு இல்லாததால் தொப்பை பணத்தொந்தி வளர்கின்றது. இரண்டு கால்கள் இருந்தால் நடப்பதற்கு சௌகர்யம்; மூன்றாவது கால் இடையூறு விளைவிக்கும். அறவழி செல்ல செல்வம் பலருக்குத் தடையாகின்றது. குபேரனது மூன்று கால்களும் அது போலத்தான். மூன்று கால்கள் பிருங்கி, ஜுர, தேவதை முதலியோருக்கு உண்டு. செல்வத்தால் ஒருவரது குணம் மட்டுமல்ல உருவமே மாறி விடுவதால் வக்கிரரூபமாக இருக்கிறான் குபேரன்.

மனிதனை அடிமை கொண்டு வாகனமாக மாற்றி அவன் மேல் ஏறி உலாவரும் அளகைக்கு அதிபதி பிங்கலனாகிய குபேர பூபதியை வணங்குவோம்.

குபேராய வைச்ரவணாய மகாராஜாய தேநமோநமஹ

ஆலயங்களில் மகோற்சவ காலத்தில் கூறப்படும் நவசந்திப் பண்ணில் தென் திசைக்குரிய யமனின் புகழ்கூறும் வேதம் கன்னபந்தாம் என்று தொடங்குகின்றது. பண்- கௌசிகம்; தாளம்-பிருங்கிணி; வாத்யம்-மிலிதம்; நிருத்தம்-தண்டபாதம்; இராகம்-குஞ்சரி வடக்கு திசையின் அதிபதி குபேரனைப் போற்றும் வேதம்-வயகும் ஸோம; பண்-தக்க; தாளம்-கோத்டரிய; வாத்யம்-பஞ்சயா; நிருத்தம்-சந்தியா; இராகம் மாளவி- அஷ்டதிக் பாலகர்களின் திருவடி மலர்களைப் போற்றுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செட்டிக்குளத்தில் வன்னியர் குடியேற்றம்

## தமிழரின் பூர்வீக வரலாற்றை வெளிச்சத்திற்கு கொண்டு வரும் சில தொல்லியற் சான்றுகள்

பேராசிரியர் ப. புஸ்பரட்ணம் தலைவர், வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**செட்டிக்குளத்தின் வரலாற்றுச் சிறப்பு**

வடஇலங்கையின் பெருநிலப்பரப்பின் சில வட்டாரங்களில் வன்னியர் என்ற சமூகம் குடியேறி அவை வன்னியர் என்ற சிற்றரசர்களின் ஆட்சிக்கு உட்பட்ட காலத்தில் இருந்து பெருமையடைவதைக் காண முடிகிறது. இலங்கையில் வன்னி, வன்னியர் பற்றிய ஆதாரங்களை சோழர் ஆட்சிக்காலத்தில் இருந்து அறிய முடிகிறது. ஆனால் இப்பெயர் கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் இருந்து வன்னி, வன்னிப் பற்று, வன்னிச் சிற்றரசர்கள் என்ற பெயரில் வட இலங்கையிலும் தென்னிலங்கையிலும் செல்வாக்கைப் பெற்றதை பாளி சிங்கள இலக்கியங்களிலும், கோணேசர் கல்வெட்டு, மட்டக்களப்பு மான்மியம், வையாபாடல் முதலான தமிழ் இலக்கியங்களும் எடுத்துக் கூறுகின்றன. இதற்கு தமிழகத்தில் இருந்து பல்வேறு காலகட்டங்களில் பல நோக்கங்களுடன் வன்னியர் என்ற சமூகம் இலங்கையில் வந்து குடியேறியதே காரணமாகும்.

தமிழகத்தில் வன்னியர் பற்றிய குறிப்பு சங்ககாலம் தொட்டுக் காணப்படுகிறது. பதிற்றுப்பத்தில் "வன்னிப்பொதில்" என்ற குறிப்பு வருகிறது. இது வன்னி மரத்தின் கீழ் மக்கள் ஒன்று கூடியதைக் குறிக்கலாம். அல்லது வன்னியர் ஒன்று கூடிய இடத்தைக் குறிக்கலாம். தொண்டை மண்டலத்தை தலைநகராகக் கொண்டு பல்லவர் ஆட்சி செய்த காலத்தில் வன்னியர் சமூகம் பற்றிய பல குறிப்புக்கள் சங்க நூல்களில் காணப்படுகின்றன. சோழர் ஆட்சியில் படைவீரர்களுக்கு நிவேதனமாக வழங்கப்பட்ட நிலங்கள் வன்னிப் பற்று என அழைக்கப்பட்டது. மலையமான் ஆட்சியில் படைத்தலைவனுக்கு வன்னியர் நாயக்கன் என்ற பட்டம் வழங்கப்பட்டது. ஆயினும் விஜயநகர மன்னர் ஆட்சியில் வன்னியரின் படைப்பிரிவு வீழ்ச்சியடைந்ததால் அவர்கள் படைப்பிரிவில் இருந்து விலகி விவசாயத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை பண்டு தொட்டு தமிழகத்துடன் நெருங்கிய அரசியல் தொடர்புகளைக் கொண்டிருந்ததால் தமிழகத்தில் போர் நடவடிக்கையில் முக்கிய பங்கெடுத்த வன்னியர் சமகாலத்தில் இலங்கையிலும் குடியேறியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் பத்மநாதன் சோழர் ஆட்சியில் இலங்கையில் இருந்த வேளைக்காரப் படைப்பிரிவில் வன்னியர் பணியாற்றியதால் சோழர் ஆட்சியின் முடிவில் இலங்கையில் நிரந்தரமாக தங்கிய படைவீரர்களுள் வன்னியரும் அடங்கியிருக்கலாம். அதனால் அவர்கள் வாழ்ந்த இடங்கள் வன்னிப் பற்று என்ற பெயரைப் பெற்றிருக்கலாம் எனக் கருதுகிறார். பதின்மூன்றாம் நூற்றாண்டில் கலிங்கமாகன் ஆட்சியைத் தொடர்ந்து பொலநறுவை அரசு தெற்கு நோக்கி நகர்ந்த போது வடஇலங்கையில் கலிங்கமாகன், சாவகன் தலைமையில் தமிழர்களுக்கு சார்பான புதிய அரசுகள் தோற்றம் பெற்றன. இக்காலத்தில் இருந்துதான் தமிழ், சிங்கள, வன்னி, பற்றிய குறிப்புக்கள் தமிழ் சிங்கள இலக்கியங்களில் காணப்படுவதுடன் வன்னிச் சிற்றரசுகளில் சில சுதந்திரமாகவும் ஏனைய வன்னிச் சிற்றரசர்கள் பிற அரசுகளுக்கு திறை செலுத்தும் அரசுகளாகவும் இருந்த வரலாறு கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் வடஇலங்கையின் வரலாறு கூறும் சூழவம்சம், இராஜவலி, பூசாவலி முதலான பாளி, சிங்கள இலக்கியங்களில் வரும் குறிப்புக்கள் யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட அரசு தோன்ற முன்னர் வடஇலங்கையில் கலிங்கமாகன், சாவகன் அரசுகள் ஆட்சிபுரிந்ததாகக் கூறுகின்றன. அதில் வன்னிப்பெரு நிலப்பரப்பே அவர்களின் அதிக செல்வாக்கிற்கு உட்பட்டிருந்ததைக் காணமுடிகிறது. பொலநறுவையின் வீழ்ச்சியைத் தொடர்ந்தே இலங்கையில் தமிழ்,சிங்கள வன்னிச் சிற்றரசுகள் பல தோற்றம் பெற்றன. வடஇலங்கையில் இவ்வரசுகள் தோற்றம் பெற கலிங்கமாகன், சாவகன் ஆட்சி முக்கிய காரணமாக இருந்துள்ளது. அக்காலத்திலேயே செட்டிக்குளமும் வன்னிச் சிற்றரசர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட பிரதேசமாக மாறியதெனக் கூறலாம்.

வன்னியர் வரலாறு பற்றி விரிவாக ஆராய்ந்த பேராசிரியர் பத்மநாதன் வடஇலங்கையில் குறிப்பாக செட்டிக்குளத்தில் வன்னியர் குடியேற்றம், வன்னிச் சிற்றரசின் தோற்றம் தொடர்பான வரலாற்றை வையாபாடலில் இருந்து பின்வருமாறு எடுத்துக்காட்டுகிறார்:

"செயதுங்க வீரவரராஜசிங்கன் தன் மாமனது மகளைத் தான் மணம் முடிக்க விரும்புவதாக மதுரை மன்னனிடம் அறிவிக்குமாறு தூதுவரை அனுப்பினான். தூதுவர்கள் சொன்னவற்றைக் கேட்ட மதுரை மன்னன் அறுபது வாட்படை வன்னியரை அழைத்



அழிவடைந்த ஆயலத்தில் எஞ்சியிருக்கும் ஆவுடையாரும் லிங்கமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டிகுளம் கப்பாச்சி
காட்டில் ஆலயம் இருந்த இடம்



துத் தன் மகள் சமதூதியை அவர்களுடன் இலங்கைக்கு அனுப்பி வைத்தான். செயதுங்க வீரவ ராஜசிங்கனும் இளவரசியை மணம் முடித்து விட்டு அவளோடு வந்த வன்னியர்களை அடங்காப்பற்றுக்குச் சென்று அதைக் கைப்பற்றி ஆளுமாறும், ஆண்டு தோறும் யாழ்ப்பாண அரசனுக்குத் திறை செலுத்த வேண்டுமென்றும் பணித்தான்.

அடங்காப்பற்றை அடைந்ததும் வன்னியர் அதைக் கைப்பற்றுவதற்குத் தம்மிடம் போதிய படையில்லை என்பதை உணர்ந்தார்கள். எனவே, இளஞ்சிங்க மாப்பாணன், நல்லவாகுதேவன், அத்திமாப்பாணன் என்போரிடம் தூதுவர்களை அனுப்பி மதுரை, மருங்கூரர், காரைக்கால், காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, துளுவைநாடு, தொண்டை மண்டலம், வடகிரிநாடு எனுமிடங்களிலிருந்து கூட்டிவரக் கூடியவர்கள் அனைவரையும் கொண்டு வருமாறு சொல்லி அனுப்பினார்கள். இதனை அறிந்ததும் தில்லைமூவாயிரவர், திடவீரசிங்கன், குடைகாத்தான், முடிகாத்தான், நல்லவாகு, மலைநாடன், சிங்கவாகு, சோதயன், அங்கசிங்கன், கட்டைக்காலிங்கன், சொக்கநாதன், கங்கைமகன், கலைக்கோட்டுமுடியோன், வீரகச்சமணிமுடியரசன், காபாலிவீரன், சேது எனும் பதியை ஆளுகின்ற வீரம் செறிந்த தலைவன், இளஞ்சிங்க மாப்பாணன் என்போரும் பெருமைமிக்க ஆரிய வம்சத்தவரும் படகுகளிலே ஏறி யாழ்ப்பாணம் வந்தார்கள். இவர்களிலே திடவீரசிங்கன், கரிக்கட்டு மூலைப்பற்றுக்கு அதிபதியானான். இளஞ்சிங்க மாப்பாணன், இராஜசிங்க மாப்பாணன், நல்லவாகு மெய்த்தேவன், கறுத்தவாகு, சிங்கமாப்பாணன் என்போர் சான்றாரையும் வலையரையும் துரத்திவிட்டு முள்ளியவளையைக் கைப்பற்றினார்கள். நீலையினா திசையாண்டாரும் படையும் மேல்பற்றுக்கு வந்து சகரன் மகரன் என்ற வேட்டுவத் தலைவர்களைக் கொன்றுவிட்டு நாட்டையாண்டனர்.

மேற்குமூலை, கிழக்குமூலை என்பவற்றைக் கைப்பற்றிய சிங்கவாகு பொக்கா வன்னியிலிருந்தான். சுபதிட்டா என்னும் அந்தணனும் படையும் திரியாய் என்னுமிடத்திற்குச் சென்று நீலப்பணிக்கனைக் கொன்று விட்டு அந்நிலத்தை ஆண்டனர். காலிங்கன், மலையகத்தார், கன்னார், முதலியோர் கச்சாயிலே குடியிருந்தார்கள். அங்கசன் கட்டு குளத்திற்குச் சென்று வாழ்ந்தான். புகழ்மிக்க சிங்கவாகு திருகோணமலைக்குச் சென்றான். மாமுகன் வெருகல், தம்பலகாமம் என்பவற்றைக் கையாளச் சென்றான். மைடன் என்போன் கொட்டியாரத்திற்கு அதிபதியானான். ஒடுக்கன், நீலன், மைலன் என்போர் முறையே துணுக்காய், இத்திமடு, நெடுங்கேணி என்னுமிடங்களுக்குச் சென்றனர். ஆற்றில்பொருந்திய சன்மன் நொச்சிமுனையில் ஆண்டான். நாகன் புல்வெளிக்குச் செல்ல நீலையினான் வாகுதேவன் தனிக்கல்லிலிருந்தான்.

வன்னியர்கள் வந்த பின்னர் அவர்களை அடுத்து அவர்களின் மனைவிமாரும் பரிவாரங்களும் அடங்காப்பற்றை வந்தடைந்தனர். இவ்வாறு வந்தவர்களுள் மதவீர மழவராயனும் நாட்டையாண்ட மழவராயனும் மன்னனோடு யாழ்ப்பாணத்தில் இருந்தார்கள். பூபால வன்னிமையும் கோபாலரும் கட்டுக்குளத்திலும் திரியாயிலும் இனிது வாழ்ந்தனர். வில்வராயன் நல்லூரிலிருந்தான். குடைகாத்தான், கொடித்தேவன், தேவராயன், கந்தவனத்தான் என்போர் செட்டிக்குளத்தின் அதிபதிகளாயினர். உத்துங்கராயன் பனங்காமத்தில் வாழ்ந்தான்.

வையாபாடலில் வரும் வரலாற்றுச் செய்திகளில் பல மிகைப்படுத்தப்பட்ட செய்திகளாகக் காணப்படுகின்றன. ஆயினும் வன்னியர், வன்னிச் சிற்றரசுகள் பற்றி கூறிய செய்திகள் உண்மையென்பதை ஐரோப்பியர் கால ஆவணங்கள் உறுதிசெய்கின்றன. யாழ்ப்பாண அரசு காலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில வன்னிச் சிற்றரசுகள் சுதந்திரமாக ஆட்சிபுரிந்தாலும் சில அரசுகள் யாழ்ப்பாண அரசுக்கு திறைசெலுத்தியதாக இவ்வரசு தொடர்பாக எழுந்த தமிழ் இலக்கியங்கள் கூறுவதை போத்துக்கேயர், ஒல்லாந்தர் கால ஆவணங்கள் உறுதி செய்கின்றன. போத்துக்கேயரும் ஒல்லாந்தரும் இவ்வரசுகளை வெற்றி கொள்ள முயற்சிகள் எடுத்த போதும் அவை பூரணமாக வெற்றி பெறாததால் சில வன்னிச் சிற்றரசுகள் அவர்களுக்கு திறைசெலுத்திய போது சில அரசுகள் சுதந்திரமாகச் செயற்பட்டன. பிரித்தானியர் முழு இலங்கையையும் தமது மேலாதிக்கத்திற்குள் கொண்டு வந்த போதும் 1811 இல் வன்னி வெற்றி கொள்ளப்படும் வரை பண்டாரவன்னியன் வன்னியின் சுதந்திர மன்னனாகவே ஆட்சி புரிந்துள்ளான். அக்காலத்திலும் அவன் மேலாதிக்கத்திற்கு உட்பட்ட ஓர் அரச மையமாக செட்டிக்குளம் விளங்கியமை அப்பிரதேசத்திற்குரிய தனிச் சிறப்பாகும்.

**வன்னிப் பிராந்தியத்தின் வரலாற்றுப் பழைமைவாய்ந்த ஆலயங்கள்**

தமிழரின் தொன்மையான பண்பாட்டுச் சின்னங்கள் காணப்படும் இடங்களில் ஒன்றாக வன்னிப்பிராந்தியம் காணப்படுகிறது. இங்கு வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து இந்துமதம் சார்ந்த வழிபாட்டு மரபு இருந்ததை சாஸ்திரி கூழாங்குளம், உருத்திரபுரம் ஆகிய இடங்களில் கிடைத்த ஆண், பெண் சுடுமண் சிற்பங்கள் உறுதி செய்கின்றன. இவற்றை சிவன், சக்தி வழிபாட்டு சின்னங்கள் என அறிஞர்கள் கூறுகின்றனர். கி.மு.3ஆம் நூற்றாண்டில் பௌத்த மதம் இலங்கைக்குப் பரவியபோது அம்மதம் வன்னியிலும் பரவியதை இங்கு கிடைத்த 40க்கு மேற்பட்ட பிராமிக் கல்வெட்டுகள் உறுதி செய்கின்றன. அம்மதத்தை தமிழர்களும் பின்பற்றியதை பெரியபுளியங்குளத்தில் கிடைத்த பிராமிக் கல்வெட்டுகள் உறுதி செய்கின்றன. யாழ்ப்பாணத்தைக் காட்டிலும் வரலாற்றுப் பழைமை வாய்ந்த இந்து ஆலயங்கள் தோன்றுவதற்கும், அவை அழியாது பாதுகாக்கப்படுவதற்குமான சாதகமான சூழ்நிலைகள் வன்னியில் காணப்படுகின்றன. அங்கு பிரித்தானியரால் பண்டார வன்னியன் வெற்றி கொள்ளப்படும் வரை இப்பிராந்தியத்தின் பெரும் பகுதி வன்னிச் சிற்றரசர்களால் ஆட்சி செய்யப்பட்டது. இவர்கள் இந்து



இயற்கை அழகுமிக்க ஆலயம் அமைந்திருந்த சுற்றுச்சூழல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதத்தவராக இருந்ததால் இவர்களின் ஆதரவில் பல இந்துக் கோவில்கள் கட்டப்பட்டிருக்கலாம். மேலும் ஆலயங்களை அமைப்பதற்குரிய கருங்கற்களை இங்கு இலகுவாகப் பெறக்கூடியதாக இருந்துள்ளது. இங்கிருந்து கொண்டுவரப்பட்ட கருங்கற்களைக் கொண்டே யாழ்ப்பாணத்தில் பல இந்துக்கோவில்கள் அமைக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் இருந்த ஆலயங்களை போத்துக்கேயர், ஒல்லாந்தர் அழித்தது போல் வன்னிப்பிராந்தியத்தின் உட்பகுதிகளில் இருந்த ஆலயங்கள் அழிக்கப்பட வாய்ப்பிருக்கவில்லை. ஆயினும் தற்காலத்தில் அங்கு பழைமைவாய்ந்ததெனக் கருதக் கூடிய ஆலயங்களை அரிதாகவே காண முடிகிறது. ஆனால் 19ஆம், நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இலங்கையின் நிர்வாக அதிகாரிகளாகக் கடமையாற்றிய எச்.பாக், ஜே.பி.லுயிஸ், எச். நிவிட், நெவில் பௌவர், சேர் வில்லியம் துவைனம் ஆகியோர் வன்னிப்பிராந்தியம் பற்றி எழுதிய குறிப்புக்களும் நூல்களும் இப்பிராந்தியத்தில் பழைமையான பௌத்த, இந்து ஆலயங்கள் இருந்ததைக் கோடிட்டுக்காட்டுகின்றன. நெவில் என்ற பிரித்தானியர் வன்னியில் உள்ள பனங்காமம் பற்றிக் குறிப்பிடுகையில் தான் வாழ்ந்த காலத்திலும் வன்னிச் இளவரசர்களது வாசஸ்தலங்களும், வீடுகளும், கோவில்களும் இருந்ததாகவும், அவை சிதைவடைந்த நிலையில் காணப்பட்டதாகவும் குறிப்பிடுகிறார். ஒல்லாந்து கிழக்கிந்திய நிறுவன அலுவலர் ஜே. ஹவ்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு கால் நடையாகச் சென்ற போது மறிச்சுக்கட்டி என்ற இடத்தில் இருந்து ஏழரை மைல் தொலைவில் கல்லாறு என்ற இடத்தில் சைவ ஆலயம் ஒன்றைக் கண்டதாகக் குறிப்பிடுகிறார். இவ்வாலயத்தை சி.எஸ்நவரட்ணம் தக்சிணகைலாச புராணத்தில் குறிப்பிடப்படும் குதிரைமலையில் இருந்த ஐயனார் கோவில் எனக் குறிப்பிடுகிறார். ஜே. பி. லுயிஸ் தனது Manual of Vanni என்ற நூலில் இவ்வாலயத்தை அண்மைக் காலம் வரை இந்தியாவில் இருந்து வரும் யாத்திரிகர்கள் தரிசித்ததாகக் குறிப்பிடுகிறார். ஹக்நெவில் என்பவர் தனது Taprobanizn என்ற நூலில் தான் கண்டவற்றையும் பிறரது நூல்களில் இருந்து அறியப்பட்டவற்றையும் ஆதாரம் காட்டி ஓமந்தை, பெரியமாற இலுப்பை, கனகராயன் குளம், இராசேந்திரன்குளம், மதகுவைத்தகுளம், ஒட்டி சுட்டான், மகாகந்தை ஆகிய இடங்களில் இந்து பௌத்த ஆலயங்களின் அழி


ஆலயத்தில் இன்றுள்ள எச்சங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுகள், குறுநில மன்னர்களது இருக்கைகள் என்பவற்றை அடையாளம் கண்டதாகக் குறிப்பிடுகிறார். மாதோட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட 10-11 ஆம் நூற்றாண்டுகளுக்குரிய இரு சோழச் சாசனங்கள் இப்பிராந்தியத்தில் இராஜராஜேஸ்வரம், திருவிராமேஸ்வரம் என்ற பெயரில் இரு ஆலயங்கள் இருந்ததாகக் கூறுகின்றன. இவ்வாதாரங்கள் ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் பல இந்து ஆலயங்கள் வன்னியில் இருந்ததை உறுதி செய்கின்றன. ஆயினும் அக்காலத்திற்குரிய கலை மரபுடன் கூடிய ஓர் ஆலயம்தானும் இதுவரை கண்டு பிடிக்கவில்லை. இந்நிலையில் பழைய வரலாற்று நினைவுகளுடன் உள்ள ஒரு சில ஆலயங்களையே தற்போது அடையாளம் காணமுடிகிறது. அவற்றுள் செட்டிக்குளத்தில் உள்ள சந்திரசேகரர் ஆலயம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

**செட்டிக்குளம் சந்திரசேகரர் ஆலயம்**

இவ்வாலயம் செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவில் கப்பாச்சி என்ற காட்டுப் பிரதேசத்தில் அழகான ஆற்றங்கரையோரத்தில் அமைந்துள்ளது. இவ்வாலயம் தோன்றிய வரலாறு, அதன் காலம், ஆலயத்தின் சிறப்பு பற்றிய பல ஐதீகங்களும், வாய்மொழிச் செய்திகளும் அப்பிரதேச மக்களிடையே காணப்படுகின்றன. இவ்வாலயம் தோன்றி வளர்ந்த வரலாறு பற்றி வன்னியில் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆய்வு நடாத்திய ஜே.பி லுயிஸ் பின்வருமாறு கூறுகிறார்: செட்டிக்குளத்தில் கலியுககாலம் 3348இல் மதுரையில் இருந்து வந்த ஒரு செட்டியும் அவர்களுடன் வந்த முத்துக்குளிக்கும் பரதவரும் குடியமர்ந்தனர். இவர்கள் இலங்கைக் கடற்கரையில் கப்பல் உடைந்து கரையொதிங்கியவர்களாவர். மேலும் அவர் இவ்வாலயம் பற்றிக் கூறுகையில் வீரநாராயணன் செட்டி என்பவன் அடங்காப்பற்றுக்கு வந்து செட்டிக்குளத்தில் குடியேறி வெளவாலை எனும் கேணியை வெட்டிக்கட்டி சந்திரசேகர சுவாமிக்கு திருக்கோயில் ஒன்றைக் கட்டினான். கோவிலுக்கு அண்மையில் உள்ள ஒரு கிணற்றில் கோவில் செல்வத்தைப் புதைத்தார். இச்செல்வம் அனைத்தையும் காவுவதற்கு அறுபது யானைகள் தேவைப்பட்டன. இப்புதையலைக் காக்க சடாமுனி எனும் பிசாசையும் விட்டுச் சென்றார். இச்சம்பவத்தை தொடர்ந்து வீரநாராயண செட்டி இறந்தார்.

இக்கூற்றில் நம்பமுடியாத மிகையான செய்திகள் காணப்பட்டாலும் இவ்வாலயத்தின் பழைமை பற்றி 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த லுயிஸ் என்ற அறிஞர் கூறியிருப்பதன் மூலம் இது


வரலாற்றுப் பொக்கிசங்கள் புதைந்திருக்கும் கப்பாச்சி காடு

ஒரு பழைமைவாய்ந்த ஆலயம் என்பது தெரிகிறது. மேலும் இவ்வாலயம் பற்றி யாழ்ப்பாண அரசு தொடர்பாகத் தோன்றிய தமிழ் இலக்கியங்களில் காலத்தால் முந்திய வையாபாடலிலும் கூறப்பட்டிருப்பது இதன் பழைமைக்கு மேலும் ஒரு சான்றாகும்.

இவ்வாலயம் தற்போதைய குடியிருப்புக்களுக்கு பல மைல் தொலைவில் மக்கள் நடமாட்டமற்ற காட்டுப்பகுதியில் காணப்படுகிறது. ஆலயம் முழுமையாக அழிவடைந்த நிலையில் ஆலயத்தின் ஒரு சில எச்சங்களே காணப்படுகின்றன. அவற்றில் ஆவுடையும் லிங்கமும் இருப்பதைக் கொண்டு இது ஒரு சிவன் ஆலயம் என்பது தெரிகிறது. ஆயினும் குடியிருப்புகள் அற்ற காட்டுப்பகுதியில் உள்ள இவ்வாலய அழிபாடுகளில் இருந்து இவ்வாலயம் பல நூற்றூண்டுகளுக்கு முன்னரே மக்களால் கைவிடப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. இவ்வாலயம் கருங்கற்களையும் செங்கட்டிகளையும் கொண்டு அமைக்கப்பட்டதிலிருந்து இது இடைக்காலத்தில் தோன்றிய ஆலயமாகக் கருத இடமுண்டு. ஆழகான ஆற்றங்கரையோரமாக ஓர் உயர்ந்த மேட்டில் இவ்வாலயம் அமைந்திருப்பது முன்பொரு காலத்தில் செட்டிக்குளத்தின் வரலாற்றுப் பழைமையின் குறியீடாக இவ்வாலயம் இருந்துள்ளதென்பதை கோடிட்டுக் காட்டுகின்றது.

செட்டிக்குளத்தில் கப்பாச்சி என்ற இடத்தில் தொல்லியல் ஆய்வினை மேற்கொள்ளும் போது என்னுடன் இணைந்து செயற்பட்ட எமது தொல்லியல் பிரிவு ஆசிரியர்களான திருமதி ச.சசிதா, செல்வி த.சிந்துஸா, திரு.ப.கபிலன் மற்றும் கப்பாச்சி மக்களுக்கும் என் நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்திய ஜனாதிபதியாக (1962 1967) பதவி வகித்த சர்வபள்ளி டாக்டர் இராதாகிருஷ்ணன், சுப்பராம பாகவதரின் பஜனையை மெய்மறந்து இரசித்துக் கேட்கிறார்.

## மழவராயனேந்தல், சங்கீத கலாநிதி

# ஸ்ரீ சுப்பராம பாகவதர்

- பத்மா சோமகாந்தன் -

"பிரபல சங்கீத வித்துவான்கள் பெரிய நகரங்களில் மாதம் ஒரு முறை ஒன்று கூட வேண்டும். கர்நாடக சங்கீதக் கச்சேரிகள் பாரம்பரிய முறையில் சம்பிரதாயத்திற்கு முதலிடம் தந்து, கட்டணம் எதுவுமின்றி நடத்த வேண்டும். உண்மையான சங்கீதத்தின் ஸ்வரூபத்தை யாவரும் அறிந்து புராதன நிலைமைக்கும் இன்றுள்ள நிலைக்குமுள்ள குறைபாடுகள், வேறுபாடுகளை ஒப்பிட்டு, உணர்ந்து ஆவன செய்வதே குணம் மணமான சங்கீதம் செழிப்புற ஒரே வழி" எனக்கூறி கர்நாடக சங்கீதம் செழிப்புற அர்ப்பணிப்புடன் வாழ்ந்த சங்கீத கலா விற்பன்னரே ஸ்ரீ சுப்பராம பாகவதர்.

தமது தனித்துவத்தை, அடையாளத்தைப் பெற்றவர்களுடைய பெயரோடு மட்டுமல்ல பிறந்த ஊரையுமே அடை மொழியாகக் கொண்ட செம்மங்குடி ஸ்ரீநிவாச ஐயர், மதுரைமணி ஐயர், மகாராஜபுரம் விஸ்வநாதையர், பாலக்காடு மணி ஐயர் என்பவர்கள் போலவே சங்கீத கலாநிதி ஸ்ரீ சுப்பராய பாகவதரும் தான் பிறந்த கிராமமான 'மழவராயனேந்தல்' என்ற பெயரையும் தனது நாமத்துடன் இணைத்துக்கொண்டார்.

பாகவதர் அவர்கள் மிகுந்த அடக்கமானவர்கள்; கள்ளங்கபடமற்ற உள்ளம் கொண்டவர்கள்; இறைபக்தி மிக்கவர்; சங்கீதப் புலமையிலே எல்லை கடந்தவர்; சாதாரணமாகப் பேசும் போதே தெளிந்த ஞானம், தமிழ் மொழியில் ஆழ்ந்த அறிவு என்பன பளிச்சிடும். இவற்றையெல்லாம் தன்னுள்ளே சுரங்கம் போல் புதைத்து வைத்துக் கொண்டு வெறும் சாமானியனைப் போலவே உலாவருவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுவைப்போல மிக சாதுவான சுபாவம் கொண்ட ஸ்ரீ சுப்பராம பாகவதரை சங்கீதத்துறையிலுள்ள வித்துவான்கள் அனைவருமே 'மழவராயனேந்தல்' சங்கீத கலாநிதி ஐயர்வாள் 'பெரும்புலி' என அன்போடும் பயபக்தியோடும் குறிப்பிடுவர்.

அதாவது அவர்கள் பாகவதரின் இயல்பான சுபாவத்தையோ வெளித்தோற்றத்தையோ சுட்டாமல் சங்கீத சாகரத்தில் அவருக்குள்ள மேதைமை காரணமாகவே இப்படி வியந்து பாராட்டிக் கூறுவர்.

சிவகங்கை ஜமீன் கிராமமான மழவராயனேந்தலில் தமிழ் சங்கீத அறிஞர் பரம்பரையில் 1888 ஆம் ஆண்டு பிறந்தவரே ஸ்ரீ சுப்பராம ஐயர். தந்தையார் மிகப் பிரபலமான தமிழ் வித்துவான்; மாபெரும் அறிஞராக விளங்கிய ஸ்ரீ சிதம்பர பாரதியார் இவருக்கு தாய் வழிப்பாட்டனாராவார். இவர் சங்கீத ஞானத்தில் தேர்ந்தவராயிருந்தார்.

பாகவதருக்கு தமிழ், இசை, ஞானம் என்பன கைவந்த கலையாகப் பரம்பரை சார்ந்த அறிவு ஞானத்தைக் கடத்தினாலும் இயல்பாகவே இவருக்கமைந்த குரல் வளம் குறிப்பிடக்கூடிய அளவு சிறப்பாக அமையவில்லை. இருந்த போதிலும் தனக்கு இயல்பாகவே இசை மீதுள்ள பற்றினாலும் ஞானத்தினாலும் தனது குரலுக்கான பயிற்சிகளினால் செம்மையாக சாதகம் செய்து குரலைச் செப்பனிட்டுக் கொண்டார். சங்கீதத்தின் மீதிருந்த இடையறாத விருப்பினால் அக்கலையை நன்கு வளர்த்தெடுக்க வேண்டுமெனப் பெரிதும் அவாவுற்றாரேயன்றி இக்கலையைக் கொண்டு பிழைக்கவோ புகழீட்டவோ விரும்பினவரல்ல!

சாஸ்திர சம்பந்தமான சம்பிரதாயங்கள் தேய்ந்து போகாமலும் சங்கீதக் கலையிலுள்ள நுட்பங்களையும் புதிய புதிய உத்திகளையும் புகுத்தி இசையின் பரிமாணத்தை உயர்த்த வேண்டுமென்ற பேரவாக் கொண்டியங்கிய பாகவதர். இந்நோக்கத்தை முன்வைத்தே சங்கீத வித்துவான்களடங்கிய சதஸ்வொன்றை ஸ்தாபித்தார். அதிலே கச்சேரிகள், நிகழ்ச்சிகள் மேற்குறிப்பிட்டுள்ள விடயங்களுக்கு முக்கியத்துவமளித்தார். இந்நிகழ்வுகளிலே கலந்து கொண்ட பலர் தம் சந்தேகங்களை கேட்டுத்தெளிந்து, நிவர்த்தி செய்து கொண்டனர். சிலர் தமக்கு விளக்கம் போதாத விடயங்களில் பயிற்சிகள் மேற்கொண்டனர். பாகவதரும் தமது தாய்வழியாக கிடைத்த சங்கீதத்தை தமது வருமானத்துக்காகவோ பேர்புகழ் தேடவோ பயன்படுத்தக் கூடாது என்பதில் விழிப்புடன் இருந்து கலை கலைக்காகவே, இசை என்பது இசையின் வளர்ச்சிக்கும் ஆத்மார்த்தமான பரிமளிப்புக்குமாகவே என்ற உன்னதமான எண்ணத்துடன் பல நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து நடாத்தினார். இக்கலைக்கு இம்மியும் மாசு ஏற்படக் கூடாதென்பதில் கண்ணும் கருத்துமாகவே இருந்தார்.

ராகம் பாடும்போது கூட ஒவ்வொரு ராகத்திலும் தனித்துவமான சகல லட்சணங்களும் தெளிவாக வெளிப்பட வேண்டுமென்பதிலும் கீர்த்தனைகளின் தொடக்கம் நிரவல் செய்து ஸ்வரம் பாடும் முறைமை யாவும் சுத்தமாக இருக்க வேண்டுமென்பதிலும் மிகுந்த அவதானமாக இருப்பார். ராகம், தாளம், பல்லவி, ஸ்வரம் பாடுவதில் வல்லமை மிக்க இவரது இசையைப் பெரும் இசையாற்றல் மிக்கோரும் அனுபவஸ்தர்களும் கூட கண்களை மூடி, அவ்விசையில் லயித்துத் தம்மை மறந்து ரசனையில் மூழ்கியிருப்பர்.

> **பாகவதர், சங்கீதத்தை தமது வருமானத்துக்காகவோ, பேர், புகழ் தேடவோ பயன்படுத்தக் கூடாது என்பதில் விழிப்புடன் இருந்து இசைக் கலையின் வளர்ச்சிக்கு தம்மாலான அனைத்துப் பங்களிப்பினையும் வழங்கினார்.**

மனதை கவர்ந்திழுக்கும் வித்துவம் மிக்க இவரது இசை நிகழ்ச்சிகளை கலையில் மிக்க ஆர்வம் கொண்ட மைசூர் மகாராஜா, திருவாங்கூர் மகாராஜா ஆகியோர் கூடக் கேட்டு மகிழ்ந்து பாராட்டியுள்ளனர். வித்துவத்தை எல்லோர் மத்தியிலும் மேம்படச்செய்ய வேண்டுமென்பதில் அவாக்கொண்ட பாகவதர், சங்கீத நுட்பங்களை அறிய ஆர்வம் கொண்டோருக்கும், விளக்கமின்றி தட்டுத்தடுமாறுவோருக்கும் கூடத் தானாகவே உதவ முன்வந்து சரியான வழிகளைக் காண்பித்து உதவி செய்வார். இத்தகைய பெருங் குணம் கலைஞர்கள் மத்தியில் அதுவும் இசைவித்துவம் மிக்கோர் மத்தியில் காண்பதென்பது நரிக்கொம்பு தான்.

குரல்வளத்தின் குறைபாட்டை கருத்திற் கொண்ட பாகவதர், இசைக் கலையின் வளர்ச்சிக்கான தனது கச்சேரி நிகழ்வுகளைக் குறைத்துக் கொண்டு, இசை நுட்பங்களை ஏனையோருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பிப்பதிலும், தமிழில் மிகுந்த ஆற்றல் கொண்டவராதலின் சாகித்தியங்களை ஆக்குவதிலும், மிகுந்த ஈடுபாடு கொண்டார். தமிழில் பல சாகித்தியங்களை ஆக்கிய பாகவதர், சேக்கிழார் பாடிய பெரிய புராணத்தையும் கூட கீர்த்தனைகளாகப் பாடிப் பெருமை சேர்த்துள்ளார். இது உண்மையிலேயே பாராட்ட வேண்டிய விடயமாகும். அறிவு சார்ந்த சூழலில் இருந்து வந்தவராகையினால் இவற்றோடு பேரின்பக் கீர்த்தனைகளையும் பாடிப் பரவசப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சென்னையில் 1943 ஆம் ஆண்டு சங்கீத வித்வத் சபை நடாத்திய அதன் பதினேழாவது சங்கீத மாநாட்டுக்கு சங்கீத கலாநிதி ஸ்ரீ சுப்பராம பாகவதர் அவர்களே தலைமை தாங்கி வெகுசிறப்புற நடாத்தினார். அவர் உரையாற்றும் எந்த சந்தர்ப்பத்திலும் கர்நாடக சங்கீதத்திலுள்ள அதிதீவிர பற்றினாலும், "பக்தியினாலும் கர்நாடக சங்கீதம் க்ஷீணிக்காமல் வளர்ச்சி பெற்று பெருகிப் பரிமளிக்க வேண்டும் என்பது ஒன்றே என் கவலை. என்னைப் பொறுத்த வரையில் நான் சங்கீதம் அப்பியசித்தது ஆத்யமார்த்தத்திற்காகவே அன்றி அதன் மூலம் பணத்தை வாரிக் கொட்ட வேண்டும் என்ற ஆசை என்றும் இருந்ததில்லை" என்று குறிப்பிட்டார். பல இடங்களிலும் இத்தகைய அர்த்தப்படவே இவர் கூறுவதிலிருந்து இவரது கொள்கை பற்றிய உயர்ந்த மனக் கருத்து தெளிவாகின்றது.

இவருடைய காலத்திலே இசைக் கச்சேரிகளில் தெலுங்கு, சமஸ்கிருதம் போன்ற மொழிகளே முன்னிடம் வகித்தன. இவற்றையெல்லாம் நன்கு

> தமிழில் மிகுந்த ஆற்றல் கொண்டு விளங்கிய பாகவதர், தமிழில் பல சாகித்தியங்களை ஆக்கியதுடன், சேக்கிழார் பாடிய பெரிய புராணத்தையும் கூட கீர்த்தனைகளாகப் பாடிப் பெருமை சேர்த்துள்ளார்.

அவதானித்த பாகவதர் ராகம், பாவம், லயம் என்பவற்றில் சிறப்பாக விளங்கும் தமிழ்ப் பாடல்களையும் கூடப் பாட வேண்டுமென இசை வித்தகர்களிடம் கூறுவதுண்டு.

கர்நாடக சங்கீதத்தில் மிகுந்த வல்லமை மிக்கவரும் இவ்விசையை உயிருக்குயிராக நேசித்தவருமான ஸ்ரீ சுப்பராம பாகவதரைப் பற்றி கர்நாடக இசை உலகில் இன்னொரு சிகரமாக திகழ்ந்த ஸ்ரீஅரியக்குடி ராமானுஜ ஐயங்கார் அவர்கள். மழவராயனேந்தல் ஸ்ரீ சுப்பராய ஐயர் என் பால்ய நண்பன். இவர் கச்சேரிகள் பலவற்றை நான் கேட்டுச் சுவைத்தவன். இவர் ஸ்வரம் பாட ஆரம்பித்தால் அடே அப்பா! அதன் அழகைச் சொல்ல முடியாது. ராக லட்சணங்கள் முழுதும் துலங்கும் வண்ணம் பொலிந்து தள்ளிவிடுவார். அதுமட்டுமா! அபூர்வராகங்களைக் கூட மிக இலகுவாக அலசித்தள்ளி விடுவார். இப்படி ஒவ்வொன்றாகச் சொல்வதை விட அவரை "ஸ்வரப் பிரபாகம்" என்று சொல்வது தகும். பாகவதர் தீவிரமாகக் கச்சேரி செய்ய ஈடுபட்டிருப்பின் அவருடைய ஞான விஷேசம் எட்டுத்திக்கும் எட்டியிருக்கும்...." என்று இவருடைய இசை ஞானத்தைப் பற்றி வெகு சிறப்பாகச் சிலாகித்துப் பேசியுள்ளார்.

ஸ்ரீ சுப்பராம பாகவதரின் மேதைமைப் பற்றி ஸ்ரீஅரியக்குடியின் வார்த்தைகளுக்கு மேலே பேனா என்ன எழுத முடியும்?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



noolaham.org | aavanaham.org

# சிற்பங்களுக்குப் பின்னால்

- ஓவியர் பொன் வள்ளிநாயகம் -

தமிழகத்தில் தொன்மையான பாரம்பரியக் கலைகள் பல உள. உலகோர் வியக்கும் தமிழர்களின் கலைப் படைப்புகள் பல கால வெள்ளத்தால் அடித்துச் செல்லப் பட்டாலும் இன்றும் நின்று அக்கால உழைப்பின் பெருமையைப் பறை சாற்றும் சான்றுகள் நிரம்ப நம்மிடத்தே உள்ளன. இன்றைக்கும் நம் கண் முன்னே நிற்கும் வானளாவிய கோபு ரங்களும் விமானங்களும் மாடக் கட்டுமானங்களும் மதில்களும் மஹா ல்களும் எண்ணற்ற கதைகளையும் தியாகங்களையும் தமக்குள்ளே தாங்கி நிற்கின்றன. முகம் தெரியாத அந்த பழந்தமிழரின் அறிவார்ந்த முயற்சி க்கும் சிந்தனைக்கும் நாம் நிச்சயம்



தலைவணங்கக் கடமைப்பட்டிருக் கிறோம்.

பழந்தமிழ் நாடெனும் பகுதி களான சேர, சோழ, பாண்டிய பல்லவ மன்னர்களின் ஆளுகைக் குள்பட்ட பகுதிகளில் காலங்களுக் கேற்ப வடிவமைப்பில் மாற்றங்களு டன், கருத்தமைவில் மாற்றங்களுடன் சிலைகளும் கட்டடங்களும் கட்டுமா னங்களும் அமைக்கப்பட்டன. சமண, பௌத்த கால கலைச் செல்வங்களை குகை சார்ந்த இடங்களிலும் புடை ப்புச் சிற்பங்களாகவும் பாறைகள், பாறைக் கூட்டங்கள் நிரம்பிய இடங்களில் குடைவரைகளாகவும் காணப் பெறுகிறோம்.

பின்னாளில் நகர நிர்மாணிப்பு என்ற வகையில் பெரும் மதில் களையும் மாடங்களையும் கொண்ட கட்டுமானப் பாணியில் புதிய நகர ங்கள் எழுகின்றன. புதிய கோயி ல்களும் கூடத்தான். அந்த வகையில் எழும்பிய பல திருக்கோயில்களே இன்றும் எஞ்சி நின்று அவற்றின் வடிவமைப்பாலும் கலையழகாலும் நம் பெருமையைச் சுட்டிக் காட்டு கின்றன.

வெறுமனே ஒரு சிற்பத்தை அல்லது மண்டபத்தை பார்க்கிறபோது அந்தச் சிற்பம் இந்த நிலை வரை உருப்பெறுவதற்கான உழைப்பை நாம் சிந்திக்க வேண்டியதும் இருக்கிறது.

ஏனெனில் ஒரு சிலை வடிக்க வேண்டுமெனில் அந்தச் சிலைக்கான கல் தேர்வு மிக முக்கியமானது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லின் தரம் பரிசோதிக்கப்பட வேண்டும். சில இடங்களில் அந்தக் கல்லானது திருப்பணி நடக்கும் இடத்துக்கு அருகில் கிடைக்கலாம். கிடைக்காத நிலையில் சில சமயங்களில் பல காத தூரம் கூட சிற்ப பாறைகளை தேடும் பயணம் நீளும். பாறையின் தன்மை சிலைக்கு ஏற்றதா? தேரை உள்ளதா? கீறல் பாறையா? பொடித்துகளாகும் பாறையா என்றெல்லாம் பாறையைக் கண்டவுடனே கூறும் நுண்ணறிவு தேவை. புவியியல் மற்றும் மண்ணியல்சார் அறிவும் தேவை. அடுத்து, பாறை கிடைத்தாலும் பாறையைத் திருப்பணி நடக்கும் இடத்துக்கு எடுத்துச் செல்லும் வழிவகை பற்றித் திட்டமிட வேண்டும். முதலில் தேவையான அளவு பாறையைத் துளையிட்டு வெட்டி எடுக்கவே பெரும் உழைப்பு தேவை. சிறு உளி முதல் கூரை ஓலை வரை பாறைப் பகுதிக்குக் கொண்டு வரப்படல் வேண்டும். வண்டி கட்டி எடுத்து வர, சாலை போடும் வேலையைக்கூட சமயத்தில் செய்ய வேண்டியிருக்கும். பாறை கட்டு மானப் பணி நடைபெறும் இடத் துக்கு வந்தவுடன் நீள, அகல, உயரத் துக்கேற்ப கன சதுரமாகவோ, கன செவ்வகமாகவோ, உருளையாகவோ உருவமைக்கப்பட்டு தூணாகவோ, கொடுங்கையாகவோ, விதானப் பலகைகளாகவோ உருப்பெறும்.





இவ்வளவு பெரும் உழை ப்பிற்குப் பின்னரே சிலையின் அமைப்பின் வடிவம்பற்றிய செதுக்கல் தொடர்கிறது. அதற்கு மிகுந்த அனுபவ அறிவு தேவை. கீதைச் சிற் பக் கலையானது உருவங்களை உள்ளிருந்து வெளியே வரும் தொழில் நுட்ப த்தைக் கொண்டது. ஆனால், கல், மரச்சிற்பக் கலையோ உள்ளே இருக்கும் உருவங்களை வெளியே கண்டுணர்ந்து கொண்டு வர வேண்டியதாகும்.

இத்தகைய அறிவார்ந்த கலைப் பயிற்சிகள் கொண்டவர்களால் மட்டுமே செய்யப்படும். சிலைகளில் கூட சில வேளைகளில் தற்செயல் விபத்துக்களால் சிற்பம் பின்னப்பட்டு போவ துண்டு. சிதைவுற்ற சிற்ப ங்களை திருக்கோயிலின் உள்ளே வைக்க நம் முன்னோர்கள் அனுமதிப் பதில்லை. அவை மண்ணுக்குள் புதைக்கப் பட்டுவிடும். இன்றும் கூட காஞ்சி-மாமல்லபுரம் சாலைகளில் மண்ணைத் தோண் டினால், இவ்வகையான பழுத டைந்த சிற்பங்கள் நிறைய கிடைக்கின்றன.

தஞ்சையில் முழுக்க வயல் வெளிகளே நிறைந்த, பாறைகள் இல்லாத சமவெளியில் உலகமே வியக்கும் வண்ணம் இராஜராஜீசு வரம் எழுவதற்கு எவ்வளவு உழைத்திருப்பர் ! கலையின் தாகமும் தியாகமும் இடர்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜோதிட அறிவுமிக்க அக்காலத் தச்சர்களின் நுண்ணறிவையும் தியாகத்தையும் சொல்லும் காளையார் கோவிலின் தேரை அமைத்த குப்பமுத்து ஆசாரியைப் பற்றிய நாட்டார் பாடல்கள் இன்றும் கூட தமிழகத்தில் ஆசாரிப்பள்ளம், தச்சன் குடியிருப்பு, தச்சநல்லூர் என்ற ஊர்களின் பெயர்கள் அந்த தமிழ்க் கலைஞர்களின் பெருமையையும் மக்கள் மன்ற த்தில் அவர்களுக்கான நினைவலைகளையும் சொல்லிக்கொண்டு தான் இருக்கின்றன.

மதுரை மாவட்டத்தில் கொந்தகை என்ற ஊரின் மூலப் பெயர்க் காரணம், கட்டுமானத்துக்கு அடிப்படையான கொத்தனார்கள் நிரம்பிய ஊராக அது இருந்திருக்கிறது என்பதேயாகும். வழிவழி யாய் அக்காலத்தில் கட்டுமானப் பணிகளைச் செய்தவர்களுக்கு அரச நிவந்தங்களும் வழங்கப் பட்டதற்கு மேற்கூறிய ஊர்களே சாட்சிகளாகும்.



போர்களையும் ஆட்சி மாற்றங்களையும் கடந்து காலப் பெருவெளியில் கட்டியம் கூறுகின்றன. அதை மதித்துப் போற்றி ஒவ்வோர் அங்குலத் தையும் உற்று நோக்க வேண்டியிருக்கிறது. நம் கலைச் செல்வங்களான கற்றளிகளில் தாராசுரம் திருக்கோயிலில் சாதாரணமாக நாம் பார்க்கும் தூணின் ஓர் உள்ளங்கை அளவு பரப்பில் சராசரியாக 50 முதல் 60 மனித நாள்களின் உழைப்பு தேங்கியிருக்கிறது. தெரியுமா?

அனேகமாகத் தம் ஆயுள் முழுவதையுமே ஒரே கோயிலுக்கு கொடுத்த தச்சர் குடும்பங்களும் உண்டு. ஆனால், கல்வெட் டுகளிலும் செப்பே டுகளிலும் பெயர் பெறும் பெருமை எல்லாப் பொழுதுகளிலும் அவர்களுக்குக் கிட்டுவதில்லை. ஆனாலும், மனம் ஒன்றி அவர்கள் செய்த கலைக்குச் சேவையாக தஞ்சைப் பெரிய கோயில் கட்டுமானப் பணியின் போது இராஜராஜனே பெருந்தச்சனுக்கு வெற்றிலை தாம்பூலம் மடக்கிக் கொடுத்த கதை இன்றும் மக்களிடம் புழங்கி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# சதுப்பன்னி எனும் ஆரைக்கீரை

டாக்டர் (திருமதி)
**விவியன் சத்தியசீலன் -M.D (S) India,**
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

*தின்றா லுரிசைதருந் தீராப் பயித்தியத்தைப்*
*பொன்றாத நீரிழைப் புண்ணீரை - யென்றுமிந்த*
*வூராரைச் சாராம வோட்டிவிடு நாலிதழால்*
*நீராரைக் கீரையது நீ*

நீராரைக் கீரை நாவிற்கு சுவையைத் தரும். இது பித்தநோய், அதிமூத்திரம், இரத்தப் பிரமேகம் முதலியவைகளைப் போக்கும். இதை நிழலிலுலர்த்திக் குடிநீர் செய்து பால் சர்க்கரை சேர்த்து உட்கொண்டு வரலாம்.

Botanical Name – Marsilea quadrifolia
Family Name – Marsileaceae
English Name – Pepper wort
Sinhala Name – Diya embulembiliya

